# இரதோற்சவப் பெருவிழா



## தேர்த் திருவிழா உபயகாரர்
## ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் திருக்கோயில்
## இணுவில்

## 08.06.2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இரதோற்சவப் பெருவிழா

இது ஒரு வரலாற்று நிகழ்வை
ஆவணப்படுத்தும் வெளியீடாகும்.
செட்டி விநாயகரின் வழித்தோன்றல்களான
செட்டி வம்சத்தின் தேர்த் திருவிழாவும்
அதே வம்சத்தில் வந்த
அமரர் தியாகராசா (தியாகர்) நாகமுத்து அவர்கள்
தலைமையில் உருவாக்கிய பெரிய சித்திரத்தேரின் உபயமும்
பற்றிய ஒரு ஆவணப் பதிவு.
எமது எதிர்கால சந்ததியினருக்கு ஒரு வழிகாட்டலாகவும்
ஒரு ஆவணமாகவும் இவ்வெளியீடு அமைய வேண்டும்
என்பது எமது பெருவிருப்பமாகும்.

தேர்த் திருவிழா உபயகாரர்
ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் திருக்கோயில்
இணுவில்

**08.06.2024**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற் தரவு


| | | |
|---|---|---|
| தலைப்பு | - | இரதோற்சவப் பெருவிழா<br>ஸ்ரீ பரராசசேகர பிள்ளையார் திருக்கோயில்<br>இணுவில் |
| ஆசிரியர் | - | திரு. நாகமுத்து கணேசு |
| பதிப்புரிமை | - | திரு. நாகமுத்து கணேசு<br>திரு. பொன்னுத்துரை கருணாகரன்<br>திரு. சின்னராசா செந்தில்ராஜன் |
| வெளியீடு | - | 08.06.2024<br>தேர்த் திருவிழா உபயகாரர்<br>ஸ்ரீ பரராசசேகர பிள்ளையார் திருக்கோயில்<br>இணுவில் |
| பிரதிகள் | - | 500 |
| பக்கங்கள் | - | 88 |
| அளவு | - | 9.75' x 7.25' |
| சர்வதேச நியம நூல் இல. (ISBN) | - | 978 - 624 - 93707 - 0 - 8 |
| அச்சகம் | - | கீதா பப்ளிகேசன்,<br>கொழும்பு -13<br>தொ.பே.இல. : 0777-350088 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | ஆசிச் செய்தி | 04 |
| 02. | வாழ்த்துச் செய்தி | 05 |
| 02. | வெளியீட்டுரை | 06 |
| 03. | இணுவில் கிராமத்தின் சிறப்பும் ஆலயச் சிறப்பும் | 08 |
| 04. | வம்ச வரலாறு | 19 |
| 05. | தேர் உபயம் பற்றிய சில குறிப்புகள் | 29 |
| 07. | தேர்த் திருவிழாவின் மகிமை | 32 |
| 08. | மூன்று தேரேறி வந்து அருள் பாலிக்கும் மும்மூர்த்திகள் | 33 |
| 09. | இரதோற்சவம் | 34 |
| 10. | பஞ்சமுக விநாயகர் | 37 |
| 11. | ஸ்ரீ பஞ்சமுக விநாயகர் திருவூஞ்சல் | 40 |
| 12. | மூத்தோர் வம்சம் – செட்டிவம்சம் – தகப்பன்வழி | 44 |
| 13. | கொஞ்சு தமிழ் இணுவையில் கோயில் கொண்டவன் | 46 |
| **பின் இணைப்புக்கள்** | | |
| 12. | தேரின் மகிமை | 49 |
| 13. | தேர்த் திருவிழா | 50 |
| 14. | தேரின் மகத்துவம் | 58 |
| 15. | தேர்த் திருவிழா இறைவனுக்குரிய ராஜோபசாரம் | 61 |
| 16. | இரதோற்சவம் | 64 |
| 17. | சிவாலயக்கிரியை மரபில் ரதப்பிரதிஷ்டை | 66 |
| 18. | நல்விழாப் பொலிவு காணல் | 73 |
| 19. | விநாயக வழிபாட்டில் பஞ்சமுக விநாயகரின் திருவுருவத் தத்துவம் | 77 |
| 20. | பரராஜசேகர மன்னனுக்கும் ஆலயத்துக்கும் உள்ள தொடர்பு | 83 |
| 21. | இணுவில் ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையாரின் அருட்பொலிவும் மகத்துவமும் | 86 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

திருவருள்மிகு

**இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில்**

**THIRUVARUL MIKU**

**INUVIL SRI PARARAJASEGARA PILLAYAR THIRUKOVIL**

Inuvil South,
Inuvil.

சிவஸ்ரீ சோ.அரவிந்தக்குருக்கள்
பதிவு இலக்கம் : HA/5/JA/486

இணுவில் தெற்கு,
இணுவில்.

26/5/2024

மகோற்சவப் பெருவிழாவில் பத்தாம் நாள் இரதோற்சவத் திருவிழா நடைபெறும். இத்திருவிழாவை செட்டி விநாயகரின் வழித்தோன்றல்களே செய்து வருகின்றனர். அதே வம்சத்தில் வந்த அமரர் தியாகராஜா (தியாகர்) நாகமுத்து அவர்கள் உருவாக்கிய பெரிய சித்திரத்தேர் பற்றிய ஒரு ஆவணப் பதிவை அவரின் வழித்தோன்றல்கள் வெளியிடுகின்றனர் அவர்களுக்கு விநாயகப்பெருமானின் அருளாசி வேண்டிப் பிரார்த்தித்து நல்லாசி வழங்குகின்றேன்

சுபம்.

சிவஸ்ரீ. சோ. அரவிந்தக்குருக்கள்.
இணுவில்.

## ஆசிச் செய்தி

மகோற்சவப் பெருவிழாவில் பத்தாம் நாள் இரதோற்சவத் திருவிழா நடைபெறும். இத்திருவிழாவை செட்டி விநாயகரின் வழித்தோன்றல்களே செய்து வருகின்றனர். அதே வம்சத்தில் வந்த அமரர் தியாகராசா (தியாகர்) நாகமுத்து அவர்கள் உருவாக்கிய பெரிய சித்திரத்தேர் பற்றிய ஒரு ஆவணப் பதிவை அவரின் வழித்தோன்றல்கள் வெளியிடுகின்றனர். அவர்களுக்கு விநாயகப் பெருமானின் அருளாசி வேண்டிப் பிரார்த்தித்து நல்லாசி வழங்குகின்றேன்.

சுபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இறை அருளால் வாழ்த்துச் செய்தி

எல்லாம் வல்ல ஸ்ரீபரராசசேகரப் பிள்ளையார் கோயிலில் நடைபெறும் தேர்த்திருவிழா சம்மந்தமாக அவரது செட்டி வம்சத்தினால் வெளியிடப்படும் ஆவணப் பொக்கிசமான இந்நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

செட்டி வம்சம் எனப்படும் வினாயகர் வழித்தோன்றலான இப்பெருவம்சம் இத்திருவிழாவினை சிறப்பாக கொண்டாடி வருகின்றது. இவ் வம்சத்தில் உள்ளோர் தேர்த்திருவிழாவில் ஒவ்வொரு பொறுப்புக்களையும் ஏற்று சிறப்பாகச் செய்து வருவது இறை அருளே ஆகும்.

இந்த வகையில் திருவிழாவின் அபிஷேகங்களை வம்சத்தில் வந்த திரு தியாகராசா (தியாகர்) அவரின் பின்பு அவரது மக்களாகிய அமரர்களான நாகமுத்து, செல்லப்பா, கதிர்காமர் (அப்பையா) ஆகியோரும் இவர்களின் பின்பு இவர்கள் வழி வந்த சந்ததியினரும் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

இத் திருவிழாவை தலைமையேற்று அமரர் தியாகராசா (தியாகர்) நாகமுத்துவும் பின்னர் அவரது மகனான அமரர் தம்பிராசா சிறிது காலமும் அதன் பின்னர் அமரர் பொன்னுத்துரை ஆசிரியரும் பின்னர் அமரர் சின்னராசா ஆசிரியரும் தற்போது இளைய மகன் பொறியியலாளர் திரு. கணேசுவும் வம்சத்தாருடன் சேர்ந்து சிறப்பாகச் செய்து வருவது போற்றுதற்குரியதாகும்.

இப்படியாக ஆண்டவனின் திருவருட் கடாட்சத்தினால் தேர்த்திருவிழாவானது பக்தி உணர்வுடனும், பணிவுடனும் செட்டி வம்சத்தினரால் செய்யப்பட்டு வருவதால் அவர்கள் தொண்டு சிறக்க எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவதுடன் ஒற்றுமையாகவும் வாழ இறையருள் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**வைத்திலிங்கம் ஸ்ரீஸ்கந்தவரோதயன்**
ஓய்வு பெற்ற வங்கியாளர்
தியாகராசா (தியாகர்) செல்லப்பா அவர்களின் மகள்வழிப் பேரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வெளியீட்டுரை

விநாயகப் பெருமான் எமது சமய மரபில் முதல் வழிபாட்டுக்குரிய தெய்வம். அவரைத் தொழுது வணங்கினால் வாழ்வு மிகுந்து வரும். அத்தகைய அருட்சிறப்புக்கள் மிக்க தெய்வமாகிய எங்கள் குல தெய்வத்திற்கு பன்னிருநாள் விழா எடுத்து பக்தர் குழாம் குதூ கலிக்க மகோற்சவப் பெருவிழா நடைபெறுகின்றது.

பத்தாம் நாள் சிறப்பாக இரதோற்சவத் திருவிழா இடம்பெறும். இவ்விழாவை செட்டி விநாயகரின் வழித்தோன்றல்களே செய்து வருகின்றோம். செட்டி தியாகராசா (தியாகர்) அவர்களின் மகன் நாகமுத்து ஒரு வர்த்தக, வணிக விவசாயி. குலதெய்வமாகிய விநாயகரை வழிபட்டே எக்கருமத்தையும் ஆரம்பிப்பார். பிள்ளையாரின் அனுக்கிரகத்தாலும், அவரின் பெருமுயற்சியாலும் பெரிய சித்திரத்தேர் உருப்பெற்றது.

பராபவ வருடம் சித்திரைத் திங்கள் இருபத்தோராம் நாள் (வைகாசித் மாதம் நான்காம் திகதி ஆயிரத்து தொளாயிரத்து அறுபத்து ஆறாம் ஆண்டு - 04.05.1966) இதன் வெள்ளோட்டம் நடைபெற்றது. இந்தத் தேரை சிற்பாசாரியார் திரு.கந்தசாமி அவர்கள் அமைத்திருந்தார். அதே ஆண்டு மகோற்சவத்தின் போது எம்பெருமான் புதிய சித்திரத்தேரில் பவனி வந்தார். தியாகராசா (தியாகர்) நாகமுத்து அமரத்துவம் அடைந்தார்.

என்னுடைய மூத்த சகோதரர்கள் பொறுப்பினை ஒவ்வொருவராக ஏற்றனர். மூத்தமகன் நாகமுத்து தம்பிராசா மிக இளவயதில் அமரத்துவம் அடைந்த நிலையில் பொறுப்பும் வழிகாட்டலும் நாகமுத்து பொன்னுத்துரை அவர்களிடம் வந்து சேர்ந்தது. பலகாலம் அவரின் தலைமைத்துவத்தில் உற்சவம் (2013 வரை) அமைந்தது.

அடுத்ததாக அமரர் நாகமுத்து சின்னராசா அவர்கள் (2018) வரை பொறுப்பேற்றார். என்னுடைய மூத்த சகோதரர்கள் ஒவ்வொருவராக அமரத்துவம் அடைந்த நிலையில் தற்பொழுது என்னுடன் அவர்களுடைய ஆண் பிள்ளைகளும் செட்டி வம்சத்தவர்களும் இணைந்து இரதோற்சவப் பெருவிழாவைச் செய்து வருகின்றோம்.

செட்டி வம்சத் தேர்த்திருவிழா பின்வரும் விதிமுறைகளுக்கு ஏற்ப நடைபெறுகின்றது. அதிகாலையில் மூலவருக்கான அபிசேகம், பூசை நடைபெறுகின்றன. (அமரர் தியாகர், செல்லப்பா சந்ததியினர்)

முருகப் பெருமானுக்குரிய அபிஷேகத்தில் அமரர் தியாகராசா (தியாகர்) கதிர்காமர் (அப்பையார்) சந்ததியினர் பங்கேற்கிறார்கள்.

இதனைத் தொடர்ந்து தேர் உபயத்திற்கான மூலவர் அபிஷேகம், வசந்த மண்டபப் பூசை, கொடித்தம்பப் பூசை, யாக மண்டபப் பூசை ஆகிய கிரியைகளில் நானும் அமரர் தியாகர் நாகமுத்துவின் ஆண்வழிப் பேரன்களும் இணைந்து சங்கற்பம் செய்கிறோம். தொடர்ந்து எம்பெருமான் தேருக்கு எழுந்தருளுவார்.

அதன் பின்னர் தேரடியில் வைத்து செட்டி வம்ச உப உபயகாரர்களுக்கு பவித்திரம் அணிவித்து சங்கற்பம் செய்யப்படும். அதன் பின்னர் திருவீதியுலா ஆரம்பமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்பெருமான் பவனி வருவதற்காக ஒரு சித்திரத்தேர் வேலுப்பிள்ளை பொன்னம்பலம் என்பவர் தலைமையில் செல்லையா கந்தசாமி என்ற சிற்பக் கலைஞரால் உருவாக்கப்பட்டு 1975இல் ஓடத்தொடங்கியது. மூன்றாவதாக சண்டேஸ்வரருக்கும் ஒரு சித்திரத்தேர் வேலுப்பிள்ளை செல்லத்துரை (சாத்திரியார்) என்பவர் தலைமையில் உருவாக்கப்பட்டு 1976இல் வெள்ளோட்டம் நடைபெற்றது. இம்மூன்று சித்திரத் தேர்களிலும் இன்றுவரை மும்மூர்த்திகள் எழுந்தருளி திருவீதியுலா வருவது அற்புதக் காட்சியாகும்.

அந்தணப் பெருமக்களுக்கும், ஆசாரியார்களுக்கும், இறைவனுக்கு சேவகம் செய்பவர்களுக்கும் தேரடியில் வீதியுலா ஆரம்பமாகும் முன்னர் தானம் வழங்கிச் சிறப்புச் செய்தல், தவில், நாதஸ்வரக் கச்சேரி ஆகிய மங்கள வாத்தியங்களுக்கான பொறுப்பினையும் செட்டி வம்ச உப உபயகாரர்கள் ஏற்று நடாத்துகிறார்கள்.

தேர் உற்சவ மூர்த்திகளை பச்சை சாத்தி இருப்பிடத்திற்கு எழுந்தருளச் செய்தல், பஞ்சமுக அர்ச்சனை என்பவற்றையும் நாங்கள் பொறுப்பேற்று நாடாத்துகிள்றோம்.

இன்று போல் என்றென்றும் எமது வம்சாவழியினரால் தேர்த் திருவிழாவானது சிறப்புடன் முன்னெடுக்கப்பட எல்லாம் வல்ல பரராசசேகரப் பிள்ளையாரின் பூரண திருவருள் எங்கள் அனைவருக்கும் கிடைக்கவேண்டும். ஊர் செழிக்க வேண்டும். நாடு சுபீட்சம் அடையவேண்டும் எனப் பிரார்த்தித்து விநாயகரின் திருப்பாதங்களுக்கு இவ்வெளியீட்டைச் சமர்ப்பிக்கின்றோம்.

சுபம்.

இவ்வண்ணம்

**திரு.நாகமுத்து கணேசு**
B.Sc (Eng), C.Eng, P.G.D.Agri Eng., M.I.C.E., F.I.E(S.L)
பணிப்பாளர் (ஓய்வுநிலை)
விவசாயத் திணைக்களம் – பேராதனை.

**அமரர் தியாகராசா (தியாகர்) நாகமுத்துவின் மகன்வழிப் பேரன்கள்**

| | | |
|---|---|---|
| **அமரர் நா.தம்பிராசா** | அமரர் த.ஶ்ரீஸ்கந்தராசா | திரு.த.செல்வக்குமரன் |
| **அமரர் நா.பொன்னுத்துரை** | திரு.பொ.பாஸ்கரன் | திரு.பொ.சுபாஸ்கரன் |
| | திரு.பொ.திவாகரன் | திரு. பொ.கருணாகரன் |
| | திரு.பொ. ஐங்கரன் | திரு.பொ.சுதாகரன் |
| | திரு.பொ.சிவகரன் | |
| **அமரர் நா.சின்னராசா** | திரு.சி.செந்தில்ராஜன் | திரு.சி.நாகராஜன் |
| | திரு.சி.தணிகைராஜன் | |
| **திரு.நா. கணேசு** | திரு.க.கிரிதரன் | அமரர். க.பகிரதன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இணுவில் கிராமத்தின் சிறப்பும் ஆலயச் சிறப்பும்

## இணுவில் கிராமத்தின் சிறப்பு

பண்டுதொட்டுப் பைந்தமிழும் பழுத்த சைவநெறியும் செழித்து வளர்ந்த இடங்களுள் இணுவில் கிராமமும் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய இடமாகும். இக்கிராமத்தினை இணையிலி (ஒப்பற்ற கிராமம்) இணுவை. இணுவையம்பதி என்றும் வழங்குவர். இங்கு மூங்கில் அடர்த்தியாக இருந்தமையினாலும் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

தமிழரசர் காலத்தில் திருக்கோவலூ ரிலிருந்து
வருவிக்கப்பட்ட பேராயிரமுடையான் என்னும்
வேளாளனும் அவரது பரிவாரத்தினரும்
இணுவிலிற் குடியமர்த்தப்பட்டனர்.

என யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது.

யாழ்ப்பாண நகரத்திலிருந்து சுமார் நான்கு மைல் தூரத்தில் இக்கிராமம் இருக்கின்றது. இங்கு இசையும், கலையும், தமிழும், சைவமும், பண்பாட்டு கலாசார விழுமியங்களும் வளர்ந்து வருகின்றது. இப்பிரதேசம் பல நிறைவான ஆலயங்களைக் கொண்டு கற்றவர்களையும், கற்றபடி ஒழுகுபவர்களையும் கொண்டுள்ளதுடன் ஏனைய பிரதேச மக்களுக்கு எடுத்துக் காட்டாகவும் விளங்குகின்றது.

முந்நாளில் இவ்வூரைச் சேர்ந்தவர்கள் பலதுறைகளிலும் சிறந்து விளங்கியுள்ளனர். இம்மண்ணை அலங்கரித்த சான்றோர்கள் வரிசையில் சின்னத்தம்பிப் புலவர், அம்பிகைபாகப் புலவர், நடராசையர், இயற்றமிழாசிரியர் அ.க.வைத்திலிங்கப்பிள்ளை முதலிய புராணிகர்களும் தவத்திரு வடிவேல் சுவாமிகள் போன்ற நல்லறிஞர்களும் தமிழும் சைவமும் துலங்கத் தம்மாலான பணிகளை ஆற்றிய பெருமை இவ்வூருக்கு என்றும் உண்டு.

ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்த இலக்கிய நாடகத்துறைகளில் புகழ்பெற்றவர் இணுவில் சின்னத்தம்பிப் புலவர். இவரியற்றிய நூல்களில் ஒன்றான பஞ்ச வன்னத்தூது புதுவழியிற் பாடப்பெற்று புதுமை செய்யப்பட்டுள்ளது. அக்காலத்தில் புலவர்களுக்கு 'இரும்புக் கடலை'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நிலவிய தணிகைப்புராணத்தை தமிழ் வாணர்களுக்கு அறிமுகம் செய்து வைத்ததோடு அதற்குப் பாடஞ் சொல்வதிலும் சிறந்து விளங்கியுள்ளார் அம்பிகைபாகர் புலவர். சிவஞான சித்தியாருக்கு ஞானப்பிரகாசர் எழுதிய உரையை 1890இல் அச்சிட்டு வெளியிட்ட பெருமை ஸ்ரீமத் க.நடராசையர் அவர்களையே சாரும். அவர் 1870 களில் நாவலரது சைவப்பிரகாச வித்தியாசாலையில் சித்தாந்த பாடங்களுக்குப் பாடங் கற்பித்தவர். மேலும் நாடகத்துறையில் அக்காலத்தில் கொடிகட்டிப் பறந்தவர்கள் பலர் இணுவை மண்ணைச் சேர்ந்தவர்களே.

கலைத் துறையில் கரகங்கள், கூத்துக்கள், கும்மிகள், கோலாட்டங்கள், காவடிகள், இசைநாடகங்கள், நர்த்தனங்கள் இங்கு செழித்து வளர்ந்தன. இசைத்துறையிலே தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி மீட்டுபவர்கள் தமிழ் நாடறியப் புகழ் பெற்றுள்ளார்கள். இவர்களில் வி.மாசிலாமணி, வி.தட்சணாமூர்த்தி, வி.உருத்திராபதி போன்ற கலைஞர்களும் முக்கியம் பெறுகின்றனர். பாடல்கள் புனைவதில் பேராற்றல் படைத்த இயல் இசை வாரிதி ந.வீரமணி ஐயர் வரை வாழ்ந்து புகழ் ஈட்டிய பெருமையும் இம்மண்ணிற்கு உண்டு.

'இணுவில் ஒருகாலத்தில் யோககுரு சுவாமிகளின் தலைமையில் சற்சங்கம் ஒன்று காலந்தோறும் கூடிக் கருத்துப் பரிமாற்றிக் கொண்டனர். வேதாந்தம் சித்தாந்தம் ஆகிய போக்குகள் அலசியாராயப் பெற்றன. சைவசமய வழிபாடு, இறைபணி என்பவற்றில் இணுவில் வழிகாட்டும் ஊராக விளங்கியது. மேலைநாட்டார் வருகையின் போது இணுவில் மக்களில் ஒருவரைக்கூட மதம்மாற்ற முடியாது போய்விட்டது. அன்றேல் புகழ் பெற்ற வைத்தியப் பெரியாராகிய டாக்டர் கேர் என்னும் பெண்மணி "இலந்தை முள்ளை நிமிர்த்தினாலும் இணுவிலாரை மதம் மாற்ற முடியாது" என்று கூறியதாக க.சி.குலரத்தினம் அவர்கள் கூறியிருப்பது சான்றாக அமைகின்றது.

இணுவை சமயநெறிக்குத் தனித் தன்மையுண்டு. இக்கிராமத்துக்கு அணிகலங்களாக விளங்குகின்ற கோயில்கள் கிராமிய சமுதாய வாழ்வோடும் விளைநிலங்களாகும் உற்பத்தி முறையோடும் நெருங்கிய தொடர்பு கொண்டு பன்பதை நெறியாகிக் கோயில்கள் மக்களின் பக்தி அறிவு நிலைக்களங்களாக உருவாகின. புகையிலையும், மரவள்ளியும் விளையும் செம்பாட்டு மண்ணினைக் கொண்ட தோட்டங்கள் இக்கிராமத்தினைச் சுற்றி காட்சியளிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் ஈழத்தில் சைவத் தமிழ்ப் பாரம்பரியத்தில் மிகவும் முதன்மைப் புள்ளியாக உள்ள கிராமம். திரும்பும் திசையெல்லாம் வானுயரக் கோபுரங்களைக் கொண்ட ஆலயங்களால் சூழப்பெற்ற கிராமம். விஸ்வநாதர் ஆலயம் (காரைக்கால் சிவன் கோயில், சிவகாமி அம்மன், இளந்தாரி கோயில், மஞ்சத்தடி அருணகிரி ஆலயம், குருக்கள் சிவன் கோயில், பரமானந்தவல்லி அம்பாள் ஆலயம், பரராசசேகரப் பிள்ளையார் ஆலயம், கந்தசுவாமி கோயில், செகராசசேகரப் பிள்ளையார் கோயில், வட்டுவினிப் பிள்ளையார், கண்ணகை பரமேஸ்வரி அம்பாள், கருணாகரப் பிள்ளையார் கோயில், கற்பகவிநாயகர் கோயில், பல்லப்பை பைரவர், ஞானலிங்கேஸ்வரர் கோயில், ஆஞ்சநேயர் கோயில், திருப்பதி விஷ்ணு கோயில் மற்றும் பல சிறிய பைரவர் கோயில்கள் இக்கிராமத்திற்கு தெய்வீகப் பொலிவைத் தந்து நிற்கின்றன.

எப்போதும் வேத ஒலிகளும், மங்கள இசையும் காற்றில் தவழும் கிராமம். இதனால் தான் வள்ளல் சேர்.பொன்.இராமநாதன் தன் எண்ணத்தில் உதித்த பெண்களுக்கான பாடசாலையை இணுவில் கிராமத்தில் அமைத்தார் என்பது வரலாற்று உண்மை. மேலும் அன்றைய சைவப்பிரகாச வித்தியாசாலை இன்றைய இணுவில் இந்துக் கல்லூரி ஆகும். இப்பாடசாலை முதலிற் திண்ணைப் பள்ளியாக இருந்து பின்னர் 1872இல் அரசாங்க உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக மாற்றப்பட்டது. இப்பாடசாலையில் பயின்றவர்கள் அறிஞர்களாகவும், முன்னோடிகளாகவும், பல்துறை விற்பன்னர்களாகவும் திகழ்ந்தனர். இன்னும் புகழ்பெற்று விளங்குகின்றனர். அப்பாக்குட்டி பள்ளிக்கூடம் என்று அழைக்கப்பட்ட அன்றைய சைவமகாஜனா வித்தியாசாலை இன்றைய இணுவில் மத்திய கல்லூரியாக மிளிர்கிறது. அமெரிக்க மிசனெறியினர்களால் நிறுவப்பட்டதே ஆரம்பப் பாடசாலையான அமெரிக்கமிசன் தமிழ் பள்ளியாகும். இதனை சீனிப்புளியடி என அழைக்கப்பட்டது. இதைவிட இக்கிராமத்தின் மத்தியில் மிகப்பெரிய நிலப்பரப்பில் மகப்பேறு வைத்தியசாலை ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் பல இலட்சம் மகப்பேறு இடம்பெற்று வரலாற்று நிகழ்வாக இன்றும் பலரது பிறப்பு அத்தாட்சி பத்திரத்தில் பிறந்த இடம் இணுவில் எனப் பதிவாகி இருக்கின்றது.

இணுவில் எல்லைக் கிராமங்களாக உடுவில் உரும்பிராய், கோண்டாவில், தாவடி மற்றும் சுதுமலை என்பன அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவமும் தமிழும் தனது இரு கண்களாக கொண்டு வாழ்ந்து புகழீட்டிய நல்லூர் ஆறுமுகநாவலரின் வழிநின்று வாழ்ந்தனர். இன்றும் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். ஆறுமுக நாவலர் அவர்கள் கனவு மெய்ப்பிக்கப்பட்ட ஒரு கிராமமாக இணுவையம்பதி திகழ்கின்றதென்றால் அது மிகையல்ல.

## பரராசசேகரப் பிள்ளையார் கோயில்

ஏரார் இணுவில் எந்தை கணபதியின்
தாரார் திருவடியைத் தாழ் பணிந்தோர் – ஆரா
அமிழ்தம் போல் வாழ்வர் அருட்செல்வம் சூழ்வர்
தமிழ் உள்ளளவும் தழைத்து.

– திருமுருக கிருபானந்த வாரியார்

யாழ்ப்பாண இராட்சிய வரலாற்றில் பரராசசேகர மன்னனின் ஆட்சிக்காலம் என்பது மிக முக்கியமானதாகும். இக்கோயிலின் வரலாறு என்பது ஆரியச் சக்கரவர்த்திகள் அரசாண்ட காலத்திலிருந்து தொடங்குகின்றது. ஆரியச் சக்கரவர்த்திகள் வரிசையில் பரராசசேகர மன்னன் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு நல்லாட்சி செய்து வந்தான். நல்லூரிலே சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த ஆரியச் சக்கரவர்த்திகள் சிறந்த நுலாசிரியர்களாகவும் விளங்கியிருக்கின்றனர். இவர்களின் காலத்தில் அறிஞர்களும், கலைஞர்களும், புலவர்களும் வாழ்ந்து சிறப்பித்த ஊர்களில் இணுவில் முக்கிய இடமாகத் திகழ்ந்திருக்கின்றது. இத்தகைய சிறப்புகள் பொருந்திய இணுவில் கிராமத்தில் பரராசசேகரப் பிள்ளையார் கோயில் அமைந்திருக்கின்றது. ஆரியச் சக்கரவர்த்திகள் வழிவந்த தமிழ் அரசனின் பெயரைத் தாங்கி நிற்கும் இக்கோயில் சுமார் 600 ஆண்டுகள் வரையான வரலாற்றுச் சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. பரராசசேகரப் பிள்ளையார் கோயில் எனும் பெயர் ஏற்படுவதற்கு காரணம் பரராசசேகர மன்னனின் செல்வாக்கையும் ஆதரவையும் பெற்றதனால் ஏற்பட்டிருக்கலாம் என்று இணுவில் தொல்பொருள் ஆய்வாளர் திரு. பொன்னையா செல்வரட்ணம் அவர்கள் கூறுகின்றார். “இணுவிலும் ஆரியச் சக்கரவர்த்தி காலத்தில் ஏற்பட்ட வேளாளர் குடியேற்றத்துடன் தொடர்புடையதாகக் காணப்படுவதால் இவ்வாலயம் இவர்கள் ஆட்சியின் ஆரம்பக் கட்டத்தில் அமைக்கப் பட்டிருக்கலாம்” என்று வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்கள் தனது யாழ்ப்பாண இராட்சியம் எனும் நூலில் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நியர் ஆட்சிக் காலத்தில் பல கோயில்கள் இடிக்கப்பட்டன. இக்கோயிலையும் இடிக்க முற்பட்டனர். இக்கோயிலைப் பாதுகாக்க எண்ணிய மக்கள் இங்குள்ள பிள்ளையாரை நெற்குவியலின் மத்தியில் மறைத்து வைத்ததுடன் 'மடம்' என்றும் கூறிவந்திருக்கின்றனர். இதனால் இக்கோயிலை மடத்துவாசல் பிள்ளையார் கோயில் என்றும் வழங்கப்படுகின்றது.

ஒல்லாந்தரிடம் இருந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தில் மடத்துவாசல் பிள்ளையார் கோயில் மீண்டும் பரராசசேகரப் பிள்ளையார் கோயிலாக மாற்றங்காணத் தொடங்கியது. 1800களில் சுண்ணாம்புக் கற்களால் விமானம், கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்பன அமைக்கப்பட்டன. 1800 களில் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றமைக்குப் பல சான்றுகள் இருக்கின்றன. இவ்வாலயத்தின் முதலாவது பாலஸ்தாபனம் 1928இல் செய்யப்பட்டிருக்கிறது. பல திருப்பணி வேலைகள் நடைபெற்று 1939 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடந்தேறியது. தொடர்ந்து காலத்திற்குக் காலம் ஆகம விதிப்படி கும்பாபிஷேகம் நடைபெற்று வருகிறது.

**விழா உபயகாரர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூலவர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பஞ்சமுக விநாயகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்திரத் தேர் வெள்ளோட்டம்
பிரபவ வருஷம் சித்திரைத்திங்கள் 21ஆம் நாள் (04-05-1966)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்திரத் தேர் வெள்ளோட்டம்
பராபவ வருஷம் சித்திரைத்திங்கள் 21ஆம் நாள் (04-05-1966)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் தியாகராசா (தியாகர்) நாகமுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்கள் நாகமுத்து முத்துப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வம்சவரலாறு

## அமரர் நாகமுத்து தம்பிராசா



இவர் நாகமுத்து அவர்களின் மூத்த மைந்தன். தன் தந்தையினுடைய விவசாயத் தொழிலுக்குப் பக்கபலமாக விளங்கியவர். ஆரம்பக்கல்வியை இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் பெற்றவர். கல்வியை இடையில் நிறுத்தி இறுதிவரை விவசாயத் தொழிலாலேயே வருமானத்தைப் பெற்றவர்.

இணுவில் மேற்கைச் சேர்ந்த குமாரு – பார்வதி தம்பதிகளின் புதல்வி புனிதவதியை திருமணம் செய்தார். தனது ஐம்பத்தைந்தாவது வயதிலேயே இவ்வுலகை விட்டு நீங்கி விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் நாகமுத்து பொன்னுத்துரை



இவர் நாகமுத்து அவர்களின் இரண்டாவது மைந்தன். தந்தையாரின் விவசாயத் தொழிலுக்கு உதவியாக இருந்தவர். சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி கற்று (இன்றைய இந்துக் கல்லூரி) ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார். இலங்கையின் பல இடங்களிலும் சிறப்புற பணியாற்றிய இவர் நிறைவாக தான் கற்ற பாடசாலையிலேயே உப அதிபராக சிறந்த பணியாற்றி ஓய்வு பெற்றார். மேலும் தான் பணிபுரிந்த இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையின் உயர்வுக்கு பல வழிகளிலும் முன்னின்றார். பாடசாலைக்கான விளையாட்டுத் திடல் அமைப்பதற்கான காணி ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு கடுமையாக உழைத்து வெற்றிபெற வழிசமைத்தவர். மிகுந்த சமயப்பற்றும், ஆசாரமும் கொண்டவர். இணுவில் பிரதேசத்தில் வாழும் பெரும்பாலானவர்கள் அன்னாரிடம் கல்வி கற்றவர்கள். பலருக்கு வித்தியாரம்பம் செய்து வைத்து கல்வி அறிவை ஆரம்பித்து வைத்தவர். ஆலயத்தில் நடைபெறும் புராண படிப்புக்களிலும், பெருங்கதைப் படிப்பிலும் கைதேர்ந்தவராக விளங்கியவர்.

இவர் திருநெல்வேலியைச் சேர்ந்த செல்லையா – சுபத்திரை தம்பதிகளின் புதல்வி செல்லம்மாவை (பரமேஸ்வரி) திருமணஞ்செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் நாகமுத்து சின்னராசா



அமரர் நாகமுத்துவின் மூன்றாவது புதல்வராக பிறந்தவர். தந்தையின் விவசாயத் தொழிலுக்கு உதவியாக இருந்தவர். இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்விகற்று பல பிரதேசங்களில் ஆசிரியப் பணியை சிறப்புடன் செய்தவர்.

இவருடைய ஆசிரிய சேவையில் முத்தாய்ப்பாக விளங்கும் பணியாக குறிப்பிட்டுச் சொல்லக்கூடியது உடையார்கட்டு பாடசாலை தொடர்பான சம்பவமாகும். முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார்கட்டு எனும் பிரதேசத்தில் அப்பகுதி மக்களின் கல்வித் தாகத்தைத் தீர்த்து வைக்க 01.04.1974இல் பாடசாலை ஒன்றைத் தாபித்து அதன் முதலாவது அதிபராகப் பொறுப்பேற்றார்.

உடையார் கட்டு அ.த.க பாடசாலை எனும் திருநாமம் சூட்டி அன்று ஆரம்பித்த பாடசாலை இன்று மு/உடையார்கட்டு மகா வித்தியாலயம் என்னும் பெயருடன் சிறந்து விளங்குகிறது. நிறைவாக தான் கற்ற பாடசாலையிலேயே தன் பணியைப் பூர்த்திசெய்தார்.

இணுவில் தெற்கைச் சேர்ந்த நாராயணபிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் புதல்வி அன்னலட்சுமியை (ஆசிரியை) திருமணம் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் நேசம்மா நல்லதம்பி




அமரர் நாகமுத்துவிற்கு ஒரே ஒரு பெண் பிள்ளையாகவும் நான்கு ஆண் சகோதரர்களுக்கு அருமைச் சகோதரியாகவும் விளங்கியவர். கல்விப் புலமைமிக்க வித்துவான் வேலாயுதம் நல்லதம்பி என்பவரைத் திருமணம் செய்து சீரும் சிறப்புமாக வாழ்ந்தவர்.

இணுவிலைச் சேர்ந்த மூதறிஞர் வேலாயுதம் ஆச்சிப்பிள்ளையின் புத்திரராகப் பிறந்தவர் நல்லதம்பி. சைவப்பிரகாச வித்தியாசாலையில் உயர்கல்வி பெற்று சித்தியடைந்தார். தன் தந்தையின் விவசாய முயற்சியில் முன்னின்று உழைத்தவர். ஆசிரியராக பல இடங்களில் பணியாற்றியவர். பாரதநாடு சென்று இலக்கண, இலக்கியங்களைக் கற்று வித்துவான் பட்டம் பெற்றவர். நிறைவாக ஏழாலை தெற்கு சைவத்தமிழ்க் கலவன் பாடசாலையில் அதிபராக பணி புரிந்தார். சுன்னாகம் ப.நோ.கூட்டுறவு சங்கத்தின் தலைவராகவும் சமூகசேவை புரிந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு.நாகமுத்து கணேசு



குடும்பத்தின் இளைய புதல்வர். இவர் கல்வியிலும், உத்தியோகத்திலும் சிறந்து விளங்கியவர். ஆரம்பக்கல்வியை இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், மேற்படிப்பை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், கற்று இணுவைக் கிராமத்தின் முதல் பொறியியல் பட்டதாரி என்ற பெருமையைப் பெற்றவர்.


கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு தெரிவான இவர் பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்த பின்னர் கண்டியிலேயே பணிபுரிந்து பல பட்டங்களையும், பதவிகளையும் பெற்றவர். நிறைவாக விவசாயப் பணிப்பாளராக உயர் பதவி வகித்து ஓய்வு பெற்றவர்.

வைத்திலிங்கம் கம்பனியின் முகாமையாளராக விளங்கிய நவாலியைச் சேர்ந்த முதலியார் மகேசன் (J.P)- பொன்மணி தம்பதிகளின் புதல்வியாகிய லலிதாம்பிகையை (கலைப்பட்டதாரி, பேராதனைப் பல்கலைக் கழகம்) திருமணம் செய்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணுவில் ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோயில் 04.09.1972 இல் நடைபெற்ற இராஜகோபுர கும்பாபிஷேக மலரிலிருந்து பெறப்பட்டது.



புதிதாக அமைந்துள்ள இந்த இரதமானது, செட்டியார் என்ற வம்சத்திலுதித்த திரு. தியாகர் நாகமுத்து அவர்கள் தலைமையில் சந்ததியார் அனைவரும் சேர்ந்து உபகரித்துத் திருவருளினால் பூர்த்தி செய்யப்பெற்றது.

இத்தேரில் திருநெல்வேலியைச் சேர்ந்த திரு க. கந்தசாமி ஆசாரியாரின் கைவண்ணத்தைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
மகா கணபதி துணை



## இணுவில் ஸ்ரீபரராசசேகரப்பிள்ளையார் கோயில்
## பிரகாரமூர்த்தியாகிய முருகப் பெருமானின்
# புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம்

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கு — முருவாக்கு
மாதலால் வானோரு மானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தங்கை.

மெய்ஞ்ஞானபூதிச் செல்வர்களாகிய சைவப் பெருமக்களே!

சுமார் 600 ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்தை அரசாண்ட தமிழ்ப் பெருமன்னனாகிய ஸ்ரீ பரராசசேகர மன்னனவர்களால் ஸ்தாபிக்கப்பெற்று பூசிக்கப்பெற்றுவரும் சர்வ ஆன்மகோடிகட்கும் என்றும் அருள்பாலித்துக் கொண்டே இங்கு கோயில் கொண்டெழுந்தருளியிருப்பவரும், பிரணவ சொரூபியாய்த் திகழ்பவருமாகிய ஸ்ரீவிநாயகப் பெருமான், பிரகாரமூர்த்தியாகிய முருகனுக்கு ஓர் சித்திரத்தேர் உருவாக்கியுள்ளார்.

இந்த அலங்கார வேலைப்பாடமைந்த இரதம் யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த பிரபல சிற்பி செல்லையா கந்தசாமியின் தலைமையில் திருவருள் நலத்தால் அமைந்தது என்பதையும் தெரிவிப்பதில் மனமகிழ்வெய்துகிறோம். அந்த நற்கலைக்கு இலக்கணமாக அமைந்த

## சித்திரத்தேரின் வெள்ளோட்டம்

நிகழும் இராக்ஷத ஆண்டு வைகாசி மீ 27-ந் உ (10-6-75) செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் திருவருளால் நிகழவுள்ளது.

அவ்வமயம் யாழ். அரசாங்க உதவி அதிபரும், சிவநெறிக் காவலருமாகிய

### திரு. தி. முருகேசம்பிள்ளை அவர்கள்

தலைமைதாங்கி, முன்னின்று திருவடியார்களோடு சேர்ந்து திருவடத்தையும் தொட்டிழுப்பார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் சிவதொண்டனும் முன்னாள் காணி நீர்ப்பாசன மந்திரியின் காரியதரிசியுமான

### திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்கள்

ஆசி கூறுவார்கள்.

விழாவின்போது இணுவையூர் நாதஸ்வர தவில் வித்துவான்களும் கலந்து சிறப்பிப்பார்கள்.

சித்பாசிரியருக்கு பட்டமளிக்கும் வைபவமும் இடம்பெறும்.

அவ்வமயம் அடியார்கள் அனைவரும் சமுகமளித்து வெள்ளோட்ட நிகழ்ச்சிகளிற் கலந்து இறைபருளை நினைந்து தியானித்து மகிழ்வுற்று இஷ்டசித்திகளையும் பெறும் வண்ணம் வேண்டுகிறோம்.

இணுவில்
30-5-75

இங்ஙனம்
விநாயகர் அடியார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



இணுவில்

## ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில்

# தேர்த் திருவிழா விஞ்ஞாபனம்

விநாயக அடியார்களே!

நிகழும் பிங்கள வருடம் வைகாசித் திங்கள் 8-ம் நாள் **(21-5-77)** சனிக்கிழமை காலை 6 மணியளவில் விசேட அபிடேக ஆராதனைகளுடன் ஷெ விழா ஆரம்பமாகும்.

மு. ப. 10-00 மணியளவில் புதிதாய் அமைந்த

***பஞ்சமுக விநாயகர்***

தேர்மீது இவர்ந்து வீதி வலம்வரும் காட்சி நடைபெறும்.

தேர் இருப்பிடம் வந்ததும் நண்பகல் 12-00 மணியளவில் அன்னதானமும் இடம்பெறும்.

பி. ப. 4-30 மணியளவில் விநாயகப் பெருமான் தேரை விட்டிறங்கி இளைப்பாறு மண்டபத்தில் விசேட பூசைகள் நடைபெறும்.

பின்பு இரவு 7-00 மணியளவில் தேரடித் திருவிழாவும் நடைபெறும். அத்தருணம் அடியார்கள் யாவரும் வந்து விநாயகர் அருள்பெற்று உய்யுமாறு வேண்டுகிறோம்.

**விசேட மேளக்கச்சேரிகள்**

| | | | |
|---|---|---|---|
| S. சிவகரன் | செற் | — | இணுவில் |
| N. R. கோவிந்தசாமி | ,, | — | இணுவில் |
| N. K. பத்மநாதன் | ,, | — | அளவெட்டி |

இணுவில்
*18-5-77*


இங்ஙனம்
ஷெ விழா உபயகாரர்

நாமகள் அச்சகம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# குருக்கள் பரம்பரை



சிவஸ்ரீ சி. சதாசிவக்குருக்கள்



சிவஸ்ரீ சிவஞானக்குருக்கள்



சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்த குருக்கள்



சிவஸ்ரீ சோமாஸ்கந்த அரவிந்த குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சமுக விநாயகர்
# திருவுருவச் சிலை வார்ப்பு அங்குரார்ப்பணம்
# 1976



**1976 ஆம் ஆண்டு பஞ்சமுக விநாயகர் திருவுருவச் சிலை செய்வதற்கான அங்குரார்ப்பண நிகழ்வில் திரு.சிவப்பிரகாசம் ஸ்ரீ பத்மநாபன், சோமசுந்தரம் ஆச்சாரி, பண்டிதர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் கலந்துகொண்ட காட்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## திரு.நாகமுத்து கணேசு அவர்களின்

# தேர் உபயம் பற்றிய சில குறிப்புகள்

ஈழத்திருநாட்டில் சைவத்தமிழ்ப் பண்பாட்டை நெறி தவறாது பேணிப் பாதுகாத்துப் பெருமை பெற்று விளங்கும் கிராமங்களுள் ஒன்றாகத் திகழ்வது இணுவில் என்னும் கிராமம். சைவப் பாரம்பரியத்தைப் பேணி பாதுகாத்து வருவதோடு, தமிழ்ப் பண்பாட்டையும் வளர்த்து வருகிறார்கள். இக்கிராமத்து பெருங்குடி மக்கள். விவசாயத்தைப் பொன்னே போல் போற்றும் பண்பு படைத்தவர்கள். இக்கிராமத்துக்கு தெய்வீகப் பொலிவைத் தருவது இங்கு காணப்படும் சிவகாமி அம்மன் ஆலயம், காரைக்கால் சிவன் கோவில், இளந்தாரி கோவில், மஞ்சத்தடி அருணகிரி ஆலயம், குருக்கள் சிவன்கோவில், பரமானந்தவல்லி அம்பாள் ஆலயம், பரராசசேகரப்பிள்ளையார் ஆலயம், உலகப் பெருமஞ்சத்தை தன்னகத்தே கொண்ட இணுவில் கந்தசுவாமி ஆலயம், செகராசசேகரப் பிள்ளையார் கோவில், வட்டுவினிப் பிள்ளையார், கண்ணகா பரமேஸ்வரி அம்பாள், கருணாகரப் பிள்ளையார் கோவில், கற்பக விநாயகர், பல்லப்பை வைரவர், ஞானலிங்கேஸ்வரர் கோயில், ஆஞ்சநேயர் கோயில், திருப்பதி விஷ்ணு கோயில் மற்றும் சிறிய வைரவ கோவில்கள் ஆகும். நுண்கலைகளின் இருப்பிடமாகவும், பாவலர், நாவலர்களையும் கர்நாடக இசைவல்லுனர்களையும் சித்தர்களையும், ஞானிகளையும் மிருதங்க தவில் மேதைகளையும், நாடகத்துறை அறிஞர்களையும் தந்து முத்தமிழ் வளர்க்கும் புண்ணிய பூமியும் இதுவாகும்.

வைத்திய கலாநிதி ஹேர் (Dr.Kerr) அம்மையாரால் 1898இல் ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் மருத்துவ மனை (Mc.Leod) இணுவில் ஆஸ்பத்திரி என்றும் அழைக்கப்படும். இம்மருத்துவமனை அயல் கிராமங்களுக்கும் அரும் பெருஞ் சேவையாற்றி வந்தது. மேலும் பல ஆயுள்வேத, சித்த வைத்தியர்களையும் தந்தது இக்கிராமம். இராமநாதன் மகளிர் கல்லூரி, நுண்கலைக் கல்லூரி, சைவப்பிரகாச வித்தியாசாலையாக ஆரம்பித்த இன்றைய இணுவில் இந்துக் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி, அமெரிக்க மிஷன் பாடசாலை ஆகியனவும் சைவத்தமிழ் பாரம்பரியங்களை வளர்த்து வருகின்றன.

இணுவையம்பதி யாழ்ப்பாணத்துக் குளத்தங்கரை நாகரிகத்திற்குப் பெயர் போன குடியிருப்புகளில் ஒன்று. இங்கு மூங்கில் அடர்த்தியாக இருந்ததால் இணுவில் என்ற பெயரைப் பெற்றது. தமிழரசர் காலத்தில் திருக்கோவலூரில் இருந்து வருவிக்கப்பட்ட பேராயிரமுடையான் என்ற வேளாளனும் அவனது பரிவாரமும் இணுவிலில் குடியமர்த்தப்பட்டனர். அப்போது தலைமைப் பேரூர்களான பன்னிரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரூர்களில் இணுவிலும் ஒன்றாக திகழ்ந்திருக்கின்றது. கிறிஸ்துவுக்குப் பின் பன்னிரண்டாம் நூற்றாண்டில் இருந்து பதினேழாம் நூற்றாண்டு வரை யாழ்ப்பாணத்தில் ஆட்சி புரிந்த ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திலே அரசர்களின் ஆதரவும் அபிமானத்தைப் பெற்ற தலமாக விளங்கியது பரராசசேகரப் பிள்ளையார் திருக்கோவில் ஆகும். நல்லூரை இராசதானியாகக் கொண்டு சிங்கை ஆரியர் சக்கரவர்த்திகள் மரபில் பதினோராவது தலைமுறையைச் சேர்ந்தவன் பரராசசேகர மன்னன் ஆவான்.

சிலப்பதிகாரம் சேர மன்னன் செங்குட்டுவனின் சகோதரனான இளங் கோவடிகளால் தமிழில் எழுதப்பட்ட ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று தமிழ் பேசும் சேரநாடு மலையாளம் பேசும் கேரள மாநிலமாக பிற்காலத்தில் மாறியது. கடல் சூழ் இலங்கைக் கஜபாகு மன்னன் சிறப்பு விருந்தினராக பூம்புகார் விழாவில் கலந்து கொண்டு கண்டி நடனத்தையும் பெரஹறாவையும் பத்தினி கண்ணகி வணக்கத்தையும் இலங்கைக்கு கொண்டு வந்ததாக சிலப்பதிகாரம் கூறுகிறது. அம்பலாங்கொடை பலப்பிட்டியாவில் ஆடப்படும் கோல நடனம், இணுவிலில் ஆடப்படும் கிழவிக்கூத்து (முகமூடி அணிந்து ஆடப்படுபவை) கேரளத்தில் இருந்து வந்தவை. சிலப்பதிகாரம் கூறும் பதினெட்டு நடனங்களில் ஒன்றாகும்.

பெருங்குடி வணிகன் விநாயகர் செட்டியார் கேரளத்திற்கு யாழ்ப்பாணம் புகையிலை ஏற்றுமதி செய்யும் வியாபாரி. கேரளத்தில் இருந்து காங்கேசன் துறை வழியாக இணுவிலில் குடியேறியதாக கூறப்படுகிறது. இவர் புகையில் உற்பத்தியாளரும் வர்த்தக வணிக விவசாயியுமான கறுவல் வைத்தியரின் மூதாதையருடன் சம்பந்தம் கலந்து, செட்டியார் சின்னத்தம்பியை மகனாகப் பெற்றார். செட்டியார் சின்னத்தம்பிக்கு பதினாறு பிள்ளைகள். செட்டி தம்பையா நூறு தொழிலாளரை வைத்து சுருட்டுக் கைத்தொழில் செய்பவர். செட்டி தியாகர் யாழ்ப்பாணம் பெரிய கடையில் புகையிலை வியாபாரி. கடுக்கண் செட்டியார் கோட் அணிந்து வில்லு வண்டியிலே செல்வார். அம்பலம் மன்னாரில் ஐம்பது, அறுபது பேர் வேலைசெய்யும் அம்பலம் கடை நடத்துனர். இவரை அண்டி அறுபது குடும்பங்கள் வாழ்ந்தன. தகப்பன் அருணாசலம் மன்னாரில் திருக்கேதீஸ்வரம் பாலனம் செய்தவர். பத்து குதிரைப் பட்டியும் வைத்திருந்தார். முன்னர் நகரசபைத் தலைவர் வைத்தியலிங்கம் செட்டி தியாகரின் பெறா மகள் முத்துவின் மகன். மன்னார் வியாபாரி. பளை மாமி வள்ளியம்மையின் பெறா மகன் கிருஷ்ணபிள்ளை தெல்லிப்பளை மகாஜன கல்லூரி அதிபர் (Principal) ஆக பணியாற்றினார்.

போர்த்துக்கேயர் காலத்தில் கோவிலை உடைக்க வந்தபோது மடம் என்று சொல்லித் தப்பித்துக் கொண்டனர். இதனால் மடத்துவாசல் பிள்ளையார் எனவும் பரராசசேகரப்பிள்ளையார் ஆலயம் பெயர்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டி விநாயகரின் வழித்தோன்றல்களே பரராசசேகரப்பிள்ளையாரின் தேர்த்திருவிழாவை செய்து வந்தனர். செட்டி தியாகராசாவின் மகன் நாகமுத்து ஒரு வர்த்தக, வணிக விவசாயி. புகையிலை கொள்வனவு செய்வதோடு மற்ற விவசாயிகளின் புகையிலையை உற்பத்தி செய்து, பதப்படுத்தி விற்பவர். குலதெய்வம் விநாயகரை வழிபடாது எக்கருமமும் செய்வதில்லை. அன்னாரின் முயற்சியாலே பரராஜசேகரப் பிள்ளையாருடைய சித்திரத்தேர்ப் பணி உருப்பெற்றது.

1961ஆம் ஆண்டுக்குப் பின் கீழே சகடை அமைப்பைக் கொண்ட கட்டுத்தேர் மேற்பகுதி சிவப்பு, வெள்ளைச் சேலையால் அழகுப்படுத்தப்பட்டு அந்தத் தேரிலே விநாயகப் பெருமான் வீதியுலா வந்தார். புதிதாக ஒரு சித்திரத்தேர் உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் அமரர் நாகமுத்து அவர்களின் சிந்தனையில் பிள்ளையாரின் அனுக்கிரகத்தால் உதித்தது. 1966ஆம் ஆண்டு இத்திருப்பணி நிறைவு பெற்று பராபவ வருஷம் சித்திரை திங்கள் 21ஆம் நாள் (04.05.1966) தேர் வெள்ளோட்டம் விடப்பட்டது. இந்தத் தேரை சிற்பாசாரியார் திரு.கந்தசாமி அவர்கள் அமைத்திருந்தார். இதே ஆண்டு மகோற்சவத்தின் போது (24.06.1966) எம்பெருமான் புதிய சித்திரத்தேரில் பவனி வந்தார்.

உயர்குடி செம்மல் நாகமுத்துவும், முத்துப்பிள்ளையும் பெற்றெடுத்த பிள்ளைகள் அமரர் தம்பிராசா , அமரர் பொன்னுத்துரை, அமரர் சின்னராசா, அமரர் நேசம்மா நல்லதம்பி, திரு.கணேசு ஆகியோர் ஆவர். தற்பொழுது திரு.கணேசு அவர்களின் தலைமையில் செட்டி வம்சத்தவர்கள் ஒன்று கூடி இந்த விழாவை சிறப்பாகச் செய்து வருகின்றனர்.

1976ஆம் ஆண்டு காலப்பகுதியில் பஞ்சமுக விநாயகரின் திருவுருவம் ஆலய முன்றலிலே உலோகங்களை உருக்கி உருவாக்கப் பட்டது. சுமார் தொள்ளாயிரம் இறாத்தல் பருமனைக் கொண்ட ஐந்து திருமுகங்களும் பத்து திருக்கரங்களும் கொண்ட அழகிய தெய்வாம்சம் கொண்ட பஞ்சமுக விநாயகரை சோமசுந்தரம் ஆசாரியார் உருவாக்கினார். அமரர் சிவப்பிரகாசம் பத்மநாபன் அவர்கள் தான் இத்தெய்வ திருப்பணியை பொறுப்பேற்றுச் செய்தார்.

தேர்த்திருவிழாவின் போது ராஜமூர்த்தமான பஞ்சமுக விநாயகர் தேரில் வீதியுலா வரும் காட்சி மிகவும் அற்புதமானது, ஆனந்தமானது.



நாகமுத்து கணேசு
B.Sc (Eng), C.Eng, P.G.D.Agri Eng., M.I.C.E., F.I.E(S.L)
பணிப்பாளர் (ஓய்வுநிலை)
விவசாயத் திணைக்களம் – பேராதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தேர்த் திருவிழாவின் மகிமை

நாகமுத்து பொன்னுத்துரை
ஆசிரியர் – இணுவில் தெற்கு

சிவாலயங்கள் இல்லாத ஊர் எவ்வித செல்வங்களால் நிறைந்திருப்பினும் திரு அமைந்த ஊரன்று. இந்த உண்மையை திருநாவுக்கரசு நாயனார் தமது ஆறாந் திருமுறையிலே,

"திருக்கோயிலில்லாத திருவிலூரும்...
... அவையெல்லாம் ஊரல்ல அடவிகாடே"

என்னும் தேவாரம் மூலம் விளக்கிக் கூறுகின்றார். இந்த உண்மைக்கு ஏற்ப எமது கிராமம் அமைந்துள்ளது. எமது ஊரிலே ஆலயங்கள் அமைந்து இருப்பினும் இவ்விநாயகர் ஆலயம் பரராசசேகர மன்னனால் ஸ்தாபிக்கப்பட்டு பரராசசேகரப் பிள்ளையார் கோயில் என்றும் மடத்துவாசற் பிள்ளையார் கோயில் என்றும் அழைக்கப்பட்டு வருகிறது. இவ்வாலயத்தில் பல்லாண்டு காலமாக உற்சவம் என்பது உத்தமயாகம் எனவும் மேலான பஞ்ச கிருத்தியம் எனவும் சிருஷ்டி மார்க்கத்தைக் குறிப்பது எனவும் போக மோஷங்களைக் கொடுப்பது எனவும், பொருள்படும் இவ்வுற்சவத்தில் பிரதான விழாக்கள் கொடியேற்றம், மஞ்சம், கைலாயவாகனம், சப்பரம், தேர், தீர்த்தம் என்பனவாகும்.

இவ்விழாக்களில் இரதோற்சவமானது திரிபுர சங்காரத்து உண்மைக் காட்சியை உணர்த்தி ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் கெடுத்தற்காக நடத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. பசுபதியாகிய இறைவன் சூரியசந்திரர்களை உருள்களாகவும், சரம், அசரம் ஆகிய பொருள்கள் ஒவ்வொரு உறுப்புகளாகவும் நான்கு வேதங்கள் குதிரைகளாகவும் அமைந்த தேரில் மேருவை வில்லாகவும், விஷ்ணுவை அம்பாகவும் அக்கினியை அம்பின் கூர்வாயாகவும் கொண்டு எழுந்தருளி பிரமாவாகிய சாரதி பிரணவமாகிய சவுக்கு கொண்டு செலுத்த திரிபுரத்தைத் தமது திருப்புன்முறுவலால் எரித்தருளினர். இதனையே திருஞானசம்பந்தர்,

" விருது குன்றமா மேருவில் நாண் அரவா அனல் எரி"

என்று தம் திருக்கேதீச்சரப் பதிகத்திற் குறிப்பிடுகிறார். இவ்வாலயத்தில் விநாயகர், முருகன், சண்டேசுரர் ஆகிய மும்மூர்த்திகளுக்கும் மூன்று தேர்கள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. விநாயகர் தேரில் பஞ்சமுக விநாயகரே எழுந்தருள்வார்.

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாற் தொடங்கினர்க்கு
வார்த்தை சொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" – தாயுமானவர்

நன்றி - கும்பாபிஷேக மலர் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மூன்று தேரேறி வந்து அருள் பாலிக்கும் மும்மூர்த்திகள்

**நாகமுத்து பொன்னுத்துரை**
ஓய்வுபெற்ற உப அதிபர்

இயற்கை அழகினாலும் கல்விச்செல்வம், பொருட்செல்வம் என்பவற்றாலும் சிறந்து விளங்குவது இணுவைப்பதியாம். இத்தென் இணுவைப் பதியில் குலதெய்வமாக வணங்கி வழிபட்டு வந்தவர் அவ்வூரைச் சார்ந்த தியாகர் நாகமுத்து என்னும் பெரியவராவார். இவர் சைவ வேளாண் மரபைச் சேர்ந்தவர் ஆவார். இவர் தனது தகப்பனார் செய்து வந்த தேர்த்திருவிழாவை தவறாது செய்துவருகின்ற காலத்திலே ஒருநாள் புதிய சித்திரத்தேரைச் செய்யவேண்டும் என்னும் புதியதொரு எண்ணம் அவர் மனதிலே உதயமானது. அதன் பிரகாரம் 1965 ஆம் ஆண்டில் புதிய சித்திரத்தேர் ஒன்று உருவாகத் தொடங்கியது. இவருக்கு இவர் சந்ததியாரும் பொருள் உதவி செய்தார்கள். இந்தச் சித்திரத்தேரை திருநெல்வேலியைச் சேர்ந்த செல்லையா கந்தசாமி என்ற (ஸ்ரீ வாணன் சிற்பாலய) சிற்பக் கலைஞர் நல்ல முறையிலே செய்து முடித்தார். அதன் பிரகாரம் 04.05.1966 ஆம் ஆண்டில் இதன் வெள்ளோட்டம் நடைபெற்றது. அடுத்த மாதம் நடைபெற்ற உற்சவ காலத்தில் முதன்முறையாக இத்தேரில் விநாயகப்பெருமான் வீதியுலா வந்து எல்லோருக்கும் அருள் பாலித்தார். இத்தேரை விடுவதற்கு இடமில்லாதிருந்தபோது தற்போதைய பிரதம குருக்களாகிய வை.சோமாஸ்கந்தர் அவர்களின் பெரிய தகப்பனாகிய சிவஸ்ரீ சதாசிவக் குருக்கள் இரண்டு பரப்புக் காணியை உபகரித்தார். அதில் சிறந்த ஒரு தேர் வீட்டையும் கட்டி அதிலே தேரைப் பாதுகாப்பாக விட்டோம்.

பின்னர் பரிவார மூர்த்தியாகிய முருகப் பெருமானுக்கும் ஒரு சித்திரத் தேர் வேலுப்பிள்ளை பொன்னம்பலம் என்பவர் தலைமையில் செல்லையா கந்தசாமி என்ற சிற்பக் கலைஞரால் உருவாக்கப்பட்டு 10.06.1975இல் ஓடத்தொடங்கியது. மூன்றாவது சண்டேஸ்வரருக்கும் ஒரு சித்திரத் தேர் வேலுப்பிள்ளை செல்லத்துரை (சாஸ்திரியார்) என்பவர் தலைமையில் உருவாக்கப்பட்டு 1976 இல் வெள்ளோட்டம் ஓடியது. இத்தேரை கலாகேசரி ஆ.தம்பித்துரை அவர்கள் தமது கைவண்ணத்தால் செய்துமுடித்தார். இம்மூன்று சித்திரத்தேர்களிலும் இன்றுவரை மும்மூர்த்திகள் எழுந்தருளி எல்லோருக்கும் கிருபைபாலித்து வருகின்றார்கள்.

இந்த மூன்று தேர் வேலைகளையும் ஸ்தாபகரின் சந்ததியாரான சுந்தரப்பா என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட ஆறுமுகம் சுந்தரம் என்ற பெரியாரும் சிவதொண்டருமாகியவர் முன்னின்று செய்து முடித்தார். இன்று இந்த இரதோற்சவதினத்தில மும்மூர்த்திகளையும் அடியார்கள் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெறுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி - இரதோற்சவ சிறப்பு மலர் - 16.05.2002 இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அமரர் நாகமுத்து சின்னராசா சார்பாக மூத்த மைந்தன் சின்னராசா செந்தில்ராஜன் எழுதியது

# இரதோற்சவம்

கலையும் கலாசாரமும் ஒருசேர வளர்ந்து கொண்டிருக்கும் தனிப்பெருஞ் சிறப்பு இணுவில் கிராமத்துக்கு உண்டு. இங்கு வாழும் மக்கள் சைவப் பண்பாட்டில் ஊறித் திளைத்தவர்கள்.

விரத நியமமும், ஆசார சீலமும் நிரம்பப் பெற்றவர்கள். அத்துடன் இசையையும், கொடையையும் பேணுபவர்கள். இதனாலேயே இந்த ஊர் திருக்கோயில்களுக்கு தனிச்சிறப்புண்டு.

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் திருக்கோயிலின் அமைப்பு இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இக்கோயிலின் வளர்ச்சி அதிஅற்புதமானது. அதே போல விநாயகப் பெருமானின் அருள் விளையாட்டும் மிக மிக ஆனந்தமானது.

அன்று தொட்டு இன்று வரை எம்மவர்கள் எம் பெருமானின் மீளா அடியவர்களாக விளங்கி மன, மொழி, மெய்களால் ஆற்றும் தொண்டுகள் மகத்தானவை.

" உன் கடன் அடியேனைத் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே"

என்ற நாவுக்கரசரின் தேவார வைர வரிகளை மனதில் நிறுத்தி தனது அர்ப்பணிப்புக்களையும் காணிக்கைகளையும் நன்றி உணர்வோடு செலுத்தி வாழ்ந்து வருவது சிறப்புக்குரிய விடயமாகும்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளும், "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற பொன்மொழியும் எம்மவர்கள் பலர் புலம்பெயரக் காரணமாகிவிட்டது. எனினும் மண் மறவா மைந்தர்களாக, தங்கள் குடும்ப விழாவாகக் கருதி மகோற்சவ காலங்களில் ஒன்று கூடுகிறார்கள்.

இன்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன்னர் பொருளாதார வசதிகள் அற்ற சூழ்நிலையில் எம் முன்னோர்கள் ஆற்றிய பணிகளை, தொண்டுகளை புறந்தள்ளி இன்றைய வளர்ச்சியை எண்ணிவிட முடியாது. அப்பணிகளின் நீட்சிதான் இன்றைய ஆலயம் பெருவிருட்சமாக, இந்திரலோகமாக காட்சியளிக்கிறது என்றால் அது மிகையல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று விவசாயம், குடிசைக் கைத்தொழில், சுருட்டுத்தொழில், கூலிவேலை செய்தோர், வர்த்தகம், வியாபாரம் செய்தோர் என ஒவ்வொருவரும் தம் சக்திக்கு ஏற்றவாறு எம்பெருமான் அனுக்கிரகத்தால் பல பணிகளில் ஈடுபட்டார்கள்.

இன்று வாழுகின்ற சந்ததியினர்கட்கு அன்று வாழ்ந்தவர்களின் வாழ்க்கை ஒரு பாடமாக, உந்துசக்தியாக அமைகிறது.

அந்தவரிசையில் எனது பேரனார் வம்சம் செட்டிவம்சம் என அழைக்கப்படுகிற நிலையில் வம்ச திருவிழாவாக தேர்த் திருவிழா நடைபெறத் தொடங்கியது. பேரன் நாகமுத்து அவர்கள் கடும் உழைப்பாளி, விவசாயி. அவருக்கு பக்கபலமாக பிள்ளைகள் அனைவரும் தோளோடு தோள் கொடுத்து உதவினார்கள். பெருமளவு நிலபுலங்களுக்கு உடமையாளர்களானார்கள்.

1961க்குப் பின்னர் கட்டுத்தேராக இருந்த அமைப்பை ஒரு பெரிய சித்திரத் தேராக மாற்றவேண்டும் என்று எண்ணம் விநாயகரின் அனுக்கிரகத்தால் அவருக்கு உதித்தபோது 1966ல் தேர்பணி நிறைவுற்று அதே ஆண்டு மகோற்சவ காலத்தில் எம்பெருமான் சித்திரத்தேரில் பவனி வந்தார்.

எனது பேரனார்க்கு நான்கு புதல்வர்களும் ஒரு புதல்வியுமாக ஐந்துப் பிள்ளைகள். பாசமுள்ள தந்தையாக இருந்து சீரிய வாழ்வை பிள்ளைகளுக்கு அமைத்துக் கொடுத்தவர். அவருக்கு பக்கபலமாக விவசாயத் தொழிலுக்கு மூத்த மைந்தன் இருந்தார். பேரனார் மறைந்தபோது பிள்ளைகள் ஒவ்வொருவராக தலைமைப் பொறுப்பேற்று செட்டி வம்சத்துடன் இணைந்து விழாவை சிறப்பித்தார்கள்.

பெரியப்பா (அமரர் தம்பிராசா) இளவயதில் காலமானதைத் தொடர்ந்து சீனியப்பா (அமரர் பொன்னுதுரை) திருவிழாவைத் தலைமைப் பொறுப்பேற்றார். இவருடைய காலங்களில் நடந்த உற்சவம் மிகச் சிறப்பானது என்றால் அது மிகையில்லை. ஆசாரசீலரான இவர் புன்னகை பூத்த முகம், அதிகாரத் தோரணையில் அன்பான கண்டிப்பு, சிறந்த தலைமைத்துவம், செட்டி வம்ச ஏனைய உபயகாரர்களை அரவணைத்துச் செல்லும் பாங்கு, ஆழந்த இறைப்பற்று என்பவற்றை இவரின் ஆளுமையின் மிக முக்கிய குணாம்சங்களாக கொள்ளலாம். இவரின் தலைமைத்துவத்திலும் வழிகாட்டலிலும் மிகவும் கட்டுக்கோப்பாக 2013 வரை நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்குப் பின்னர் 2018 வரை எனது தந்தையார் அமரர் நா.சின்னராசா அவர்களின் வழிகாட்டலிலும் பொறுப்பிலும் நடைபெற்றது. தனது தமையனார் அவர்களின் வழித்தடத்தை தானும் பின்பற்றி உபயத்தை செய்து வந்தார். 2018வரை இவரின் வழிகாட்டலில் இருந்த உபயம் தற்பொழுது சித்தப்பா (நா.கணேசு) அவர்களின் வழிகாட்டலிலும் பொறுப்பிலும் வம்சத்தினர் ஒன்றுகூடி இந்தத் தேர்த் திருவிழாவை விநாயகப் பெருமானின் திருவருளால் நிகழ்த்தி வருகிறோம்.

அமரர் நா.பொன்னுத்துரை அவர்களின் மகனான திரு.பொன்னுத்துரை கருணாகரன் அவர்களால் தேர்ப் பாதுகாப்பு, பராமரிப்புப் பணிகள் ஆகிய பொறுப்புக்கள் செவ்வனே நிறைவேற்றப்பட்டு வருகின்றது. தேர் தொடர்பான சகல திருத்தப் பணிகளிலும் தியாகர் வம்சத்தினர் இணைந்து ஒற்றுமையுடன் பங்கெடுக்கின்றோம்.

நன்றி

**சின்னராசா செந்தில்ராஜன்**

SENTIL SOLICITOR & ADVOCATE

Senthil Rajan Sinnarajah LL.B Charles Darwin University, GDLP

Solicitor of the Supreme Court of NSW

Fully qualified in Australia

Winner of the School of Law Prize (2000) Charles Darwin University

## குறிப்பு

ஆரம்ப காலத்தில் தியாகர் உயிருடன் இருக்கும் போதே திருவிழா அபிஷேகத்தை தியாகர் மகன் செல்லப்பா பொறுப்பேற்று தனது சகோதரர்களான நாகமுத்து, அப்பையா ஆகியோருடன் இணைந்து செய்து வந்தனர். அதனை அமரர் தியாகர், அப்பையாவும் அமரரான பிரதமகுரு வை. சோமஸ்கந்த குருக்களும் தெரிவித்து உள்ளனர். தியாகர் செல்லப்பாவின் மரணத்தின் பின் மூத்த தமையனாரான தியாகர் நாகமுத்து தலைமையேற்று அமரர் செல்லப்பா, அமரர் அப்பையா ஆகியோரின் வம்சத்துடன் இணைந்து செய்து வந்தார். இவர்களின் மறைவிற்குப் பின் அவர்களின் ஆண் சந்ததியினரும் அதன் பின் அவர்களது பிள்ளைகளான ஆண் சந்ததியினரும் செய்து வருகின்றனர்.

**வை. ஸ்ரீஸ்கந்தவரோதயன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பஞ்சமுக விநாயகர்

இந்து சமயத்தில் விநாயகர் வழிபாடு முதன்மை பெற்று விளங்குகின்றது. இந்து சமயம் பரவியுள்ள எல்லா நாடுகளிலும் விநாயகர் வழிபாடு சிறப்பிடம் பெற்றுள்ளது. ஸ்ரீ சங்கரர் நிறுவிய சண்மதங்களில் கணபதியை முழுமுதற் கடவுளாக வழிபடும் காணாபத்திய நெறியும் ஒன்றாகும். சங்கரர் விநாயகப் பெருமான் மீது அருளிய பக்திரசம் ததும்பும் தோத்திரநூல் ஸ்ரீ கணேச பஞ்சரத்தினமாகும். சாதாரண பொது மக்கள் மத்தியில் நிலவிய வழிபாடாக விநாயகர் வழிபாடு தொன்றுதொட்டு காணப்படுகின்றது. தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் பிள்ளையார் உருவங்கள் அரச மரத்தின் அடியிலும் குளத்தங்கரைகள், ஆற்றங் கரைகளிலும், வயல் ஓரங்களிலும் வைத்து வணங்கப்பட்டு வருவதை இன்றும் காணக்கூடியதாக உள்ளது.

“ஆற்றங்கரை மீதிலும் அரசமர நிழலிலும்
வீற்றிருக்கும் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்”

என்ற பஜனைப் பாடலும் இதனையே சுட்டி நிற்கின்றது. ஏழை, எளியவர்கள் அனைவருக்கும் பேதம் எதுவுமின்றி அருளை அள்ளி வழங்கும் ஞானவிநாயகப் பெருமான் மிக எளிமையான வடிவில் பக்தர்களுக்கு காட்சி தருவார். ஒருபிடி சாணத்திலே அறுகம்புல்லைக் குற்றி பிள்ளையாரே என்று எளிமையான வடிவத்திலே விநாயகப் பெருமானை பக்தர்கள் வழிபடுவார்கள்.

இந்து சமயத்தவர் வழிபடும் தெய்வங்களில் முதல் வணக்கம் விநாயகருக்கே உரியதாகும். இந்துக்கள் தாம் எக்காரியத்தை ஆரம்பிக்க முன்பும் விநாயகப் பெருமானை வழிபாடு செய்தே காரியங்களை ஆரம்பிப்பார்கள். இடையூற்றை நீக்குபவரும் எடுத்த கருமங்களை கைகூடச் செய்பவரும் விநாயகப் பெருமானே என்பதனால் நாம் முதலில் அவரை வணங்குகின்றோம். இதனாலேயே அவருக்கு விக்கினேஸ்வரன் என்ற பெயர் உண்டாயிற்று.

சுக்கிலாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் /
ப்ரசன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே //

என விநாயகப் பெருமானை வணங்கியே சிவாச்சாரியார்கள் அனைவரும் தமது கிரியைகளை ஆரம்பிப்பார்கள். பிரணவம் என்ற ஓங்கார வடிவை “கணபதி” என்றும் துதிக்கையோடு சேர்த்து ஐந்து கரங்கள் உடையவர் “ஐங்கரன்” என்றும் தமக்கு மேலே வேறொரு தலைவர் இல்லாதவராகையால் “விநாயகர்” என்றும் பிரபஞ்சம் முழுவதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்முள் அடக்கிக் கொள்வதால் "லம்ப -உதரர்" (லம்போதரர்) என்றும் அழைக்கப்படுகிறார். தன்னை வழிபடும் அடியவர்களைப் காப்பாற்றுவதோடு அவர்களுக்கு வெற்றியையும் தருபவர் ஆகையால் "ஹேரம்பர்" என்றும் எலிவாகனத்தை உடையவராகையால் "அகுதரர்" எனவும் பக்தர்கள் பல பெயர்களில் விநாயகப் பெருமானை அழைக்கின்றார்கள்.

இவ்வாறு பல பெயர்களில் அழைக்கப்படும் விநாயகர் பல்வேறு திருவுருவ அமைப்பில் வழிபடுபவரின் மனநிலைக்கு ஏற்ப உறவுகொண்டு அருள் வழங்குகின்றார். இந்த உருவ அமைப்புக்கள் ஆகமங்களைப் பின்பற்றியும், சிற்ப சாஸ்திரங்களை மூலாதாரமாகக் கொண்டும், புராண இதிகாசக் கதைகளை தெளிவு படுத்தியும் அமைகின்றன. விநாயகப் பெருமானுடைய திருவுருவம் முப்பத்தி இரண்டாக போற்றப்படுகிறது. இவற்றின் திருவுருவ அமைப்பு, தோற்றப் பொலிவு, கையிலுள்ள ஆயுதங்களின் அமைப்பு, ஆகியவற்றை உள்ளடக்கிய தியான சுலோகங்களை முக்கலப் புராணம், காமிகாமகம் முதலியன எடுத்துரைக்கின்றன.

பிரணவ ரூபமாகிய ஆனைமுக திருவுருவில் ஒன்றாகிய பஞ்சமுக விநாயகர் வழிபாட்டு மரபில் விநாயகர் ஆலயங்களில் இராஜமூர்த்தமாகப் போற்றப்படுகின்றார். சிவாலயங்களில் காணப்படும் நடராஜ மூர்த்தத்தின் சிறப்புக்களுடன் இம்மூர்த்தம் ஒப்பிடத்தக்கது. விநாயகர் ஆலயங்களில் மகாமண்டபத்தில் வடக்குப் பக்கத்தில் தெற்கு நோக்கியவாறு பஞ்சமுக விநாயகரின் ஆலயம் அமைவு பெறுகின்றது. தென்திசை நோக்கி இருப்பதால் அடியார்களின் மரணப் பயத்தை அகற்றி ஆயுளைச் செழிக்கவைத்து அருள்வதுடன் தட்சணாமூர்த்தி போல ஆன்மாக்களின் அஞ்ஞானத்தை அகற்றி மெய்ஞானத்தை அருளும் ஞான மூர்த்தமாகவும் பஞ்சமுக விநாயகர் போற்றப்படுகிறார்.

தேர் உற்சவத்தின் போது வரும் தெய்வத் திருவுருவங்கள் அனைத்தும் இராஜமூர்த்தமாகவே காணப்படும். சிவன்கோவில்களில் சோமாஸ்கந்தர் இராஜமூர்த்தம், கந்தசுவாமி கோவில்களில் ஆறுமுகசுவாமி இராஜமூர்த்தம், விநாயகர் கோவில்களில் பஞ்சமுக விநாயகரே இராஜமூர்த்தம். ஆகவே இராஜமூர்த்தம் தான் தேர்த் திருவிழாவில் எழுந்தருளுவது மரபு. தேரானது மூலஸ்தானத்தை ஒத்தது. தேரில் சுவாமி எழுந்தருளும் போது அர்ச்சனை செய்வது சிறப்பானது.

அந்த வகையில் 1976ஆம் ஆண்டு பஞ்சமுக விநாயகரின் திருவுருவம் ஆலய முன்றலிலே உலோகங்களை உருக்கி வார்த்த காட்சியை அடியார்கள் எளிதில் மறந்துவிட மாட்டார்கள். "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்பார் மணிவாசகர். "தவமும் தவமுடையார்க்காகும்" என்பார் தெய்வப்புலவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த தெய்வ கைங்கரியத்தை செட்டி வம்ச வழிவந்த அமரர் சிவப்பிரகாசம் ஸ்ரீ பத்மநாபன் என்பவர் பொறுப்பேற்றார். சுமார் தொள்ளாயிரம் இறாத்தல் நிறைகொண்ட பஞ்சமுக விநாயகரை சோமசுந்தர ஆச்சாரியார் வடிவமைத்தார். ஐந்து திருமுகங்களும், பத்து திருக்கரங்களும் கொண்ட அழகிய தெய்வாம்சம் பொருந்திய இவ்விநாயகர் பெரிய சித்திரத்தேரில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலிக்கும் காட்சியைக் காண கண் கோடி வேண்டும்.

**விழா உபயகாரர்கள்.**



## அமரர் ஆறுமுகம் சுந்தரம்

சுந்தரப்பா என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட அமரர் ஆறுமுகம் சுந்தரம் அவர்கள் தேர் வேலைகள், பராமரிப்புப் பணிகள் என்பவற்றில் தன்னாலான பங்களிப்பை வழங்கினார் என்பதனை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

நன்றி

**விழா உபயகாரர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஸ்ரீ பஞ்சமுக விநாயகர் திருவூஞ்சல்

**மூதறிஞர் வை.கதிர்காமநாதன்**

சைவத் தமிழ்ப் பேரறிஞர், இலக்கிய கலாநிதி
**பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள்** அளித்த

## சிறப்புப் பாயிரம்

பழம்பெருமை மிகப்படைத்த இணுவை யூரில்
பரராஜ சேகரப் பிள்ளை கோயில்
எழுந்தருளும் பஞ்சமுகப் பிள்ளை யார்மேல்
எழில்திகழுந் திருவூஞ்சல் இனிது செய்தான்
செழுந்தமிழின் கரைகண்ட அறிஞர் கோமான்
திருத்தகுமம் பிகைபாக ஆசான் பேரன்
பொழிந்தமிழ் வல்லவைத் யலிங்க பிள்ளை
புத்திரன்நற் கதிர்காம நாதன் தானே.

வண்ணை/ நாவலர் சைவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர்
**பண்டிதர், வித்துவான்**
**இ.திருநாவுக்கரசு அவர்கள்**
இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை முன்னாள் அதிபர்
பௌராணிகர் சிவாநுபூபதிச் செல்வர்
**ஸ்ரீமத் வை.கதிர்காமநாதன் ஆசிரியர் அவர்கள்**
பாடிய **'பஞ்சமுக விநாயகர் திருவூஞ்சல்'** நூலிற்கு அளித்த

## சிறப்புப் பாயிரம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருமருவு மிணுவைநகர்ப் பரராச
சேகரன்தேர் தீர்த்த நாளில்
மருவுதிரு வூஞ்சலிசை பஞ்சமுக
விநாயகர்க்கு மகிழ்ந்தி சைத்தார்
பொருவருமம் பிகைபாகர் சுதன்வைத்திய
லிங்கப்பிள்ளை புனித மைந்தன்
கருவிலுயர் திருமருவு கதிர்காம நாதகுரு
கவிஞர் கோவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஸ்ரீ பஞ்சமுக விநாயகர் திருவூஞ்சல்

சீர்பூத்த பேரொளியா யுயிர்க்குயிரா யகண்டிதமாய்
சிறந்தோங்கும் ஞானவடிவாம் நின்மல மூர்த்தியே
பேர்பூத்த குணங்குறிக ளிகந்தபழ முறைக்கொழுந்தே
பெருமைசான்ற மன்னனாம் பரராச சேகரன்
பார்பூத்த புகழானமைந்த பெருங்கோயில் குடிகொண்ட
பஞ்சமுக விநாயகரே நின்னூஞ்சல் பாடக்
கார்பூத்த இணுவைநகர் களிப்புறக் கருணைசெயுங்
கணபதிதன் னிருசரணம் கருத்துள் வைப்பாம்.

அஞ்செழுத்தா லங்ககர நியாசம் ஆற்றி
ஆன்மார்த்த பூஜைசெயும் அந்தணர் தமக்கு
அஞ்செழுத்தின் வடிவாய் அமலமாய் அயன்மால்
அறியவொண்ணாப் பரிபூரண வடிவம் காட்டி
அஞ்செழுத்தின் முன்னின்ற ஓங்காரப் பொருளே
அஞ்ஞான விருளோட்டு மற்புத மூர்த்தியே
பஞ்சின் மெல்லடிப் பாவையர்சூ ழிணுவை மேவும்
பஞ்சமுக விநாயகரே ஆடீ ரூஞ்சல்.

பஞ்ச பிர்மமாம் வடிவே யென்கோ
பாவாணர்க் கருள்புரியும் வடிவே யென்கோ
தஞ்சமடைந் தார்க்குத் தயாநிதியே யென்கோ
தத்வா தீதமாம் பொருளே யென்கோ
வஞ்சமிலார் நெஞ்சின் வாழ்வே யென்கோ
வானாடர்க்கு மரிய தெய்வமேயா தென்கோ
பஞ்சவில்வக் காடுசெறி யிணுவை மேவும்
பஞ்சமுக விநாயகரே ஆடி ரூஞ்சல்

சந்திரசே கரனாகும் இறைவனே தானாகிக்
சகலசரா சரங்களும் தன்னகத் தொடுங்கப்
பந்தம தகற்றுமிப படிவமுங் காட்டிப்
பாருளார் போற்றப் பரிந்தருள் புரியும்
சிந்தனைக்கு மெட்டாச் சிவானந்த மூர்த்தியே
சிறியேமை யாண்டருள் செய்யுந் தெய்வமே
கந்தமலர்ப் பொழில்சூ ழிணுவை மேவும்
கல்யாண மூர்த்தியே ஆடீ ரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தான நின்திருமுகத் தழகை யிம்பரோ
டும்பரும் வந்து நாளும் பருக
நந்தாவருள் கொழிக்கும் நாயகனே நல்லிணுவை
நகருளார் செய்த நற்றவப் பயனே
சிந்தாகுலந் தீர்த்து நல்வாழ் வளிக்கும்
செந்தாமரைச் சீறடி சேப்ப வுந்திப்
பைந்தா துகுக்குஞ் சோலைசூ ழிணுவைப்
பஞ்சமுக விநாயகரே யாடீ ரூஞ்சல்

வேதமாய் வேதப்பொருளாய் வேதநாயகனு மாகி
விதீந்திராதி தேவர்க்கு நாதனு மாகி
ஆதியாய் ஆதிமத்யாந்த விஹீன னாகி
ஆதுலர்க் கன்னைதந்தையாய் நின்றமெய்ப்
போதமாய் அட்டமூர்த்தியுந் தானே யாகிப்
போதுடன் சென்று போற்றுவார் தங்கள்
பாதக மனைத்தும் போக்கியெழுந் தருளும்
பஞ்சமுக விநாயகரே யாடீ ரூஞ்சல்

பாரோங்கு வேதங்கள் கால்க ளாகப்
பரவரிய வாகமங்கள் விட்ட மாக
ஏரோங்கு பலகலைகள் வடங்க ளாக
எண்ணுமுப நிடதங்கள் பலகை யாக
சீரோங்கு பிரணவமே நற்பீட மாகச்
சிறந்தநல் மந்திரமே வடிவ மாகப்
பேரோங்கு நல்லறிஞர் போற்று மிணுவைப்
பஞ்சமுக விநாயகரே யாடீ ரூஞ்சல்

கருதரிய திருமுகங்க ளோரைந்து மாடக்
காதார்குண் டலமாடக் கவினோர்மேனி யாடப்
பெருவயிறாடப் பிறைசேர் முடியு மாடப்
பூதகணங்க ளாடப் புண்ணியர்தா மாட
சுரும்ப ரிசைபாடச் சூழ்கொன்றைத் தாராட
சுரிகுழலார் தாமாடச் சிறாரு மாட
அரும்பவிழ் சோலைசூ ழணியாரிணுவை யமர்
அஞ்சுமுக விநாயகரே யாடீ ரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சானனந் திரிதரும் வெஞ்சார லிருந்து
பல்லாண்டு தவங்கிடந்த பொதியில் முநியும்
விஞ்சிய வொளிகாலு மிவ்வியன்பே ருருவை
விம்மிதனாய் வியந்து நிற்பவது கண்டு
அஞ்சாதே யென்றபய மளித்த ஐயனே
அமரரும் நாடோணா அற்புதக் குன்றமே
மஞ்சுலாம் புரிசைசூ ழிணுவை மேவும்
மன்னுபுகழ் விநாயகரே யாடீ ரூஞ்சல்

பஞ்சாங்கமுட னட்டாங்க வழிபாடு செயும்
பல்லோர் தமக்குப் பரிந்தருள் பாலித்து
பஞ்சாங்கந் தவறாது தங்கடன் புரிவார்
பண்ணுட னோதுதேவாரம் பல வொலிக்கப்
பஞ்சாங்கமுட னடியார் பலருஞ் சூழப்
பவனிவருந் திருக்கோல வுலாக் கண்ணுறும்
பஞ்சின் மெல்லடிப் பாவையர்சூ ழிணுவைப்
பஞ்சமுக விநாயகரே யாடீ ரூஞ்சல்

வேண்டுவார் வேண்டுவதே யீவா னென்னும்
வியன்றிருநா வுக்கரசின் வாக்கும் பொய்யோ
ஈண்டுவா வென்றழைத்துன் திருவடி நீழல்
இருந்துதுங் கருணைதா னென்பா விலையோ
கூண்டுவாழ் கிளிபோ லலமந்து கிடந்தேற்குத்
தந்தையுந் தாயு மாகுந்தற் பரனே
நீண்டுவா னுலகளக்கும் பொழில்சூ ழிணுவை
நிமலனே யெனையாளு மமரர் கோவே.

**வாழி**

மாண்புறு சித்தாந்த சைவநெறி வாழி
மன்னுசிவா கமமும் மறையவரும் வாழி
காண்டொறு மாலயங்கள் கவினுற வாழி
கண்டிகையும் நீறும் நனிசிறந்து வாழி
ஆண்டகையர் அறம்பல புரிந்து வாழி
அணியிழையார் இல்லற தர்மமும் வாழி
சேண்பொலி திருக்கோ புரங்கள் வாழி
செந்தமிழன்ன பஞ்சமுககேச வாழி வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்தோர் வம்சம்

## செட்டி வம்சம் - தகப்பன் வழி

- விநாயகர்
  - சின்னத்தம்பி (செட்டியார்)
    - சுப்பிரமணியம் (சுப்பர்)
      - செங்கமலம்
      - முத்துப்பிள்ளை
      - காமாட்சி
      - வேலுப்பிள்ளை
    - வினாயகர்
      - கதிர்காமர்
      - வள்ளியம்மை
      - பார்வதி
      - செல்லமுத்து
      - தெய்வயானை
      - சின்னத்தம்பி
    - அருணாசலம்
      - கதிராசிப்பிள்ளை
      - அம்பலம்
      - கந்தர்
      - வைத்திலிங்கம்
    - ஆறுமுகம்
      - சின்னையா
      - தம்பையா
      - சின்னத்தமபி
      - தம்பிமுத்து
      - இளையதம்பி
      - யோகம்
      - சுந்தரம்
      - அன்னப்பிள்ளை
      - சின்னத்தங்கம்
      - லச்சுமன்
    - தியாகராசா (தியாகர்)
      - தங்கம்மா
      - நாகமுத்து
      - செல்லப்பா
      - கதிர்காமர் (அப்பையா)
      - பொன்னுத்துரை
    - சரவணமுத்து
      - வள்ளியம்மை
      - முத்து
    - சிதம்பரம்
      - பார்வதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்தோர் வம்சம்

- விநாயகர்
- சின்னத்தம்பி
- தியாகராசா (தியாகர்)

+

- வள்ளியம்மை

- சுப்பிரமணியம்

+

- சின்னாச்சிப்பிள்ளை

- தங்கம்மா
- **நாகமுத்து**
- பொன்னுத்துரை
- செல்லப்பா
- கதிர்காமர்

- தங்கம்மா
- **முத்துப்பிள்ளை**
- செல்லையா
- பொன்னையா
- செல்லப்பா
- கணபதிப்பிள்ளை

- தம்பிராசா + புனிதவதி
- பொன்னுத்துரை + பரமேஸ்வரி
- சின்னராசா + அன்னலட்சுமி
- நேசம்மா + நல்லதம்பி
- கணேசு + லலிதாம்பிகை

- அமரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கொஞ்சு தமிழ் இணுவையில் கோயில் கொண்டவன்

இயலிசைவாரிதி , கவிமாமணி,
அருட்கலைவாரிதி, ஸாஹித்ய சிரோண்மணி,
பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயர் எம்.ஏ.

ராகம்: ரஞ்ஜனி — தாளம் : ஆதி

பல்லவி

நெஞ்சினில் குஞ்சரனை இருத்து – மனமே
அஞ்சு கரத்தனை அனுதினமும் நீ துதித்து

அனுபல்லவி

கொஞ்சு தமிழ் இணுவையில்
கோயில் கொண்ட விநாயகன்
அஞ்சலென அருள்வான்
அவனை நீ அவனியில்

சரணம்

பக்தியாய்ப் பஞ்ச முகன்
பாதம் பணிந்திடுவாய்
நித்தியம்பூ வெடுத்தவன்
நிழலில் சூட்டிடுவாய்
சத்தியம் காத்திடுவாய்
சந்ததம் ஏத்திடுவாய்
அத்தி முகத்தவன்
அருளைப் புரிந்திடுவான்

நன்றி – இணுவில், ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் திரு அந்தாதிக் கீர்த்தனைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் இணைப்புக்கள்

## கட்டுரைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **தேரின் மகிமை**

இலக்கிய கலாநிதி பண்டிதமணி
சி.கணபதிப்பிள்ளை அவர்கள்

02. **தேர்த் திருவிழா**

'புலவர் ஏறு'. திரு.ந.ரா.முருகவேல் M.A., M.O.I.
ஆசிரியர், "திருக்கோயில்", சென்னை – 43

03. **தேரின் மகத்துவம்**

ஆத்மஜோதி ந.முத்தையா

04. **தேர்த் திருவிழா இறைவனுக்குரிய ராஜோபசாரம்**

கா.கைலாசநாதக் குருக்கள்
முன்னாள் இந்துநாகரிகப் பேராசிரியர், யாழ்.பல்கலைக்கழகம்

05. **இரதோற்சவம்**

சாஹிதிய ஸ்ரீமாம்ஸ சிரோண்மணி காஞ்சிபுரம்
உமாபதி சிவாச்சாரியார்

06. **சிவாலயக்கிரியை மரபில் ரதப்பிரதிஷ்டை**

பிரம்மஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள், பாலகைலாசநாதசர்மா
சமஸ்கிருத விரிவுரையாளர் (B.A.Hon.M.A,M.Phil)
சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

07. **நல்விழாப் பொலிவு காணல்**

"வித்தியாசாகரம்"
சிவஸ்ரீ சபா வாஸுதேவக்குருக்கள்

08. **விநாயக வழிபாட்டில் பஞ்சமுக விநாயகரின் திருவுருவத் தத்துவம்**

பிரம்மஸ்ரீ சா.குமரேசசர்மா B.A.(Hons)

09. **பரராஜசேகர மன்னனுக்கும் ஆலயத்துக்கும் உள்ள தொடர்பு**

'சிவநெறிச் செம்மல்'
திரு. வை. அநவரத விநாயகமூர்த்தி

10. **இணுவில் ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையாரின் அருட்பொலிவும் மகத்துவமும்**

ம.பொ.செல்வரத்தினம் J.P. அவர்கள்
(தொல்பொருள் ஆய்வாளர், யாழ்ப்பாணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தேரின் மகிமை

இலக்கிய கலாநிதி பண்டிதமணி
சி.கணபதிப்பிள்ளை அவர்கள்

" நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முக்தியின்பம் பெறும்பொருட்டேயாம்" என்பது நாவலர் பெருமான் வாக்கு. எங்குமாய இறைவன் ஆன்மாக்கள் மீது கொண்ட கருணையால் உருவத் திருமேனி தாங்கி எழுந்தருளியிருக்கும் இடமே ஆலயம். ஆகவே ஆலய வழிபாடு மிகவும் முக்கியம். "ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்றார் உலக அன்னையாகிய ஔவைப்பிராட்டியார்.

ஆலயங்களில் இடம்பெறும் விழாக்கள் சிறப்பு நோக்கி "மகோற்சவங்கள்" என்று சொல்லப்படுகின்றன. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய பஞ்சகிருத்திய உண்மைகளைப் புலப்படுத்துகின்ற விழாக்களில், இரதோற்சவம் (தேர்த்திருவிழா) முக்கிய இடம் பெறுகின்றது.

இந்த உடம்பு ஒப்பற்றதொரு தேர். உயிரானது உடம்பை இயக்கிக் கொண்டிருக்கின்றது. உடல் வெறுஞ் சடம். உடலாகிய தேர் தன்னை இயக்கிக் கொண்டிருப்பது உயிர் என்பதை அறிவதில்லை.

உயிரும் ஒரு தேரே. உயிரை உயிர்க்குயிர் இயக்கிக் கொண்டு உயிராகிய தேரில் வீற்றிருக்கின்றது. உயிர்க்குயிர்தான் கடவுள். இந்தப் பூமியும் இறைவனுக்கு ஒரு தேரே. பூமியாகிய தேரில் இறைவன் எழுந்தருள்புரியும் உண்மையை உணர்பவர்களுக்கு, இவ்வுலகில் யாதுமோர் குறைவில்லை. உயிரும் பூமியும் இறைவனுடைய சிறியதேர்கள்.

பூவுலகுக்குக் கீழே ஏழு உலகம். பூவுலகு உட்பட மேலே ஏழு உலகம். அப்பால் வைகுந்தசத்திய உலகங்கள். அதற்குமப்பால் சிவலோகம். இவையனைத்தும் அடங்கியது ஓர் அண்டம். ஓர் அண்டத்தை ஞாபகப்படுத்துவது தேர்.

பூவுலகம் அண்டமாகிய தேரின் நடுத்தட்டு. அண்டமாகிய தேரில், பூவுலகமாகிய தட்டில் இறைவன் எழுந்தருளி ஆன்மாக்களை இரட்சிக்கின்றான்.

நன்றி – சித்திரத்தேர் திரு உலா (08.09.1984) ஸ்ரீ செல்வச்சந்நிதி கந்தசுவாமி கோவில் தொண்டமானாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தேர்த் திருவிழா

**'புலவர் ஏறு'. திரு.ந.ரா.முருகவேல்** M.A., M.O.I.
ஆசிரியர், "திருக்கோயில்", சென்னை - 43

## முன்னுரை

திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள், பலவகைத் தத்துவ நுட்பங்களை உள்ளுறையாகக் கொண்டவை. சிவாலயங்களில் நடைபெறும் தேர்த்திருவிழா, சிவபெருமான் திரிபுர தகனம் செய்தருளிய நிகழ்ச்சியைப் புலப்படுத்துவது.

## திரிபுர தகனம்

ஒரு காலத்தில் தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி எனும் மூன்று கொடிய அசுரர்கள் இருந்தனர். அவர்கள் இரும்பு, வெள்ளி, பொன் என்னும் உலோகங்களால் அமைந்த பறக்கும் தன்மை வாய்ந்த மூன்று கோட்டைகளை உடையவர்களாய், தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பெருந் தீங்குகளைப் புரிந்து வந்தனர். ஆதலின் அவர்களை அழித்தருளச் சிவபெருமான் திருவுள்ளம் கொண்டார். அதனால் பூமியை தேராகவும், சூரிய சந்திரர்களைச் சக்கரமாகவும், விண் மீன்களை விதானமாகவும், மேருமலையை வில்லாகவும், வாசுகியை நாணாகவும், நான்கு வேதங்களைக் குதிரைகளாகவும், பிரமதேவனைச் சாரதியாகவும் கொண்டு, தேவர்கள் பலரும் தேரின் உறுப்புகளாக அமைய, அதன்மீது ஏறிப் போருக்குப் புறப்பட்டார்.

இந்நிலையில் தேவர்கள் பலரும் தம்முடைய துணையினாலேயே, சிவபிரான் திரிபுர அசுரர்களை வெற்றிக் கொள்ளப் போகின்றார் என்று எண்ணிச் செருக்குற்றனர். அதனையறிந்த சிவபிரான், அவர்களின் அறியாமையை நினைந்து தாம்புரிந்த புன்னகையினாலேயே, திரிபுர அசுரர்களை எரித்து அழித்தார் என்பது வரலாறு. இவ்வரலாறு யசுர்வேதம், இலிங்க புராணம், ஸ்கந்த புராணம், மகாபாரதம், வால்மீகி இராமாயணம் முதலிய பழம்பெரும் நூல்களில், ஆங்காங்கே பரக்கக் கூறப்பட்டிருக்கின்றது.

"அப்பணி செஞ்சடை யாதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரம் ஆவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை ஆர்அறி வாரே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் திருமூலர் தாம் அருளிச்செய்த திருமந்திரத்தில், சிவபிரான் திரிபுரதகனம் செய்த வரலாற்றின் தத்துவ நுட்பத்தை விளக்கி இருப்பதைக் காணலாம். இனி இவ்வாறேயன்றி வேறு வகையிலும், தேர்த் திருவிழாவின் தத்துவத்தைப் பெரியோர்கள் விளக்குவர்.

## உடலும் உறையும்

ஆன்மாக்களுக்குக் காரண சரீரம், கஞ்சுக சரீரம், குணசரீரம், சூக்கும சரீரம், தூல சரீரம் என்னும் ஐந்து சரீரங்கள் உண்டு. இவற்றிற்கு முறையே ஆனந்த மயகோசம், விஞ்ஞான மயகோசம், மனோமயகோசம், பிராணமயகோசம், அன்ன மயகோசம் எனவும் பெயர்கள் வழங்கும். சரீரம் – உடல், கோசம் – உறை.

அசுத்த மாயா தத்துவம் ஏனைத் தத்துவங்களுக்கும், சரீரங்களுக்கும் காரணமாக இருத்தலால், அதனால் உண்டாகிய சரீரம் காரண சரீரம் என்றும்; அச்சரீரம் பெற்ற அளவில் கேவலத்தில் ஒன்றுமின்றி நின்ற ஆன்மாவுக்கு அறிவு இச்சை செயல்கள் பொதுவகையில் விளக்கமுற, அவ்வளவில் அம்மயக்க அறிவால் ஓர் ஆனந்த உணர்ச்சி நிகழ்தலின், அஃது ஆனந்தமயகோசம் என்றும் பெயர் பெறும்.

காலம், நியதி, கலை, வித்தை, அசாகம் என்னும் ஐந்து தத்துவங்களும், ஆன்மாவுக்கு ஐந்து சட்டங்களைப் போன்து இருத்தலால் அவற்றால் உண்டாகிய சரீரம், கஞ்சுக சரீரம் என்றும், அச்சரீரத்தால் ஆன்மாவின் அறிவு இச்சை செயல்கள் சிறப்பு வகையால் விளக்கமுற்று விடயபோகங்களை அறியும் இயல்பும், ஆற்றலும் பெறுமாதலின், அவ்விசேட அறிவை உண்டாக்கும் சரீரம், விஞ்ஞானமயகோசம் என்றும் பெயர் பெறும்.

சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் முக்குணங்களாலாகிய சரீரம் குணசரீரம் என்றும், அம்முக்குணங்கள் மனம் முதலிய அந்தக் கரணங்களைத் தம்முள் அடக்கி நிற்றலின், அது மனோமயகோசம் என்றும் வழங்கப்பெறும்.

குங்கும பூதங்களாகிய தன்மாத்திரைகளால் அமைந்த சரீரம் நுண்ணிய அணுவடிவினதாய் நிற்றலின், சூக்குமசரீரம் என்றும், அச்சூக்குமசரீரம் பிராணன் என்னும் வாயுவோடு நிற்றலாலும், தான் நீங்கும் காலத்தும் அப்பிராணவாயுவோடு கூடியே நீங்குதலாலும், பிராணமயகோசம் என்றும் சொல்லப்படும்.

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் தூல பூதங்களால் உண்டாகிய சரீரம், தூலசரீரம் என்றும், அவை உணவால் வளர்க்கப்படுதலின், அன்னமயகோசம் என்றும் கூறப்படும். ஆன்மாவானது இந்த ஐந்து கோசங்களின் வேறாயும், அவற்றோடு சேர்ந்து அதுவதுவாகவும் நின்று, அவற்றைச் செலுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தமயகோசம், விஞ்ஞானமயகோசம், மனோமயகோசம், பிராண மயகோசம், அன்னமயகோசம் என்னும் ஐந்தும் மாயையினின்று ஒன்றுக்கொன்று தூலமாய்த் தோன்றுவனவாகும். ஆனந்தமய விஞ்ஞானமய கோசங்கள் மிகவும் மென்மையானவை. ஆதலின் அவைகள் தோற்பாவையைப் போலும்! மனோமய, பிராணமய கோசங்கள் முன்னைய இரண்டிலும் சிறிது வன்மையுடையவை. ஆதலின், அவைகள் மரப்பாவையை ஒக்கும். அன்னமயகோசமாகிய தூலசரீரம் மிகவும் பருமை வடிவமுடையதாதலின், ஏனைய நான்கிலும் பருமையும் வலிமையும் பெற்றிருக்கும். ஆதலின் அதற்குத் தேர் உவமையாகக் கூறப்படும்.

மேற்கூறிய ஐந்து கோசங்களையும், ஆன்மாவானது வேறாயும், ஒன்றாயும் கலந்து நின்று இயக்குவிக்கும். நடிகன் ஒருவன் பலவகைக் கோலங்களையும், வேடங்களையும் மேற்கொண்டு அவ்வவற்றின் வண்ணமாய் நின்று நடிக்கின்ற தன்மைபோல, ஆன்மாவும் இவ்வைந்து கோசங்களில் வயப்பட்டுநின்று, இயங்கி நிற்கும். இத்தகையதொரு பெரும் தத்துவ நுட்பத்தையே, திருக்கோயில்களில் நடைபெறும் தேர்த் திருவிழாக்கள், எளிய பாமர மக்களும் இனிது உணர்ந்து கொள்ளும் வண்ணம் உருவக முறையில் கட்புலனாக்கிக் காட்டி விளக்குகின்றன.

**ஞானாமிர்தம்:**

சைவ சித்தாந்த நூல்களுள் பழமையும், பெருமையும் வாய்ந்த ஞானாமிர்தம் என்னும் சிறந்த நூல், இக்கருத்தை தனது பாடல் ஒன்றில், விரிவாக முற்றுருவகம் செய்து விளக்கியிருக்கின்றது. சிவஞானபோதம் ஆன்மாவை 'அமைச்சரோடு கூடிய அரசன்' என உருவகம் செய்தது. சிவஞான சித்தியார் அதனையே 'படைகொடு பவனி போதும் பார் மன்னன்' என்னும் தொடரால், மேலும் சிறிது விரித்துரைத்தது. அதனையே தொடர்ந்து பின்பற்றி, முற்றுருவகமாக்கி முடித்துக் காட்டி விளக்குகின்றது. ஞானாமிர்தம்! உடல் ஆகிய தேரில் உயிர் ஆகிய அரசன், உலகம் ஆகிய மாடவீதியில், உலாவருதலை அழகுற உருவகம் செய்து, ஞானாமிர்தம் பின்வருமாறு நவிலுகின்றது.

**உடல் தேரில் உயிரின் உலா:**

ஆன்மா அரசன், உடல் அரண்மனை, புருவநடு திருவோலக்க மண்டம், கண்டம் நாடக அரங்கு, இருதயம் மந்திராலோசனை மண்டபம். உந்தி அந்தப்புரம் மூலாதாரம் பள்ளியறைக் கட்டில், இவ்விடங்களில் முறையே நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் (சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்) என்னும் ஐந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவத்தைகள் நிகழும். இந்நிலையில் முறையே 35,25,3,2,1 எனக் கருவிகள் தொழிற்படும். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக் கரணங்கள் நான்கும், அமைச்சர்கள், காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்பன கவனம். நிலம், நீர், தீ, கால், வெளி என்னும் ஐம்பெரும் பூதங்களும் தேர், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும்அறிகருவிகள் ஐந்தும், முறையே ஒற்றர், சூதமாகதர், தூதுவர், புரோகிதர், மெய்க்காப்பாளர், நாக்கு, கால், கை, எருவாய், கருவாய் (வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம்) என்னும் தொழிற் கருவிகள் ஐந்தும், முறையே குதிரைவீரர், யானைவீரர், தேர்வீரர், காலாட்கள், படைத்தலைவர், அறிகருவிகளுக்கு நுகர்பொருளாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன அகப்பரிவாரம். தொழிற்கருவிகளுக்கு நுகர்பொருளாகிய உரை, நடை, கொடை, போக்கு, இன்பம் (வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம்) என்பன புறப்பரிவாரம், பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்னும் பத்துவகை வாயுக்கள் ஆகிய பரிவாரங்களுடன், ஆன்மாவானது உடலாகிய தேரை ஊர்ந்து நின்று, உலகமாகிய மாடவீதிகளில் உழன்று திரிந்து வருகின்றது. இதனை ஞானாமிர்தம் என்னும் சைவசித்தாந்த ஞானநூல் பின்வருமாறு விரிவாக விளக்கிக் கூறுகின்றது.

காலகொடுத்து இருகை மூட்டி வாழிய
வெந்நிற் றண்டென் விடங்கத்து இன்னியற்
பழுக்கழி நிரைத்துச் சிரைக்கயிறு அசைத்து
மயிர்த்தோல் வேய்ந்து சுவர்த்தசை நிறீஇ
ஐம்புலச் சாளரத்து அரும்பெறன் மாடத்து
உம்பர் மணிக்குடச் சென்னிப் பொங்கிய
கூந்தற் பதாகை நான்குநிலை தழீஇய
ஆங்கினிது அமர்திறன் அறையின் ஆன்ற
சாக்கரம் சொப்பனம் சுழுத்தி துரியம்
பிருகுடி நாப்பண் ஒருபெருங் கந்தரம்
மருமத்து ஆதி வலஞ்சுழி உந்தி
உறும்நான்கு அங்குலி உம்பர் வரன்முறை
செவிமெய் கண்வாய் மூக்குஎனப் பெயரிய
வாயில் மிலேச்சர் சாரணர் தூதர்
சூதர் மாகதர் புரோகிதர் என்ற
மேதகு புத்திஇந் திரியமும் தீதறு
வாக்கொடு பதம்கை பாயு உபத்தம்என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவுளி மறவரும் யானை வீரரும்
திகிரி தூண்டிய தறுக ணாளரும்
வன்கண் மள்ளரும் தந்திரத் தலைவரும்
என்கரு மேந்திரியத் திறனும், எஞ்சிய
ஓசை கூட்டம் உருவம் இரதம்
கந்தம் உரைநடை கொடைபோக்கு இன்பம்என்
விடயப் பல்பரி சனமும், மிடையாப்
பிராணன் அபானன் உதானன் வியானன்
சமானன் நாகன் கூர்மன் கிருகரன்
தேவ தத்தன் தனஞ்சயன் என்ற
ஈரைந்து உறுதிச் சுற்றமும், நீதி
சிந்தித்து ஆய்ந்து துணிந்து செயற்படும்
அந்தக் கரண அமைச்சரும்; தத்தம்
முறையுளி வழாது துறைதோறு ஈண்டிச்
சாதுரங் கத்து நீதி யாகிப்
பேரத் தாணி சீர்பெறத் துன்னி
வீசுப வீசி, விரும்புவ விரும்பி
மாசில் காட்சி மன்னன் நீங்கிப்
பல்பரி வாரமும், விள்ளாச் சுற்றமும்,
தந்திரம் புணர்ந்த மந்திர மாக்களும்,
பலர்புகல் அறியா அவைபுகும் அரங்கில்,
நினைந்து ஆய்ந்து துணிந்து செயல்மணந்து இனிதுணர்ந்து
நனவுஎனக் கனவின் நன்நடை வழாஅது
உரைத்தனன் சொப்பனத்து அகத்து இனிதிறந்து
மந்திரத் தலைவனும், வன்கடும்பு அதிபனும்
அந்தர பூமி மருங்கு போகிச்
சிந்தை மாத்திரம் கனவலின் நனவில்
தந்துரை சுழுத்தி இன்றே மந்திரத்
தலைவற் றணந்து விலைவரம்பு இல்லாச்
சிங்கம் சுமந்த ஐம்பேர் அமளிப்
பள்ளி மண்டபத் தானும், தனாது
திகிரி உருண்ட பெருவனப்பு ஏய்ப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிச் சுற்றத் துறுவளியெடுப்ப
ஏற்றம் இழிவு சீற்றம் ஆற்றல்
இழிச்சல் பழிச்சல் இன்பத் துன்பம்
ஒழித்தனன்; துரியத்து அழித்தினிது அதீதத்து
ஒருவகை எங்கணும் ஆகி இருள்இரி
சுடர்தொழிற் சாக்கிரத்து ஆங்கண் நான்கின்
இடைத்தகைத் தெரிதனிற் றெரியும் ஆறே.

**வாகீசமுனிவர் அருளிச் செய்த**
**ஞானாமிர்தம்**

இங்ஙனம் ஞானாமிர்தம் கூறும் ஆன்மீக ஞான அனுபவச் செய்தியை, ஓரளவு எளிய மக்களும் உணர்ந்து கொள்ளும்படி கட்புலனாக்கிக் காட்டும் அரியதோர் அமைப்பே, தேர்த்திருவிழாவாகும் எனலாம்.

தோற்பாவைக் கூத்தும், தொல்லை
    மரப்பாவை இயக்கமும், சீர்
தேர்ப்பாரிற் செலவும் வேறாய்ச்
    செலுத்துவோர் செய்தி தானும்,
பார்ப்பாய வேடம் கட்டி
    ஆடுவோர் பரிசும் போலும்,
ஆர்ப்பாய காயம் தன்னை
    ஆன்மாநின்று ஆட்டு மாறே.

படைகொடு பவனி போதும்
    பார்மன்னன் புகும்போது இல்லில்
கடைத்தொறும் விட்டு விட்டுக்
    காவலும் இட்டுப் பின்னர்
அடைதரும் தனியே அந்தப்
    புரத்தினில்; அதுபோல் ஆன்மா
உடலினில் அஞ்சு அவத்தை
    உறும்; உயிர் காவல் ஆக;

எனவரும் சிவஞானசித்தியார் சுபக்கச் செய்யுட்கள் (214, 222) இரண்டும், இக்கருத்தை வலியுறுத்தும் சான்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைய செய்யுட்கண், உயிரானது தூலவுடலை இயக்கும் தன்மை, ஒரு பெரிய தேரானது தரையில் ஊர்ந்து செல்லுதல் போலும் என்னும் கருத்தில், "ஆர்ப்பாய காயம் தன்னை ஆன்மா நின்று ஆட்டுமாறு, தேர் பாரிற் செல்லும் பரிசுபோலும்" என அருளிச் செய்யப் பெற்றிருத்தல் காணலாம். பின்னைய செய்யுளின்கண், உயிரை அரசனாக உருவகம் செய்து, உயிரானது உடலை இவர்ந்து ஊர்ந்து செலுத்தும் தன்மையை "மன்னன் படைகொடு பவனி போதல்" போலும் என்று குறிப்பிட்டிருத்தல், ஊன்றி உளங் கொளத்தக்கது.

**திருத்தேர் விளக்கம்:**

தேரின் அமைப்பும் உறுப்புகளும் பற்றி, வேறுசில விளக்கங்களும் கூறப்படுவதுண்டு. மந்திரகேசரி மலைகள் அச்சு; சூரிய சந்திரர் சக்கரம்; ஆறு பருவங்கள் சந்தி; பதினான்கு உலகங்கள் பதினான்கு தட்டுகள்; ஆகாயம் ஆசனம்; உதயகிரி அஸ்தகிரிகள் கூவிரம்; நதிகள் கொடிகள்; நட்சத்திரங்கள் விதானம்; மோட்ச உலகம் மேல்விரிவு; யாகங்கள் சட்டம்; நாள் முதலியன குறுக்கு மரங்கள்; அஷ்ட மலைகள் தூண்கள்; அஷ்டதிக்கு யானைகள் தாங்கும் ஆதாரங்கள்; ஏழு கடல்கள் தேர்ச்சீலைகள்; கன்மஞானேந்திரியங்கள் கலங்கள்; கலைகள் முளைகள்; வேதாங்க உபாங்க மனுசாத்திரங்கள் மணிகள்; வாயுக்கள் படிகள்; நான்கு வேதங்கள் குதிரைகள்; கங்கை முதலிய தேவமாதர்கள் சாமர மிரட்டுவோர்; ஊர்வசி முதலிய கணிகைமகளிர் நடனம் புரிவோர்; மேருமலை வில்; சரசுவதி வில்லிற்கட்டிய மணி; வாசுகி நாண்; விஷ்ணு பாணம்; அக்கினி தேவன் பாணத்தின் முனை; வாயுதேவன் அம்பிறகு; பிரமன் சாரதி; திரிபுரங்கள் மும்மலம்; தாரகாட்சன், கமலாட்சன், வித்தியுன்மாலி எனும் மூ அசுரர் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் எனும் மூவகையான்மாக்கள்; தேவபதம் மோட்சபதமாகிய திருவடி எனப் பெரியோர்கள் கூறுவதுண்டு.

மற்றொருவகை, உச்சிக்குடை பிரமரந்திரம்; கலசம் சோடசாந்தத்தானம்; மேலுள்ள முதலாமடுக்கு துவாதசாந்தத்தானம்; இரண்டாம் அடுக்கு மஸ்தக ஆதித்தானம்; மூன்றாம் அடுக்கு மஸ்தக மத்தியத்தானம்; நான்காம் அடுக்கு மஸ்தகாந்த ஸ்தானம்; ஐந்தாம் அடுக்கு லலாடமத்தி; ஆறாம் அடுக்கு புருவமத்தி; நடுவேயுள்ள ஏழாம் அடுக்கான 32 குத்துக்கால்கள் 32 தத்துவம்; முற்றுறைகள் கண்கள்; பிற்றுறைகள் சிகைகள்; பாகத்துறைகள் இருசெவி; பீட முதற்பகுதி வாய்; இடப்பக்கத்திலுள்ள இருகுதிரை வடிவங்கள் இடப்பாக சூரிய சந்திர கலாவாசிகள்; வலப்பாக சூரிய சந்திர கலாவாசிகள்; சாரதி வடிவம் மும்மலரூபமும் நாசியுமாகும்; எட்டாம் அடுக்கு இடப்பகுதி அந்தக்கரண சொரூபம்; இது கண்டத்தானமாகும். அதன் கீழ் இடப்பகுதி ஐந்தவத்தை, ஐங்கோசம், இராகாதி பதின்மூன்று அதன் குணங்களுமாகும். இது இருதயம்; கீழ்ப்பகுதி தசேந்திரியமும், நாபித்தானமுமாகும்; அதன் கீழுள்ள அச்சு பஞ்சபூதம், குண்டலி, சத்திதானம் என்பவனவாகும்; சக்கரங்கள் தசவாயுக்களும் இரு கால்களுமாகும்; இவ்வாறு தேரானது பிண்டவடிவமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே சக்கரங்களாகிய தசவாயுக்களை நிறுத்த, அசைதல் முதலிய வினைகள் ஒழியும். சீவன் தன்மனத்தை முறையே மேலாக விளங்கும் உந்திக் குண்டலியிலிருந்து நாபிக்கும், பின் இருதயத்துக்கும், அங்கிருந்து கண்டம், வாய், நாசி, இருகண் இவைகளின் வழியாக மேனோக்கி லயப்படுத்தி, அங்கிருந்து ஆறாம் அடுக்காகிய புருவமத்தியிலும், அங்கிருந்து ஏனைய அடுக்குகளாகிய மஸ்தக அந்தம் மத்தி ஆதித்தானங்களிலும், துவாதசாந்தத்திலம் லயப்படுத்தி, அங்கிருந்து உச்சிக்குடையாகிய பிரமரந்தரத்தில் ஏற்றி லயப்படுத்திப், பரமானந்த ரூபியாக வேண்டும் என்பதையே தேரின் அமைப்பும் உறுப்பும் குறிக்கின்றன.

**முடிவுரை:**

இத்தகையபற்பலஉயரியதத்துவநுட்பங்களைஉணர்த்தும்முறையில்தேர்த்திருவிழா அமைந்துள்ளது. ஊர்மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து, அன்புடன்கூடித் தேரை இழுத்து, வலம்செய்வித்து இறைவனை வழிபட்டு மகிழ்கின்றனர். இதனால் மக்களிடையில் உள்ள வேறுபாடுகள் அனைத்தும் நீங்கி, மக்கள் அனைவரும் அன்பினால் ஒன்றுபட்டு, இன்பம் எய்தி மகிழ்ந்து வாழ்வதற்கு, தேர்விழா பெரிதும் துணைபுரிகின்றது. இத்தகைய தேர்விழாக்கள் எங்கும் இனிது நடைபெற்று மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு மகிழ்ந்து இன்புற்று வாழ, எல்லாம் வல்ல திருமுருகன் திருவருளைச் சிந்தித்து வந்திப்போமாக.

சூலம் பிடித்தெம பாசஞ் சுழற்றித் தொடர்ந்துவரும்
காலன் றனக்குகொரு காலுமஞ்சேன் கடல்மீதெழுந்த
ஆலங்குடித்த பெருமான் குமார னறுமுகவன்
வேலுந்திருக்கையு முண்டே நமக்கொரு மெய்த்துணையே!

– கந்தரலங்காரம்

நன்றி - சித்திரத்தேர் திரு உலா - 08.09.1984 ஸ்ரீ செல்வச்சந்நிதி கந்தசுவாமி கோவில் தொண்டமானாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தேரின் மகத்துவம்

ஆத்மஜோதி
ந.முத்தையா

தேர்கள் நமது புராதன கலைச் செல்வங்களின் மகிமைக்கு சான்றாக திகழ்வன. மகோற்சவ விழாக்களில் இடம்பெறும் தேரோட்டங்கள் மக்கள் மத்தியில் சமய எழுச்சியையும் பேதமற்ற மனப்பான்மைகளையும் விருந்தோம்பும் பண்பாட்டையும் விளக்கக் காண்கிறோம்.

தேர் நிர்மாணம் ஆழமான தத்துவப் பொருட்கள் விளக்கி நிற்கும். முழு உலகமே தேரின் வடிவமாக, பிரபஞ்ச சிருஷ்டி அனைத்தும் அதில் அடங்கிக் காட்சி அளிக்கும். ஆகவே இப்பிரபஞ்ச இயல்பை நன்கு தேர்ந்துகொள் என்ற சிறந்த அறிவுறுத்தலைக் காட்டி நிற்பது தேர்.

பிரபஞ்சத்தின் உள்ளேயும் வெளியேயும் நின்று அதனைப் படைத்தும் காத்தும் அழித்தும் மறைத்தும் அருளும் இறைவன் பிரபஞ்சமாகிய தேரினுள்ளேயும் வெளியேயும் நின்று அருள்புரியும் திருவருள் காட்சியை நாமெல்லாம் காணும் நாள் தேர்த்திருவிழா நாளாகும். சிவபெருமானுடைய பஞ்ச கிருத்தியங்களில் அழித்தல் தொழிலின் அறிகுறி நிகழ்வாக விளங்குவது தேர்த் திருவிழாவாகும்.

முதல்முதல் தேரோட்டிய பெருமை சிவனுக்கே உரியதாகும். தாரகாக்கன், அகமலாக்கன், வித்யுன்மாலி என்னும் முப்புர அசுரர்களையும் அழிக்கத் தேரில் புறப்பட்டார் சிவபெருமான். பூமியைத் தேராகவும், சூரிய சந்திரர்களை சில்களாகவும் கொண்டு அமைந்த அத்தேர் மகாமேரு மலையை வில்லாகவும் வாசுகி என்ற பாம்பை நாணாகவும் திருமாலை அம்பாகவும் கொண்டு புறப்பட்டார் இறைவன். அம்பாக இருந்த திருமால் நான்தானே முப்புரங்களை அழிக்கப்போகிறேன் என்று தற்பெருமையுள்ளார். இந்த நினைவை உணர்ந்த சிவபெருமான் புன்முறுவல் பூத்தார். அப்புன்சிரிப்பிலே, முப்புரங்கள் அழிந்தன. திருமால் ஆகிய அம்பு, பயன்படுத்தப்படவில்லை. முப்புரங்களோடு திருமாலின் அகந்தையும் அழிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் திருமூலர் அழகாகக் கூறுகின்றார்.

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பார்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல் காரியம்
அப்புரம் எய்தமை யாரறிவாரோ"

மும்மலங்களையும் அழித்தலே அழித்தல் தொழிலின் தத்துவமாகும்.

'ஊர் கூடித் தேரிழுத்தல்' என்றொரு பழமொழி வழங்கி வருவதை யாரும் அறிவர். ஒற்றுமைக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். "அரிசிப் பொரியோடு திருவாரூர் தேரும்" என்றொரு பழமொழியும் உண்டு. திருவாரூரில் உள்ள தேரே உலகில் உள்ள தேர்களிலெல்லாம் மிகப்பெரியது. அதனை இழுக்கத் தொடங்கினால் இருப்புக்கு வந்துசேர ஒரு மாதகாலமாகும். அதிகாலை ஏழு மணிக்கு ஊரில் உள்ளோர் அனைவரும் வந்து வடம் பிடிப்பர். காலை 8 மணிவரை இழுப்பர். பத்து மீற்றர் தூரம் வரைதான் இழுக்க முடியும். மாலை ஐந்து மணிக்கு வந்து இப்படியே 6 மணிவரை இழுப்பர். இப்படி இழுத்து முடிய ஒரு மாதகாலமாகும்.

'சறுக்கு கட்டை போடுதல்' என்ற பழமொழியும் தேரோட்டத்திலிருந்து பிறந்தது தான். தேரை நேர்வழிப் பாதையில் கொண்டு செல்வதற்கு போடும் தடுக்கட்டைக்கு சறுக்குக் கட்டை என்று பெயர். தேரை உரிய வழியில் கொண்டு செல்வதற்கு சறுக்குக் கட்டை போடுவதுண்டு. சிலர் நற்கருமங்கள் எல்லாவற்றிற்குமே சறுக்குக் கட்டை போடுவதுண்டு. தீய வழிகளில் செல்வதை சறுக்குக் கட்டை போட்டுத் திருப்பினால் அர்த்தமுண்டு. ஒருசிலர் நல்லவற்றிற்கும் சறுக்குக் கட்டை போடுவதையே வழக்கமாகக் கொண்டுள்ளார்கள். அதில் அர்த்தமில்லை. அச்செயல் நீக்கப்படுதல் வேண்டும்.

பொதுவாக இறைவனை நாடி மக்கள் கோயிலுக்கு வருவதே வழக்கம். ஆனால் தேர் விழாவிலே மக்களை நாடி இறைவன் வருகிறான். கோயிலுக்குச் சென்று வழிபட முடியாத மக்களின் பொருட்டு இறைவனை அவர்களின் அண்மைக்குக் கொண்டு வரும் முறையாக தேர்த் திருவிழா ஆரம்பித்திருத்தல் வேண்டும். தேரிலே தெய்வத்தை எழுந்தருளிவித்து ஊர்வலம் வருவது மிகப் பழைய காலம் முதல் இருந்து வந்தது. கிறிஸ்துவிற்கு பின் 5ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலே இந்தியாவுக்கு வந்த சீன யாத்திரிகனான பாஹியன் தான் கண்ட தேரோட்ட விழாவொன்று பற்றித் தனது நூலிலே குறிப்பிட்டுள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்திருவிழா என்றால் ஊர் மக்களின் உற்சாகம் கரைபுரண்டோடும். வடம் பிடிக்க மக்கள் முந்துவர். இதனை வாகீச கலாநிதி கி.வா.ஜகந்நாதன் அவர்கள் ஒரு பாடலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

வடம் பிடிக்க வாரீர்
வடம் பிடிக்க வாரீர் – திருத்தேர்
வடம் பிடிக்க வாரீர்

வடம் பிடித்தால் இறையுலகில்
இடம்பிடிக்கலாம் என்று
மாதவத்தோர் ஓதுவதை
மதிப்புடனே எண்ணியிங்கு (வடம்)
ஆண்மை அழகு செல்வம்
அன்பு சிறந்த பக்தி
ஆரும் மதிக்கும் வளம் அமையும்
எனவே நீங்கள் (வடம்)

நன்றி – தேர்த்திருப்பணி மலர் – 14.04.2002 அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலயம் தாவடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தேர்த் திருவிழா இறைவனுக்குரிய ராஜோபசாரம்

**கா.கைலாசநாதக் குருக்கள்**
முன்னாள் இந்துநாகரிகப் பேராசிரியர், யாழ்.பல்கலைக்கழகம்

இறைவன் உறைவிடம் கோவில் எனப் பிரசித்தமான பெயர் பெற்றது. கோ என்பதற்கு அரசன் என்று பொருள் உண்டு. இல் என்றால் வீடு என்று பொருள்படும். கோவில் என்பது அரசன் வசிக்கும்மாளிகை. அரசனைத் தெய்வமாகப் போற்றும் பாரம்பரியம் நெடுங்காலமாக இந்துப் பண்பாட்டில் நிலவிவருவது. எல்லாத் தெய்வங்களின் அம்சங்கள் திரண்டு உருப் பெற்றதன் விளைவு அரசன் என மூலநூல்கள் கூறும், அரசன் தெய்வம் என்ற இரு நிலைகளும் வேறுபாடு இன்றி நெருங்கி ஒற்றுமை பெற்றதன் விளைவை கோயில் என்ற பிரயோகம் தெளிவாகக் காட்டுகின்றது.

உபசாரங்கள் பெரியவர்களுக்குச் செய்யும் உயரிய மரியாதையாகும். அவரவர் அந்தஸ்துக்கு ஏற்ப மரியாதை செலுத்தும் மரபு இன்றும் எம்மிடை நிலவி வருகின்றது. தெய்வத்திற்குச் செய்யும் உபசாரம் தேவோபசாரம் அரசருக்குச் செய்யும் உபசாரம் ராஜோபசாரம். சந்தனம், மலர், தூபம், தீபம், நைவேத்தியம் என்ற ஐந்தும் அடிப்படைகளான தேவோபசாரங்கள். இவை 16 ஆக விரிந்து ஷோடசோபசாரங்கள் எனப்படுகின்றன.

அரசனுக்குச்செய்யும்உபசாரங்கள்பல. இவற்றைஅரசன்கொலுவீற்றிருக்கும்வேளை நிகழ்ந்ததாக நூல்கள் வருணிக்கின்றன. ஆஸ்தான மண்டபத்தில் அரசன் சிங்காசனத்தில் கொலு வீற்றிருப்பது அரச மரியாதைகளில் முதன்மையானது. அவனைச் சுற்றிப் பணியாளர்கள் பலர் பலவகை உபசாரங்களைச் சமர்ப்பிப்பர். இவற்றுள் முக்கியமானவை சாமரை இரட்டல்; குடை பிடித்தல்; ஆலவட்டம் ஏந்தி நிற்றல் முதலியன. அரசன் பவனி வரும்பொழுது நெற்பொரி, மலர் தூவுதல், குதிரை ரத, கஜ பதாதி அணி வகுப்புகள், யானை, ஒட்டகம் முதலியன முன் செல்ல அரசன் பவனிவருதல் தனிச் சிறப்பு வாய்ந்து. அரசனின் பெருமதிப்பை வெளிப்படுத்தி நிற்பன. இவ்வகை உபசாரங்களில் முக்கியமானது அரசன் தேரில் பவனி வருதல். போருக்குப் புறப்படும் வேளையும் வேட்டையாடும் வேளைகளிலும் அரசனுக்கு தேர், குதிரை ஆகியன ஊர்திகளாக அமைந்தன. இன்று இதுவரை கூறப்பட்ட ராஜோபசாரங்கள் தேரில் பவனி வருதல் உட்பட கோயிலில் எழுந்தருளியிருக்கும் கோவாகிய இறைவனுக்கு நிகழக் காண்கின்றோம். கோயில்களில் நிகழும் ஆடம்பரமான நிகழ்ச்சிகள் யாவுமே ராஜோபசாரமாக அமையக் காண்கின்றோம். மாலைகளால் வகை வகையான அணிகலங்களால் தங்க வைர கிரீடங்களால் அணி செய்தல், பலவகை ஊர்திகளில் – வாகனங்களில் – பவனி வரும் படி எழுந்தருளச் செய்தல் யாவுமே ராஜோபசாரங்கள். மரபு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றை அடிப்படையாகக் கொண்டு விரியலாயின. இவ்வாறு நிகழும் ராஜோபசாரங்கள் இம்மரபை விபரித்துக் கூறுவன ஆகமங்கள்.

இவ்வகை உபசார வரிசைகளுள் ஒன்றாயமைவதும், தலை சிறந்ததும் தேர்த் திருவிழாவாகும். பிரமோற்சவம் எனப்படும் பெருந்திருவிழா ஆலயங்களில் நடைபெறும். பிரமோற்சவத்தில் நிகழும் விழாக்களுள் தனிச்சிறப்பு வாய்ந்தது தேர்த்திருவிழா. தேர் அரசர்களால் போரில் பெரிதும் உபயோகிக்கப்பட்டதைப் பழைய காலத்துப் போர்முறைகளின் வருணனைகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். குதிரைகளால் இழுத்துச் செல்லப்படும் பெரும் ஊர்தியாகிய இரு பொருத்தமான சில்லுகள் இரதத்தை இயங்க வைப்பன. குதிரைகளைச் செலுத்தும் சாரதி தனக்குதிய ஆசனத்தில் அமர்ந்திருப்பான். அரசன் தேரின் நடுவில் கம்பீரமாக இருந்து போர் நிகழ்த்துவான். போரே அரசனின் வீரத்தைப் பிரகடனம் செய்யும் நிகழ்ச்சி, போரில் ஈட்டும் வெற்றியே அரசன் வீரத்தை, பெருமை, புகழை உயர்த்திக்காட்டும்.

அரசனே கண்கண்ட தெய்வம். தெய்வம் அரசனெனப் போற்றற்குரியது என்று அரசனுக்கும் தெய்வத்திற்கும் உயர்ச்சி கற்பித்த அடிப்படை நிலையில் கோயில் வழிபாட்டு முறை இராஜோபசாரங்களை கோயில்களில் இடம்பெறச் செய்தது. வீரத்தினால் சிறப்புமிகும் அரசனைப்போன்று தெய்வமும் வீரம்மிக்க தோற்றமும் பொலிவும் பெற உருவானத்தில் வியப்பெதுவுமில்லை. அட்டவீரட்டாங்கள் இறைவனின் எட்டு வீரச் செயல்கள் நிகழ்ந்த இடங்கள், முப்புரங்களை எரித்தது. காமனைக் காய்ந்தது, காலனை உதைத்தது, அந்தகனை அழித்தது முதலான எட்டுவீர நிகழ்ச்சிகள் நிகழ்ந்த எட்டுப் பெருந்தலங்கள் சிவபிரானைத் தலைசிறந்த வீரனாகச் சித்தரிக்கக் காண்கின்றோம். சிவபிரானினின்றும் அபின்னமான முருகன் ஆறுமுகங்களும் பன்னிருகரங்களும் கொண்டு தோற்றும் பொழுது அவன் பன்னிரு திருக்கரங்களும் தலைசிறந்த வீரனுக்குரிய சின்னங்களையும் படைக்கலங்களையும் தாங்கி நிற்கக் காண்கின்றோம்.

இதுவரை கூறிய கருத்துக்களை முக்கிய அடிப்படையாகக் கொண்டு நோக்கும் பொழுது தேரில் இறைவனை எழுந்தருளுவித்து விழா எடுப்பதன் காரணம் தெளிவாகும். முன்னர் கூறியவாறு தேரமைப்பிலும் மரபு, வழிகளை வகுத்து வரையறை செய்கின்றது. தேர் இவ்வாறு அமைதல் வேண்டும் என்பதை ஆகமங்களும் சிற்ப நூல்களும் வரைவு காண்கின்றன. தேர் அசைந்து பவனிவரும் அமைப்பைக் கொண்ட கோயில் என்றே சொல்லலாம். கோயில் கருவறைபோல் விமானம்தூபி முதலிய அம்சங்களைத் தாங்கி எழில் மிகுந்து விளங்குவது கவனிக்கற்பாலது. இன்னும் சற்று ஆழ்ந்து நோக்கும் பொழுது கோவில்கள் கூட தேரின் அமைப்பை ஏற்று இருபாகங்களிலும் பெரும் சில்லுகள் பொருந்தியதாக குதிரைகளால் இழுக்கப்படும் நிலையில் சித்தரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். கோயில்களில் விமானங்களில் இறைவனின் வீரச் செயல்களையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலங்களையும் சித்திரங்களையும் இடம்பெறச் செய்திருப்பது போன்று, தேரின் அடித்தளம் அதாவது சில்லிலிருந்து பீடம் வரையுள்ள பகுதிகளை, 3 தளங்களாகவோ, 5 தளங்களாகவோ வசதிக்கேற்பப் பிரித்து ஒவ்வொரு தளத்திலும், இறைவன் திருவருட் கோலங்களையும், பெருமைகளும், வீரச் செயல்களும் சித்தரிக்கப்பட்டிருக்கக் காண்கின்றோம்.

சிவபிரான் நிகழ்த்திய அட்ட வீரட்டங்களில் முப்புரங்களையெரித்த நிகழ்ச்சி திரிபுர தகனமெனப்படும். இத்திரிபுரத் தகனத்திற்காக இறைவன் புறப்பட்ட கோலாகலமான வைபவத்தை புராணங்கள் வருணிக்கக் காணலாம். உலகமே தேர்; வாசுகி நாண்; சூரிய சந்திரர்கள் இரு சில்லுகள்; நான்கு வேதங்களும் நான்கு குதிரைகள்; பிரமன் சாரதி; மேரு வில்; விஷ்ணு வில்லிலிருந்து விடுபட்டு அரக்கர்களை அழிக்கும் அம்பு தன்னாலே தான் அரக்கர்களின் அழிவு நிகழப் போவதையிட்டு விஷ்ணு இறுமாப்பெய்தினார். இவ்விறு மாப்பு இறைவனுக்குப் பெரும் சிரிப்பை ஊட்டியது. இச்சிரிப்பு அட்ட ஹாஸம் எனப்படும். இச்சிரிப்பின் வலிமை முப்புரங்களையும் சாம்பராக்கியது. இங்கு இறைவன் தேரில் அமைப்புப் பற்றிய வருணனையும் தெளிவாகக் காணலாம்.

தேர்ச் சில்லிலிருந்து இறைவனை வீற்றிருக்கச் செய்யும் பீடம் வரை மரத்தினால் சிற்ப நுட்பங்கள் பொலியும் வண்ணம் செய்வது மரபு. அதன் மேற்பகுதி சிகரம் வரை ஆண்டு தோறும் விழாவின் போது தடி, கம்பு முதலியவற்றாலும் பல கலைநுட்பம் வாய்ந்த பொருட்களாலும் கட்டிக் கோயில் அமைப்பினைக் கொண்ட விமானம் தூபி முதலியன விளங்கச் செய்வதும் மரபு. திருவாரூர்த் தேரழகு என்ற மொழி பிரசித்தமானது. இந்தியாவில் பிரசித்தமான ஆலயங்களில் எல்லாம் தேர் இவ்வாறே பீடம் வரை சித்திர வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டு மேல்வேலை, மேற்கூறியவாறு பல வண்ணத் துணிகளாலும் பலநுட்பமான பொருட்களாலும் அமைக்கப்படுவதை அங்கு காணலாம். இதைத் தேர் என்று சொல்வது மரபு. மேல்வேலையையும், வருடந்தோறும் கடடி அமைக்காது நிரந்தரமாகச் சிற்பநுட்பங்களுடன் செய்யும் வழக்கத்தை இலங்கையில் உள்ள கோயில்களில் பெரும்பாலும் காணலாம். சில கோயில்களில் கூட்டு வேலைப்பாடுகளுடன் தேரைக் கட்டி எழுப்புவதுண்டு. மேல் வேலையையும் மரத்தினால் சித்திரவேலைத் திறமை நிரந்தரமாக மிளிரும் அமைப்பைக் கொண்ட இவ்வகையூர்தியை இரதம் என்று சொல்லுவது மரபில் வந்துவிட்டது. பழனி, திருப்பதி போன்ற தலங்களில், தங்க இரதங்களில், வெள்ளி இரதங்களில் இறைவன் பவனி வரக் காணலாம்.

தேரில் வீற்றிருந்து சகல உபசாரங்களுடன் பவனிவரும் தெய்வத்தைத் தரிசிப்பது இம்மைக்கும் மறுமைக்கும் பெரும் பயன் தரும் என நூல்கள் கூறுகின்றன.

நன்றி – சிற்பத்தேர் வெள்ளோட்டம் – 10.01.2006 ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானம் காரைநகர் திண்ணபுரம் சிவன்கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இரதோற்சவம்

சாஹிதிய ஸ்ரீமாம்ஸ சிரோண்மணி காஞ்சிபுரம்
**உமாபதி சிவாச்சாரியார்**

ஊரில் திருவிழா என்றால் அனைவருக்கும் மகிழ்ச்சிதான். அதுவும் தேர்த் திருவிழா என்றால் மக்கள் அடையும் ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. தேர்த்திருவிழா என்பது நமது கலாசாரத்தை பறைசாற்றுவது. இன்று மக்களிடையே தேவைப்படும் ஒற்றுமை, சமய நல்லிணக்கம், சகோதரத்துவம் போன்றவை ஏற்பட வேண்டும் என்பதற்காகவே தேர்த்திருவிழாக்கள் நடாத்தினார்கள். ஊர்கூடித்தான் தேரிழுக்க முடியும். நாம் எல்லோரும் கொண்டாடும் தேர்த் திருவிழாவைப் பற்றி நமது ஆகமத்தில் என்ன சொல்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மகோத்சவமானது (திருவிழா) ஸ்ருஷ்டி, ஸ்திதி, லாபம் (சம்ஹாரம்), திரோபாவம், அனுக்ரஹம் என்ற பஞ்ச க்ருத்யங்களை செய்யக் கூடியதாகும். திருவிழாக்களில் சிருஷ்டி என்பது அங்குரார்ப்பணம், கல்யாணம், கொடியேற்றம், ரக்ஷாபந்தனம் முதலியனவாகும்.

ஸ்திதி என்பது வாகனத்தில் பகவானை ஏற்றுதல், ஹோமம், பலி முதலியனவாகும். லயம் (சம்ஹாரம்) என்பது ம்ருத்சங்க்ரணம், ரதாரோஹணம் (தேர்மீது ஏறுதல்) சூர்ணோத்ஸ வம் முதலியனவாகும்.

திரோபாவம்என்பதுதீர்த்தோத்ஸவம்ஆகும். அனுக்ரஹம் என்பது சந்தியாவாஹனம், தரிசனம் (நடராஜ உத்ஸவம்) இதில் லயம் என்பது அழித்தல் என்ற பொருளல்ல. தீய சக்திகளையும், தீய குணங்களையும், தீய எண்ணங்களையும் அழித்து மனிதர்களைதன் வசப்படுத்தலே லயம் (சம்ஹாரம்) ஆகும். ஆகையால், பரமேஸ்வரன் ரதத்திலே ஆரோஹணம் செய்து மனிதர்களின் தீய எண்ணங்களையும், தீய குணங்களையும் தீயசக்திகளையும் அழித்து தன்வயப்படுத்துவதற்காக ரதோத்ஸவமானது நடைபெறுகிறது. ரதமானது மனிதர்களுடைய உருவங்களாகவும் பாவிக்கப்படுகின்றது. அவை எப்படி என்பதைப் பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| தேரின் சக்கரங்கள் | – | பாதங்கள் |
| கீழ் உத்தரம் | – | முழங்கால்கள் |
| கீழ் தளம் | – | தொடைகள் (ஊறு) |
| இரண்டாவது தளம் | – | இடுப்பு (கடி) |
| மூன்றாவது தளம் | – | நாபி (தொப்புள்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நான்காவது தளம் | – | வயிறு |
| ஐந்தாவது தளம் சுவாமி வைக்கும் இடம் | – | ஹ்ருதயம் |
| ஸ்தம்பங்கள் (தூண்கள்) | – | கைகள் |
| தூண்களின் கொடுங்குகள் (கந்தரம்) | – | காதுகள் |
| தேரின் மேல் பாகம் | – | முகம் |
| தேரின் மேல் உள்ள கலசம் | – | மகுடம் |
| அதன்மேல் பாகத்தில் சாற்றப்படும் வஸ்திரங்கள் | – | சிகை (குடுமி) |

ரதம் ப்ரதிஷ்டை செய்யும்போது ஒவ்வொரு அங்கங்களிலும் பல தேவதைகள் பிரதிஷ்டை செய்யப்படுவதுண்டு. அவற்றில் சில:

சக்கரங்களில் சூரிய சந்திரனையும், பதாகங்களில் ஸதருத்ரர்களையும், ரதத்தின் ஹ்ருதய பாகத்தைச் சுற்றிலும் ஹரன், வஜ்ரன், ஏகாங்கன், த்விதண்டகன் முதலானவர்களையும், ஹ்ருதய ஸ்தானமாக இருக்கக் கூடிய ஐந்தாவது தளத்தின் நான்கு திக்குகளிலும் பிரம்மா, விஷ்ணு, தக்ஷிணாமூர்த்தி, ஸ்கந்தர் போன்றவர்களையும், ரதத்தைச்சுற்றி லோக பாலர்களையும், கயிற்றில் பாம்புகளையும், குடையில் பாசுபதாஸ்த்ரபத்தையும் ஆவாஹனம் செய்து பிரதிஷ்டை செய்ய வேண்டும். பின்புசித்ரவஸ்த்ரங்களினால் அலங்காரங்கள் செய்து வாழை, பாக்கு, முதலிய மரங்களைக் கட்டி மாவிலைத் தோரணங்களால் அலங்காரம் செய்து, நான்கு வேதங்களை நான்கு குதிரைகளாகவும், பிரம்மாவை சாரதியாகவும், பாவித்து தரிசனம் செய்து சர்வேஸ்வரினின் திருவருளைப் பெற பிரார்த்திக்கிறேன்.

ஊர் உலகத்தின் நன்மையைக் கருதி நாம் தேர் விழாக்களை ஆகமங்களில் சொல்லியபடி செய்வோமானால் எல்லாம் செழிப்படையும் என்று எண்ணி, புதிய தேர்த்திருவிழாவானது நல்ல முறையில் நடந்து எல்லோரும் இன்புற்று வாழ ஸ்ரீ சிவகாமி உடனமர் ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் திருத்தாள் வணங்கிப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி – சிற்பத்தேர் வெள்ளோட்டம் மலர் – 10.01.2006 ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானம் காரைநகர் திண்ணபுரம் சிவன்கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சிவாலயக் கிரியை மரபில் ரதப்பிரதிஷ்டை

## உத்தரகாரணாகமத்தை அடிப்படையாக் கொண்ட குறிப்புக்கள்

**பிரம்மஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள், பாலகைலாசநாதசர்மா**
சமஸ்கிருத விரிவுரையாளர் (B.A.Hon.M.A,M.Phil)
சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

மிகப் புராதனமான இந்துசமய வரலாற்றிலே சிவாலயக் கிரியை மரபு முக்கியமான இடத்தினைப் பெற்று வருகின்றது. இந்துப் பண்பாட்டின் பல்வேறுபட்ட அம்சங்களுடனும் வரலாற்றுப் பின்னணியிலும், சமயப் பின்னணியிலும், பாரம்பரியப் பின்னணியிலும் பல்வேறுபட்ட மரபுகள் தொன்றுதொட்டு நிலவிவருகின்றன. இவ்வாறு நிலவிவரும் கிரியை மரபுகள் சாஸ்திர விதிகளுக்கு உட்பட்டதாகவும், சில சம்பிரதாயங்களை உள்ளடக்கியதாகவும் நடைமுறையிலே காணப்படுகின்றன. இந்த நடைமுறையானது சமய நிலையிலே ஒரு தனியான இடத்தினைப் பெற்று நிலவி வருகின்றது. சிவாலயக் கிரியை மரபை அல்லது ஆலயக்கிரியை முறைகளைப் பற்றி முதலிலே சாஸ்திர ரீதியாக சிவாகமங்களிலேதான் தெளிவாகவும், விரிவாகவும் கூறப்பட்டுள்ளன. இவற்றை மூன்று நிலைகளிலே பின்வருமாறு சிவாகமங்கள் கூறுகின்றன.

கர்ஷணாதி – பிரதிஷ்டாதி – உற்சவாதி ஸ்ரீ பிராயச்சித்தாந்தம் என்ற ஒழுங்கில் கிரியைமுறைகள் கூறப்பட்டுள்ளன. இங்கு உற்சவம் என்று சொல்லப்படுகின்ற சிவாலயக் கிரியை முறைகளிலே குறிப்பாக வருடாந்த மகோற்சவம், அலங்கார உற்சவம், விசேஷ தின உற்சவம் என உற்சவக் கிரியைகளின் கிரமங்கள் விரிந்து செல்லுகின்றன. உற்சவ காலத்தின் உயர்ந்த திருவிழாவாகவும், சிறப்புக்குரிய நாளாகவும் உயரிய இடத்தினைப் பெற்றுவரும் ரதோற்சவம், அல்லது தேர்த்திருவிழா புராதனமான காலத்தில் இருந்து தமிழர் வாழ்வோடும் இந்துப் பண்பாட்டோடும் ஐக்கியமாகின்றது.

### தேர் பற்றிய ஆரம்ப செய்திகள்

குறிப்பாகதேர்பற்றியஆரம்பசெய்திகளைவேதஇலக்கியங்களிலேகாணமுடிகின்றது. கடையாணி முதலிய தேரின் நுண்ணிய பாகங்கள் பற்றிய குறிப்புக்கள் இருக்கு வேதத்திலேயே காணப்படுகின்றன. யஜுர் வேதத்தின் மிகச் சிறந்த உயர்ந்த பகுதியான ஸ்ரீருத்திரத்திலே "தேரில் செல்பவர்களாகவும் தேரில்லாதர்களாகவும் உள்ள உங்களுக்கு நமஸ்காரம். தேர்களை ஓட்டுபவர்களாகவும், இழுத்துப் பிடித்து நிறுத்துபவர்களாகவும் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கு நமஸ்காரம். தச்சர்களாகவும், தேர் செய்கிறவர்களாகவும் உள்ள உங்களுக்கு நமஸ்காரம். (ஸ்ரீருத்திரம் 4.1, 4.2)" எனக் கூறப்பட்டுள்ளது.

மிகப் பழைமையான கடோபநிஷத்திலே (3.3, 3.4) குதிரை பூட்டிய தேராக இவ்வுடல் உருவகிக்கப்படுகின்றது. இதிஹாஸங்களிலே தேரைப் பயன்படுத்தி வீரப்போர் புரிந்து வெற்றி பெற்ற மன்னர்களுக்கு அதிரதன், மஹாரதன், சமரதன், அர்த்தரதன், தசரதன் போன்ற பெயர்கள் சிறப்பாக வழங்கப்பட்டதைக் காணமுடிகின்றது. பகவான் கண்ணன் அர்ச்சுனனின் தேர்ச்சாரதியாக அமர்ந்து தேரில் இருந்தபடியே கீதையை உபதேசம் செய்தார். புராணங்களிலும் தேர்கள் பற்றிய பல்வேறுபட்ட செய்திகள் இடம்பெறுகின்றன. பூமியையே தேராகக் கொண்டு சிவன் முப்புரங்களையும் எரிக்கப் புறப்பட்ட செய்தி முக்கியமானதொன்றாகும். பிற்காலத்தில் தமிழ்ப் புராணங்களிலும் திருமுறைகளிலும் இது பெரிதும் கூறப்படுகின்றது.

**சிவாகமங்களில் தேர்**

சிவாகமங்களிலே குறிப்பாக காரணாகம உத்தரபாகத்தின் தொண்ணூற்று ஆறாவது படலம் ரதப்பிரதிஷ்டைவிதிப் படலமாகும். இதில் ஐம்பத்திநான்கு சுலோகங்களில் ரதப் பிரதிஷ்டைக்கான விபரங்கள் தரப்பட்டுள்ளன. காரணம், பிரதிஷ்டாகிரியை, பூஜை ரத அலங்காரபூஜை, ரதகதி சக்ர விச்சிந்நபலம், ரதஷச்சிந்நகால உற்சவம், ரத உற்சவகால ராஜ மரணம், அந்யத் பீடாநிவாரணம், மாயாவிர்பத்தி பலம் என ரதப் பிரதிஷ்டைக்கான விபரங்கள் காணப்படுகின்றன.

**ரதத்தின் அமைப்பு**

ஆலயத்திற்குரிய பொருட்களில் முதலிடம் பெறுவது ரதமாகும். தெய்வங்கள் நன்கு அலங்கரிக்கபட்டு பவனி வருகின்ற ஊர்திகளாக தேர்கள் சிறப்பிக்கப்படுகின்றன. ரதலக்ஷணம் கூறும் ஆகம நூல்களும் ரதத்தின் சில்லுகளைப் பற்றியும், ரதத்தின் பல உறுப்புக்களைப் பற்றியும், அமைப்பினைப் பற்றியும், விளக்குகின்றன. ரதத்தின் முக்கிய உறுப்பு சில்லுகளாகும். இவை வட்ட வடிவானவையாகும். இவை பலம் மிகுந்த வளையங்களால் சுற்றிலும் பாதுகாக்கப்படுகின்றன. குக்ஷி, அக்ஷம், சிகை, தந்தம், சித்ரம், கீலம் என்பன ரதத்தின் உறுப்புக்களாகும்.

சால விருட்சம், நாவல், சாரம், சரளம், மகிழ், அர்ஜுனமதூகம், புளி, பர்புரம், வியாக்ரீ, ஷீரிணி, கருங்காலி, கிருசரம், கிருதமாலம், வன்னி ஆகிய மரங்கள் தேர் அமைப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. எனினும் இவற்றுட் சில பெயர்கள் எம்மரங்களைக் குறிக்கின்றன என்பதை தெளிவாக அறியமுடியாதிருக்கின்றது. தேருக்கு அடித்தளமான அடிப்படையாக விளங்குவது ஆதாரம் என்றும் உபதாரம் என்றும் பெயர்பெறுவன. இங்கு தேரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுபொருத்தப்படும் இதன்மேல் ஒன்பது தளங்கள் உண்டு. ஒவ்வொன்றும் மற்றதைக் காட்டிலும் குறைந்த உயரம் வாய்ந்ததாக இருத்தல் வேண்டும்.

**ரதத்தின் பிரிவுகள்**

ரதத்தின் அமைப்பைக் கொண்டு ரதங்கள் ஏழுவகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சதுர வடிவான தேர் "நபஸ்வன் பத்ரகம்" என்றும், அறுகோண வடிவானது "பிரபாஞ்சன பத்ரகம்" எனவும் பெயர் பெறும். "விதான பத்ரகம், பவன பத்ரகம், பிருஷத பத்ரகம், சந்திரக பத்ரகம், அநில பத்ரகம்" என்பன ஏனைய ஐவகைத்தேர்களாகும்.

சதுர வடிவமான தேர் "நகரம்" எனப்படும். எண்கோணவடிவான தேர் "திராவிடம்" ஆகும். வட்ட வடிவானது "வேசரம்" எனப் பெயர்பெறும்.

**ரதசக்ர அமைப்பு**

தேர்கள் பலவகைப்பட்ட சில்லுகளையும், உறுப்புக்களையும் கொண்டு விளங்குவன. யுத்தத்திற்குச் செல்லும் தேர் மூன்று சில்லுகளை உடையது. நித்தியோற்சவத்துக் குரிய தேருக்கு ஐந்து சில்லுகள் உண்டு. மகோற்சவத்துக்குரிய தேருக்கு ஆறு முதல் பத்து வரை சில்லுகள் இருக்கின்றன. இதை அடிப்படையாகக் கொண்டு தேரின் வேதிகைகளின் எண்ணிக்கையும் வேறுபடும். சிவபிரானுக்குரிய தேருக்கு ஒன்பது வேதிகைகள் கூறப்பட்டுள்ளன. ஏனைய தெய்வங்களுக்கு ஐந்து வேதிகைகள் உரியன.

**ரத வேலைப்பாடுகள்**

மயிற் பீலிகைகளாலும், சாமரங்களாலும், தோரணங்களாலும் நல்லோசை தரும் சிறிய மணிகளாலும், ஒளி பொருந்திய கண்ணாடிகளாலும், விசிறிகளாலும், மாலைகளாலும் தேர்களின் மேற்பகுதிகள் அலங்கரிக்கப்பட வேண்டும். தேரின் கீழ்ப்பகுதியில் உரிய தெய்வங்களின் பெருமையுணர்த்தும் உருவங்கள் செதுக்கப்படல் வேண்டும். கீழே அதிஷ்டானத்தில் சிங்கங்கள், யாளிகள், யானைகள், மகரங்கள், நுண்ணிய, மடிப்பு வேலைப்பாடுகள் இடம்பெறுவன. நடனமாடுவோர், பூதங்கள், யாஷர்கள், ஆலயத்தின் புராதன வரலாறுகள், இதிஹாச, புராண, தலபுராணச் செய்திகள் இங்கு சித்திரிக்கப்படுகின்றன.

**ரத வெள்ளோட்டம்**

நடைமுறையிலே ஓர் ஆச்சாரி ஆனவர் (தேர் செய்யும் திறமை படைத்தோர்) குறிப்பிட்ட காலத்திற்குள் குறித்த ஆலயத்தின் அமைப்புக்கு ஏற்றவாறு (பிரதான மூர்த்தி, பிரதான ஸ்தூபி, உற்சவ மூர்த்தி, ஆலயப் பிரமாணம்) தான் நிர்மாணித்த ரதத்தை சம்பிரதாய முறைப்படி தனது தொழிலுக்குரிய சிறப்பான தெய்வம், குலதெய்வம், காவற் தெய்வம், கிராமதேவதைகள், ஆகியோர்களைப், பிரீதிப்படுத்தி ஆச்சாரி ஆனவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவப்படுத்தப்பட்டு, தனது திட்பநுட்பத்தை வெளிக்காட்டி குறித்த தேரை மிகப் பொருத்தமான நல்ல முகூர்த்தத்தில் ஆலய சூழலில் வெள்ளோட்ட, விழா மூலம் அத்தேரை ஆலயத்திற்கு உரித்தாக்குகின்றார்.

**ரதப் பிரதிஷ்டைக்குரிய கிரியை முறைகள்**

குறிப்பிட்ட நல்ல முகூர்த்தத்திற்குரிய நாளில் ரதப் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும். ஓர் ஆலயத்தில் ரதபிரதிஷ்டை செய்யப்படுகின்றது எனில் அச்சிறப்பானது உயிருள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் நன்மை பயக்கின்றது. ஆலய மண்டபத்தில் அல்லது ரத மண்டபத்தில் யாக மண்டபம் அமைக்கப்பெற்று பஞ்சகுண்டங்கள் அல்லது ஏக குண்டம் அமைக்கப்பட வேண்டும்.

**கலசங்களில் பூஜிக்கப்பட வேண்டிய தேவதைகள்**

அந்த யாகமண்டபத்தில் வேதிகை அமைக்கப்பட்டு அதன் மத்தியில் பத்துக் கும்பங்கள் வைக்கப்படவேண்டும். நடுவில் சதாசிவனையும் (அந்த மூர்த்திகளுக்குரிய தேவதை) அஷ்டதிக்குப் பாலகர்களையும் பூஜிக்க வேண்டும் (ஒன்பது தேவதைகள்). பிரதான கும்பத்திற்கு பஞ்சாசன பூஜைசெய்து லயாங்கம், போகாங்கம் செய்யவேண்டும் யாக மண்ட பரிவார கும்பங்களில் சூரியன், சந்திரன், கணபதி, விருஷம், தர்மபதி ஆகியோர்களைப் பூஜித்த பின்பு, பூர்வத்தில் இருந்து ஆரம்பித்து த்விதியாவரணம் தொடக்கம் பஞ்சமாவரணம் வரையுள்ள தேவதைகளை பூஜிக்க வேண்டும். இவ்வாறு பூஜித்த பின்பு அக்கினி குண்டத்திற்குரிய சம்ஸ்காரங்களைச் செய்து பூஜித்த தேவதைக்குரிய ஆகுதிகளை கொடுத்து யஜாதிவரையும் செய்ய வேண்டும்.

**ரதத்திற்கு செய்யவேண்டிய கிரியைகள்**

பவமான மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு பஞ்சகவ்யத்தினால் ரதத்தை ப்ரோக்ஷித்து சுத்திபண்ண வேண்டும். பஞ்சசாந்தி மந்திரத்தை ஜபம் செய்ய வேண்டும். குருவானவர் ஆசாரியை அழைத்து ரதத்திற்குரிய கயிற்றை பரீட்சிக்கவேண்டும். அக்கயிற்றில் மந்திரநியாசம் செய்து அஷ்டநாகங்களை பூஜித்து ஆவாஹனம் செய்ய வேண்டும். ரதத்தின் வேதிகையில் (சுவாமியை எழுந்தருளச் செய்யப்படும் பீடம்) பஞ்சாசனங்களை பூஜித்து நடுவில் குறிப்பிட்ட பிரதான தேவதையை தியானித்து ஆவாகனம் செய்யவேண்டும். லயாங்க, போகாங்க ஆவரண பூஜைகளைச் செய்யவேண்டும். பன்னிரெண்டு ஸ்தபங்களிலும் பன்னிரெண்டு சூர்யர்களையும், நான்கு பக்கங்களிலும் முறையே பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், அநந்தனை ஆவாகனம் செய்யவேண்டும். பட்டிகைகளில் ஏகாதசருத்திரர்களை பூஜிக்கவேண்டும். நான்கு குதிரைகளிலும் நான்கு வேதங்களையும் ஆவாஹனம் செய்ய வேண்டும். ஜீவநியாசம, ஷடத்துவநியாசம் செய்யவேண்டும். புவநாத்துவா, பதாத்துவா, கலாத்துவா, தத்துவாத்துவா, வர்ணாத்துவா ஆகிய தேவதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரநியாசம் செய்ய வேண்டும். காமபீஜத்தை ரதத்தின் முன் ஸ்தாபிக்க வேண்டும். யாகமண்டலத்தின் பூர்ணாகுதி செய்து கலசங்களை எடுத்துவர வேண்டும்.

நல்ல முகூர்த்த லக்கினத்தில் எல்லா மங்கள வாத்தியங்களும் முழங்க நிருத்ய, கீத வாத்தியங்கள் சகிதம், கொடி குடை, ஆலவட்டங்களுடன், பிராம்மண தேவர்கள் மந்திர கோஷம் செய்ய சாந்நித்தியம் நிறைந்துள்ள மந்திர பூர்வமான கலசங்களை ரதத்திற்கு ப்ரோக்ஷிக்க வேண்டும். இதன்பின்பு தூப, தீப, நைவேத்திய அலங்காரங்கள் செய்து தீபாராதனை செய்ய வேண்டும். இதன் பின்பே ரதோற்சவத்திற்குரிய நாளில் தெய்வங்களை ஆரோஹணித்து பவனி செய்யப்பட வேண்டும். ரதோற்சவ தினமானது மிகவும் தெய்வீகம் நிறைந்த சமய, தத்துவ உண்மைகள் நிறைந்த நாளாக உற்சவங்களிலே சிறப்பிக்கப்படுகின்றது.

## ரத பிரதிஷ்டையின் பலன்கள்

ரதப் பிரதிஷ்டையானது குறைவில்லாது செய்யப்படின் அதன் பலன்கள் அதிகமாகும் எனக் கூறப்பட்டுள்ளது. ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திக்குச் சிறப்பு, ஆலயத்திற்கு பெருமை மட்டுமல்லாது நாட்டையாளும் மன்னனுக்கு வெற்றியும் கிட்டும். அத்துடன் நாடு, கிராமம், பிரதேசம் என இடத்திற்கு செல்வச் சிறப்பு, வறுமையின்மை, வியாதிகள் நீக்கம், மக்கள் செல்வப்பேறு, லக்ஷ்மிகடாக்ஷம், எஜமான், ஆலய தர்மகர்த்தா, ரதத்தை செய்வோன், செய்விப்போன், ஆச்சாரி, குரு, பக்தர்கள் என அனைவருக்கும் நீண்ட ஆயுள், சர்வசம்பத் பிராப்தி, ஸ்வர்க்கலோகப் பிராப்தி என நற்பலன்கள் கூறப்பட்டுள்ளன.

## ரதப்பிரதிஷ்டையின் பிரதிகூல பலன்கள்

ரதப் பிரதிஷ்டையை குறைவுபடச் செய்யின் பல பிரதிகூல பலன்களை எதிர்நோக்க வேண்டிவரும். நாட்டிலே அல்லது குறிப்பிட்ட கிராமத்திலே துர்பிக்ஷம் ஏற்படும். வறுமை மேலோங்கும், வியாதிகள் அதிகரிக்கும், கிராமம், அல்லது நாட்டு செல்வச் செழிப்பு பாதிக்கப்படும். அரசனுக்கு அல்லது நாட்டின் தலைவனுக்கு ஆயுள்குறையும், பயம், அழிவு, எதிர்பாராத தீங்கு, களவு செய்தல், சத்தியம் தவறுதல், வெற்றியின்மை, சர்வகார்யஹீனம், எஜமான், தர்மகர்த்தா, குரு, ஆச்சாரி, பக்தர்களுக்கு மனக்கிலேசம் ஏற்படும், மக்களுக்கு சந்தோஷமான வாழ்க்கை இருக்காது.

## பிராயச்சித்தம்

இவற்றைப் போக்குவதற்கு சில பிராயச்சித்த கார்யங்கள் செய்யப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளன. குறிப்பாக சாந்திஹோமம், ஸம்ஹிதா ஹோமம், திசா ஹோமம் என்பன செய்யப்பட வேண்டும் என உத்தர காரணாகமம் கூறுகின்றது. அஹோராத்ர மந்திரத்தை ஒரு லட்சம் எண்ணிக்கைக்கு ஜபம் செய்யப்பட வேண்டும் எனவும் ஆயிரம் சங்கைகள் ஹோமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு செய்வதினால் மேற்கூறப்பட்ட பிரதிகூலங்கள் நிவர்த்தி செய்யப்பட்டு நற்பலன்களை அடையலாம் எனவும் கூறுகின்றது. இதனால் ரதப்பிரதிஷ்டையின் சிறப்பு மேலோங்கப்படுகின்றது. பிற்பட்ட காலங்களில் ரதம் பெற்றிருக்கும் சிறப்பிடம் ஆகமங்களைப் பின்பற்றியெழுந்த சிற்பசாஸ்திர நூல்களிலே "மானசாரம்" என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆலயங்களிலே பயன்படுத்தவேண்டிய தேரின் லக்ஷணங்கள் பற்றி இந்நூலும் விரிவாக எடுத்துக் கூறுகின்றது.

சைவசித்தாந்த நூல்களிலும் தேர், உருவக விளக்கங்களாகப் பயன்படுத்தப்படுகிறது. உயிரானது உடலை இயக்கும் தன்மை, ஒரு பெரிய தேர் தரையில் ஊர்ந்து செல்லுதல் போன்றது எனச் சிவஞானசித்தியார் (214, 222) கூறுகின்றது. "ஞானாமிர்தம்" என்னும் சைவசித்தாந்த நூல் ஆன்மாவானது உடலாகிய தேரை ஊர்ந்து நின்று உலகமாகிய மாடவீதிகளிலே உழன்று திரிகின்றது என உருவகித்துக் கூறுகிறது.

தென்னகத்திலே பல ஆலயங்களிலே கற்தேர்ச் சிற்பங்கள் பல நூற்றாண்டு களுக்கு முன் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பல்லவர் காலத்தில் மாமல்லபுரத்தில் அமைக்கப்பெற்ற எட்டு ரதக் கோயில்கள் குறிப்பிடத்தக்கன. பஞ்சபாண்டவர் ரதங்கள், கணேசரதம் முதலியன தனிக்கற்களில் உருவாக்கப்பட்டவை.

மனுசோழனுடைய கற்தேர்ச்சிற்பமும் குறிப்பிடத்தக்கது. இது திருவாரூரிலே சோழர் காலத்தில் பத்தாம் நூற்றாண்டளவில் உருவாக்கப்பட்டது. ஒரிசா மாநிலத்திலுள்ள 'கொனாரக்' சூரியனார் கோயிலில் பன்னிரண்டு சக்கரங்களையும் ஏழு குதிரைகளையும் கொண்டதாக அமைக்கப்பட்டிருக்கும். கற்தேர்ச் சிற்பம் 14ஆம் நூற்றாண்டுக்குரிய தென்பர். விஜயநகர் மன்னர்களால் 15ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்ட ஒரு கற்றேர் 'ஹம்பி' என்ற இடத்தில் உள்ளது. பழைய சில ஆலயங்களில் கருவறை அல்லது அதற்கடுத்த மண்டபம் தேர்போன்ற அமைப்புடன் காணப்படுகின்றது. திருவதிகை, திருக்கடம்பூர் கோயில்கள் இத்தகையன. இதயத்தைக் குறிப்பதாகவுள்ள ரதத்தின் நடுத்தட்டு மேலேழு உலகங்களுக்கும் கீழேழு உலகங்களுக்கும் இடையில் காணப்படும இப்பூவுலகத்தைக் குறிக்கோள்களையும் குறித்து நிற்கின்றது. மேல்நோக்கிக் குவிந்து செல்லும் அதன் அமைப்பு மன ஒருமைப்பாட்டையும் சுட்டுகின்றது. இந்த உயர் லட்சியங்களின் மூலம் கிட்டும் உயர் பதவியாகிய வீட்டின்பம், அங்கு கிட்டும் மனச்சாந்தி ஆகியவற்றைக் கலசமும் குடையும் காட்டுகின்றன.

இத்தகைய வரலாற்றுப் பின்னணியும், தத்துவ அடிப்படையும் கொண்ட ரதமானது இன்றைய நமது ஆலயங்களில் மஹோற்சவ காலங்களில் ரதோற்சவம் எனும் தேர்த்திருவிழாவை நடத்துவதற்குக் காரணமாக அமைந்திருக்கின்றது. மஹோற்சவம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தொழில் விளக்கம் என்றவகையில் படைத்தலைக் குறிக்கும் அங்குரார்ப்பணம், காத்தலைக் குறிக்கும் ரக்ஷாபந்தனம் முதலிய கிரியைகளுடன் ஆரம்பித்து அழித்தல் தொழிலைக் குறிப்பாக ரதோற்சவம் நடைபெறுகின்றது. இத்தேர்த்திருவிழாவானது சமூகவியல் பெறுமானத்தையும் பெறுகின்றதைக் காணமுடிகின்றது. ஊர்க்கோயிலிலே தேர்த்திருவிழா என்றால் ஊர் முழுவதும் புனிதமும் உற்சாகமும் அடைகின்றது. தூய்மையும், அழகும் பொலிவும் காணப்பட்டு எல்லோர் மனங்களில் மகிழ்ச்சிப் பிரவாகம் பொங்கும். தம்முள் பகை மறந்து ஊர் கூடித்தேர் இழுப்பர்.

இவ்வாறு தத்துவ உட்பொருளும் வரலாற்றுச் சிறப்பும் கலைநயமும் மிக்க ரதோற்சவமானது யாவரது உள்ளங்களிலிருந்தும் அழுக்குகளைப் போக்கி ஆன்மீக ஒளியேற்றி அன்பு மலர் மலர்த்தி எம்மெல்லோரையும் பேரானந்த வாழ்வுக்கு இட்டுச் சென்று இன்பத்திலாழ்த்தட்டும்.

துணைநூல் – காரணகாமம் – உத்தரபாகம்
கொ.ஷண்முகசுந்தர முதலியாரவர்களால் சென்னை – சிந்தாதிரி
சிவஞானபோத யந்திரசாலையிற் பதிக்கப்பட்டது. முதற் பதிப்பு -200
கலி – ருOOக. விகாரிவருஷம் தை-மீ

நன்றி - சிற்பத்தேர் வெள்ளோட்டம் - 10.01.2006 ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானம் காரைநகர் திண்ணபுரம் சிவன்கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நல்விழாப் பொலிவு காணல்

"வித்தியாசாகரம்"
சிவஸ்ரீ சபா வாஸுதேவக்குருக்கள்

இப்பூவுலகினிற் பிறந்த ஒவ்வொருத்தரும் சுபபோகமாக வாழவேண்டும் என்று பல்வகையிலும் இறைவனை இறைஞ்சுகின்றார்கள். இறைவனும் ஆன்மாக்கள் மீது வைத்த பெரும் கருணையினால் பல்வகை வழிபாட்டு முறைகளையும் அருளியிருப்பதைக் காணமுடிகின்றது. அடியவர்களும் தம் துன்பங்கள் விலக விரதங்கள் விழாக்கள் என மகிழ்வுடன் அனுஷ்டிக்கின்றார்கள்; கொண்டாடுகின்றார்கள். மக்கள் அனைவராலும் விரும்பிக் கொண்டாடப்படுவன விழாக்களாகும். இங்கு விழா எனக் குறிப்பிடப்படுவன உற்சவங்களேயாகும். அடியார்கள் தங்கள் தங்கள் குல தெய்வங்களின் மற்றும் பிரசித்தம் பெற்ற திருக்கோயில்களின் மகோற்சவங்களை விரும்பிக் கைக்கொள்வதைக் காணமுடிகின்றது. இம்மகோற்சவ காலங்களில் விரதம் இருப்பது அன்னதானம் செய்விப்பது முதலாக பல்வகையிலும் ஈடுபட்டு தம் குறைகளை நிவர்த்தி செய்து கொள்கின்றார்கள். அடியார்களின் நேர்த்திக் கடன்களையும் நிவர்த்தி செய்யக்கூடிய முறையிலும் இவ்விழாக்கள் அமைவுறுகின்றபடியால் இதனை எல்லோரும் விரும்பி அனுஷ்டிக்கின்றார்கள். அதிலும் தேர்த்திருவிழா மிகவும் பிரபல்யமாகக் கொண்டாடப்படுகின்றது. அங்கப்பிரதட்சணம் செய்தல், அடியெடுத்து வணங்கல், காவடி எடுத்தல், சிதறுதேங்காய் உடைத்தல், கற்பூரச்சட்டி எடுத்தல், தண்ணீர்ப்பந்தல் போடுதல் என அடியார்களின் ஏராளமான நேர்த்திக் கடன்களைப் பூர்த்தி செய்து வைக்கின்றது இத்தேர்த்திருவிழா. அடியார்கள் எத்திருவிழாவிற்கு போக முடியாவிட்டாலும் தேர்த்திருவிழாவிற்கு சென்று இறைவனைத் தரிசிப்பார்கள். இந்தளவிற்கு மிகவும் பிரபல்யமாக பேசப்படும் தேர்த்திருவிழாவிற்கு தேர் மிகவும் முக்கியமானதாகும். எனவே நாம் தேர்பற்றியும் உற்சவத்தில் தேர்த்திருவிழா பற்றியும் சற்றுப் பார்ப்போம்.

மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மையாம் எனில் உலகர் மன் வருகென உரைப்பார்

மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் அண்ணலாரது விழாக்களை மனவுறுதியோடு நடத்துதல் தரிசித்தல் ஆகும். "விதிப்படி உற்சவங்களை செய்பவர்களுக்கும் செய்விப்பவர்களுக்கும் பாவம் நீங்கும் ஞானம் உண்டாகும், எல்லா மங்களமும் உண்டாகும்" எனவும், "சர்வதோஷநிவர்த்தியின் பொருட்டும், சர்வலோக சுகத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்டும் சர்வதேவ பிரியமாகவும், சர்வபிராணிகளின் சுகத்தின் பொருட்டும் அரசர்களின் விஜயத்தின் பொருட்டும், எல்லாரையும் இரட்சித்தற் பொருட்டும் உற்சவத்தினை செய்க" எனவும், "புத்தி முக்தியைக் கொடுப்பது, எப்பொழுதும் வெற்றியை உண்டாகுவது, சர்வசித்தியையுங் கொடுப்பது, இஷ்டகாமிய பலனைத் தருவது" எனவும் சிவவாக்கியமாகிய ஆகமங்கள் உற்சவத்தின் பெருமையைக் கூறுகின்றன.

உற்சவங்கள் சாகல்யம், பாவனம், சாந்தி, மாங்கல்யம் என நான்கு வகைப்படும். துவஜாரோகணாதி தீர்த்தாந்தமான உற்சவம் சாகல்யம் எனப்படும். கொடியேற்றம் மாத்திரமின்றி ஏனைய அனைத்தும் செய்வதும் பாவனம் எனப்படும். காலையில் ஓமமும் பலியும் மாலையில் உற்சவமும் செய்வது சாந்தி உற்சவம் எனப்படும். எசமானனும் குருவும் ஒரு தினத்தினை அந்தமாக நியமித்துச் செய்யப்படுவது மாங்கல்யம் எனப்படும்.

1. சௌரம் – 27 நாள்
2. சாந்திரம் – 17 நாள்
3. சாவித்திரம் – 15 நாள்
4. கௌமாரம் – 13 நாள்
5. தைவிகம் – 9 நாள்
6. பௌவனம் – 7 நாள்
7. பௌதிகம் – 5 நாள்
8. கௌணம் – 3 நாள்
9. சைவம் – 1 நாள் எனவும்

இதில் 27 நாள், 17 நாள், 15 நாள் உற்சவங்கள் உத்தமானது என்றும் அது சௌக்கியத்தினைத் தருவது என்றும், 13 நாள், 9 நாள், 7 நாள் மத்திமமானது என்றும் அது விஜயத்தினைத்தரும் என்றும், 5 நாள், 3 நாள், 1 நாள் உற்சவங்கள் அதமமானது என்றும் செல்வத்தினைத் தருவது என்றும் ஸ்ரீமத் உத்தரகாரணாகமத்தில் சாகல்ய உற்சவத்தினை பாகுபடுத்தி சிறப்பித்துக் கூறுகின்றதைக் காண முடிகின்றது.

ஆலயங்களில் உற்சவங்கள் செய்யப்படுவது சிவபெருமான் பஞ்ச கிருத்தியங்களை உணர்த்தும் பொருட்டேயாகும். அதாவது ஆன்மாக்களது பக்குவத்தன்மைக்கேற்ப மலங்களை நீக்கி முத்தி கொடுத்தற் பொருட்டேயாகும். பஞ்ச கிருத்தியங்களாவன சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்னும் ஐந்துமாம். பஞ்சகிருத்தியமானது சூக்கும, தூல, அதிசூக்கும பஞ்ச கிருத்தியங்கள் என முத்திறப்படும்.

உற்சவ காலத்திலே செய்யப்படும் ஒவ்வொரு கிரியையும் சிருஷ்டி முதலான ஐந்தொழிலையும் குறிப்பதாகும். இரதோற்சவமானது சங்காரத்தினைக் குறிப்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்காரமாவது சூக்கும பஞ்ச கிருத்தியத்தில் ஆன்மாக்களின் சஞ்சிதகன் மங்களை பக்குபவப்படுத்தல் என்றும், தூலபஞ்ச கிருத்தியத்தில் பிறந்திறந்து வினைப்பயன்களை அனுபவித்தலாலாய இளைப்பு நீங்குதற்காகத் தனுகரண முதலியவற்றை முதற் காரணத்தில் ஒடுக்குதல் என்றும் அதிசூக்கும பஞ்சகிருத்தியத்தில் ஆன்மாக்கள் பாசத்தில் இருந்து பிரிதல் என்றுசங்காரத்தினது இயல்பு பற்றிக் கூறுகின்றது.

சங்காரத்தினை உணர்த்தும் தேர்த்திருவிழாவில் இறைவன் அண்ட சராசரங்களையெல்லாம் தேராக்கி ஆன்மாக்களைப் பற்றியுள்ள மலங்களையெல்லாம் நீக்குதற் பொருட்டு அதன்மீது அமர்ந்து வீதிவலம் வருகின்ற காட்சி ஒப்பற்ற திருக் காட்சியாகும். பசுபதியாகிய சிவன் சூரிய சந்திரர்கள் உருள்களாகவும், மற்றைச்சரம் அசரம் ஆகிய பொருட்கள் ஒவ்வொரு உறுப்புக்களாகவும், நான்கு வேதங்கள் குதிரைகளாகவும், அமைந்த தேரில் மேருவை வில்லாகவும், விஷ்ணுவை அம்பாகவும், அக்கினியை அவ்வம்பின் கூர்மையாகவும் கொண்டு எழுந்தருளி பிரம்மாவாகிய சாரதி பிரணவமாகிய சவுக்கு கொண்டு செலுத்தத் திரிபுரத்து அசுரர்களைத் தமது திருபுன்முறுவலால் எரித்தருளினார். திரிபுர சங்கார உண்மைக்காட்சியை உணர்த்தி ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் கெடுத்தற்காக செய்யப்படுவதே இரதோற்சவமாகும். இரதமானது ஆலயக் கருவறையின் தோற்றமாகும். இராசகோபுரத்தின் வடிவமாக அமைவது சப்பறம் என்னும் சகோபுரம் ஆகும். கோபுரத்திற்கு சமமாக இருப்பதனால் சகோபுரம் எனப்படுகின்றது. ஸ்தூபியின் வடிவமாக அமைந்து காணப்படும் தேரானது ஆலயத்திற்குள் சென்று வழிபாடாற்ற முடியாதவர்களுக்கும் இறைவனின் கருவறையோடு கூடிய தரிசனத்தினைக் கொடுப்பதாகும். இவ்வாறான தேர்கள் சாலவிருட்சம், நாவல், சாரம், சரளம், மகிழ், புளி, கிருசரம், கிருதமாலம், வன்னி ஆகிய மரங்களினால் செய்யப்படுகின்றன. குட்ஷி, அட்ஷம், தந்தம், சித்திரம், கீலகம் என பல்வகை உறுப்புக்களுடன் தேர் உருவாக்கப்படுகின்றது. தேருக்கு அடித்தளமாக ஆதாரம் உபாதாரம் என்னும் பகுதிகள் காணப்படும். அதன்மேல் தளங்கள் உருவாக்கப்படும். தேர்களின் அமைப்பினைக்கொண்டு ஏழு வகையாக பாகுபடுத்தலாம். சதுரவடிவான நபஸ்வன் பத்ரகம் என்றும், அறுகோண வடிவானது பிரபாஞ்சன பத்ரகம் என்றும் விதான பத்ரகம், பவன பத்ரகம், பிருஷத பத்ரகம், சந்திர பத்ரகம், அனில பத்ரகம் என வகைப்படும். இதைவிட சதுர வடிவான தேர் நாகரம் என்றும், எண்கோண வடிவானது திராவிடம் என்றும், வட்டவடிவானது வேசரம் என்றும் அறுகோண வடிவானது அந்திரம் என்றும் கூறப்படும் மரபுண்டு. மகோற்சவத்திற்குரிய தேருக்கு ஆறுமுதல் பத்து வரையான சில்லுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. சிவனுக்கு ஒன்பது வேதிகள் கொண்ட தேரும் ஏனைய தெய்வங்களுக்கு ஐந்து வேதிகைகளைக் கொண்ட தேரும் அமைவுற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிற் பீலிகைகளாலும், சாமரங்களாலும், தோரணங்களாலும், நல்லோசைதரும் சிறிய மணிகளாலும், ஒளி பொருந்திய கண்ணாடிகளாலும், விசிறிகளாலும், மாலைகளாலும், தேரின் மேற்பகுதி அலங்கரிக்கப்படும். தேரின் கீழ்ப்பகுதியில் உரிய தெய்வங்களின் பெருமையை உணர்த்தும் உருவங்கள் செதுக்கப்படும். சிங்கங்கள், யானைகள், மகரங்கள், நுணுகிய மடிப்பு வேலைப்பாடுகள், நடனமாடுவோர், பூதங்கள், யட்சகர்கள் முதலானோரும் சித்தரிக்கப்படுவர். அதுமட்டுமல்லாது கீழ்ப்பகுதி சித்திர வேலைப்பாடுகளுடனும் மேற்பகுதிக்கு அழகிய வர்ண சித்திரங்கள் தீட்டப்பட்டு வேலைப்பாடுகள் அடங்கிய சேலைகளினாலும் செய்யப்படும். மேற்பகுதி சேலை சுற்றுவன தேர்கள் என்றும், வேலைப்பாடுடைய மரங்களால் செய்யப்பட்டதை இரதங்கள் என்றும் கூறுவர். இன்றும் சிதம்பரத்தில் சேலைகளால் சுற்றப்பட்ட தேர் இழுக்கப்படுவதைக் காணலாம்.

மகோற்சவங்களில் சிறப்பாகக் கொண்டாடப்படும் தேர்த்திருவிழாப் பொலிவு காண்பது பெரும் பேறாகும். புதிய ரதங்களைப் பிரதிஷ்டை செய்வது பற்றிய முழுமையான விபரங்களை உத்தர காரணாகமம் ரதப்பிரதிஷ்டா விதி என்னும் பகுதியில் தெளிவாகக் கூறுகின்றது.

நன்றி – சிற்பத்தேர் வெள்ளோட்ட மலர் – 10.01.2006 ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானம் காரைநகர் திண்ணபுரம் சிவன்கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# விநாயக வழிபாட்டில் பஞ்சமுக விநாயகரின் திருவுருவத் தத்துவம்

**பிரம்மஸ்ரீ சா.குமரேசசர்மா** B.A.(Hons)

சனாதன தர்மமாகிய இந்து மதத்தில் பரம் பொருளின் பல்வேறு வழிபாட்டு முறைகளை அறுவகைச் சமயங்களாக ஆதிசங்கரர் வகுத்துத் தந்துள்ளார். அவையாவன காணபத்தியம், சைவம், வைஷ்ணவம், சாக்தம், கௌமாரம், சௌரம் என்பனவாகும். இவற்றில் காணாபத்தியம் கணபதியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடப்படும் நெறியாகும். ஆகாயத்தில் இருந்து வரும் நீர் துளிகள் எவ்வாறு கடலைச் சென்றடைகின்றனவோ அதேபோல் பல நாமங்களாலும், உருவங்களாலும் வழிபடப்படும் இறைவனும் இறுதியில் ஒரு பரம்பொருளையே சுட்டுகின்றது.

விநாயக வழிபாட்டின் தொன்மையினை நாம் ஆராய்வோமானால் வேதகாலத்திலிருந்து இவ்வழிபாட்டு மரபு தோன்றியிருப்பதை உணரலாம். வேதத்தில் பிள்ளையாரைப் பற்றி வெளிப்படையான குறிப்பு ஒன்றுமில்லை. ஆனாலும் 'கணபதி' என்ற சொல்லாட்சி இருக்கு வேதத்தில் காணப்படுகின்றது. இருக்கு வேதம் 2ஆம் மண்டலம் 23ஆம் சூக்தத்தில் வரும் 'கணாநாம் த்வாம் கணபதிம்...' வரிகளிலிருந்து அறியமுடிகின்றது. இதில் வரும் 'கணபதி' எனும் பதம் தேவ கணங்களின் தலைவர் என்ற பொருளில் ஒரு பொதுப் பெயரால் சுட்டப்படுகின்றது.

வேதத்தின் இறுதிப் பகுதியில் எழுந்த தைத்திரீயே ஆரண்யகத்தில் இறைவனைத் தந்தின் என்று அழைக்கின்றது. இதற்கு தந்தத்தை உடையவர் என்பதே பொருள். ஆகவே இச்சொல் பிள்ளையாரைக் குறிப்பதென்றே துணியலாம். கணபதி காயத்திரியிலும்.... தந்தோ தந்திந் பரசோதயாத் என்று தந்திந் என்ற பெயர் குறிப்பிடப் பெற்றுள்ளமை இக்கருத்தை வலியுறுப்பதாகும்.

இதிஹாச இலக்கியங்களில் ஒன்றான மகா பாரதத்தை வியாச பகவான் கூற விநாயகரே அதனை எழுதினார் என்றும் அது எண்ணாயிருத்து எண்ணூறு சுலோகங் களைக் கொண்டது என மகாபாரத முதலாம் பர்வம் 115-7ஆம் பாடல் குறிப்பிடுகின்றது. உலக இலக்கியங்களில் முதல் எழுத்துருக்கொண்ட இலக்கியமாக மகாபாரதத்தைக் கொள்வர். எனவே முதல் எழுத்தாளராக விநாயகரை கூறுதல் வரலாற்று மரபாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராண காலத்தில் விநாயகர் பற்றிய கருத்துக்கள் நன்கு செறிந்து காணப்படுகின்றது. பதினெண் மஹா புராணங்களில் அக்கினி புராணம், பத்மபுராணம், கருட புராணம், ஸ்காந்த புராணம், வாமன புராணம், பார்க்வ புராணம் இவைகளில் விநாயகர் அவதார வரலாறு விரிவாகக் கூறப்பெற்றுள்ளது. தமிழில் கச்சியப்ப முனிவர் விநாயக புராணத்தைச் செய்யுளால் இயற்றியுள்ளார்.

புராண காலத்திற்குப் பிற்பட்ட மனு முதலான தர்மசாஸ்திரங்களிலும் கணபதியை தெய்வமாகப் போற்றினார்கள் என்பதற்குச் சான்றுகள் காணப்படுகின்றன.

விநாயக வழிபாடு வேதகாலந் தொட்டு இடம்பெறினும், தமிழ்நாட்டில் கி.பி.7ஆம் நூற்றாண்டில் நரசிங்க வர்ம பல்லவனோடு சேனைத் தலைவராகச் சென்று, வாதாபிப் போரில், புலிகேசியை வென்றுவந்த சிறுத்தொண்டராலேயே தென் தமிழக கணபதி வழிபாடு வியாபகமாயிற்று என வரலாற்று ஆசிரியர்கள் கருத்தாகும். தமிழ் நாட்டில் உள்ள பணபதீச்சரம் என்ற கோயில் சிறுத்தொண்டராலே கட்டப்பெற்றது என்றும் இதன் பின்னே தென் தமிழகம் எங்கும் விநாயகர் ஆலயங்கள் எழுந்து அது இலங்கை வரை விரிவு கண்டது என்றும் கூறலாம். ஆலயங்கள் மட்டுமல்லாது அடியார்களுக்கு எளியவராகிய கணபதி அரசமரம், ஆலமரம், இலந்தை மரம், வன்னி மரம், இவற்றின் அடியிலும் ஆற்றங்கரை குளத்தங்கரை தெருக்கோடி ஏன் வீட்டு மாடங்களிலும் கூட இருந்து அருள்பாலித்த வண்ணம் உள்ளார்.

இங்ஙனம் வழிபடப்படும் விநாயகர், பல்வேறு திருவுருவ அமைப்பில் வழிபடுபவரின் மனநிலைக்கேற்ப உருவு கொண்டு அருள் வழங்குகின்றார். இவ்வுருவ அமைப்புக்கள் ஆகமங்களைப் பின்பற்றியும்சிற்ப சாஸ்திரங்களை மூலாதாரமாகக் கொண்டு, புராண இதிஹாசக் கதைகளை தெளிவுபடுத்துவதாகவும் அமைகின்றன. விநாயகப் பெருமானுடைய திருவுருவம் அன்பர்களுக்காக முப்பத்திரண்டாகப் போற்றப்பெறுகின்றது. இவற்றின் திருவுருவ அமைப்பு, தோற்றப் பொலிவு, கையில் உள்ள ஆயுதங்களின் அமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய தியான சுலோகங்களை முக்கல புராணம் காமிகாகமம் முதலியன எடுத்துரைக்கின்றன. இவற்றில் பிரணவ ரூபமாகிய ஆனைமுக திருவுருவின் பஞ்சமுக விநாயகரின் சிறப்புக்களையும், தத்துவத்தையும் நோக்குவோம்.

பஞ்சமுக விநாயகர் உருவ அமைப்புப் பற்றிய குறிப்புக்கள் பிற்பட்ட இலக்கியங் களிலேயே காணப்படுகின்றன. விநாயகரின் முப்பத்திரண்டு திருவுருவங்களில் ஹேரம்ப கணபதி ஐந்து முகங்களை உடையதாக போற்றப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபய வரத ஹஸ்த: பாசதந்தாசஷமாலா
ஸருணி பரசு ததாநொ முத்கரம் மோதகஞ்ச
பலமதிபத ஸிம்ஹ பஞ்ச மாதங்க வக்த்தொ
கணபதி ரதி கௌர பாது ஹேரம்ப நாமா!!!

அபயம், வரதமாகிய கைகளையுடையவர் பாசம், தந்தம், அட்சமாலை, மாலை, பரசு, சம்மட்டி, மோதகம், பழம் இவற்றைத் தாங்கியவர் சிங்க வாகனத்தில் ஏறியவர். யானை முகம் ஐந்துடையவர். பசுமை கலந்த கருமை நிறம் உடையவர். இது மேற்கூறிய தியான சுலோகத்தின் கருத்தாகும். இந்த ஹேரம்ப கணபதிக்கு நான்கு திசைகளும் நான்கு முகமாகவும், மேல் உள்ளதான ஊர்தவ முகம் ஒன்றாகவும் இப்பஞ்சமுக விநாயகர் வழிபடப்படுகின்றார்.

காமிகாகமம் பஞ்சவக்த்திரம் தசபுஜம், பிரதிவக்த்திரம், திரிலோகசனம் எனத் தொடங்கும் தியான சுலோகத்தில் பஞ்சமுக விநாயகர், சிவாம்சத்தோடு தொடர்புடையதாக வர்ணிக்கப்படுகின்றார். ஐந்து முகங்களும், பத்து புஜங்களும் உடையவர். மூன்று கண்கள் கொண்டவர். சிவந்த நிறமும் ஆனைமுகமும் உடையவர். சுளகு போன்ற பரந்த காதுகள், பெருவயிறு உடையவர். பாம்பைப் பூணூலாக அணிந்தவர். தந்தம், குடாரம், பாகம், அங்குசம், சக்கரம், முசலம், திரிசூலம், கொடி ஆகிய ஆயுதங்களேடு அபய, வரத ஹஸ்தங்களைக் கொண்டவர். பலவகையான ஆபரணங்களை அணிந்து, சித்திர ஆடையை உடுத்து அருள்பாலித்த வண்ணம் உள்ளார்.

வழிபாட்டு மரபில் விநாயகர் ஆலயங்களில் பஞ்சமுக விநாயகர் ராஜ மூர்த்தமாகப் போற்றப்படுகின்றார். சிவாலயங்களில் காணப்படும் நடராஜ மூர்த்தத்தின் சிறப்புகளுடன் இம்மூர்த்தமும் ஒப்பிடத் தக்கது. விநாயக ஆலயங்களில் மஹாமண்டபத்தின் வடக்குப் பக்கத்தில் தெற்கு நோக்கியவாறு பஞ்சமுக விநாயகரின் ஆலயம் அமைவு பெறுகின்றது. தென்திசை நோக்கியிருப்பதால் அடியார்களின் மரண பயத்தை அகற்றி ஆயுளைச் செழிக்க வைத்து அருள்வதுடன் தட்சிணாமூர்த்தி போன்று ஆன்மாக்களின் அஞ்ஞானத்தை அகற்றி மெய்ஞ்ஞானத்தை அருளும் ஞான மூர்த்தமாகவும் பஞ்சமுக விநாயகர் போற்றப்படுகின்றார்.

கணபதியை வழிபடும் போதே சிவன், சக்தி, விஷ்ணு, சூரியன் ஆகிய தெய்வங்களின் பேரருளை அடைய முடிகின்றது.

அவ்யாக்ருத ப்ரும்மனோ கணேசஸ்ய சரீரே நாபிர் பிரும்மா, முகம் விஷ்ணு நேத்ரம் ருத்ர, வாமபார்சவம் சக்தி, தக்ஷிணம் சூர்ய, ஆத்மா ஸமிதா மய, என்ற கணபதி ஸ்துதி இதற்கு விளக்கம் தருகின்றது. கணபதி நாபி பிரும்ம ஸ்வரூபம், முகம் விஷ்ணு அம்சம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கள் சிவமயம், இடதுபாகம் சக்தி வடிவம், வலது பாகம் சூரிய ஸ்வரூபம் என்று இந்த ஸ்துதி கூறுகின்றது. இதையே வேதமும் தவம் பிரம்மாஸ்தவம் விஷ்ணுஸ்தவம், ருத்ரஸ்தவம் என நாம் போற்றும் பிரதான தெய்வங்கள் கூட கணபதியுள் அடக்கம் என்பதனை விளக்குகின்றன. குணக்கோட்டையிலும் வடிவு வரம்பிலும், நிறச் சூழலிலும் அகப்படாத – அவற்றைக் கடந்துள்ள இறைவனுக்கு பல பெயர்கொண்டு வழிபடுதல் அன்பர்களின் பக்தி மனநிலையின் பாற்படுவதாகும். இதையே மணிவாசகரும் "ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லாகாயிரம், திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" எனத் தனது திருவாசகத்தில் குறிப்பிடுகின்றார்.

பஞ்சமுக விநாயகரின் தத்துவார்த்தமும் பொதுவாகச் சிவாம்சத்துடன் தொடர்பு படுத்தியே கூறப்படுகின்றது. சதாசிவ மூர்த்தத்தின் ஐந்து முகங்களாகிய ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் ஆகிய பஞ்சமுக விநாயகரின் ஐந்து முகங்களோடு தொடர்பு படுத்தப்படுகின்றது. வடகிழக்கு நோக்கிய திருமுகம் ஈசான அம்சமாகவும், கிழக்கு நோக்கிய திருமுகம் தத்புருஷமாகவும், தெற்கு நோக்கிய திருமுகம் சத்தியோஜாதமாகவும் காணப்படுகின்றன. மேலும் இவை ஈசான முகத்திலிருந்து முறையே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய இறைவனின் ஐந்தொழில்களையும் புரியும் முகங்களாகவும் கட்டப்படுகின்றது. ஐந்து திருமுகங்களும் நிவிர்த்திகலை, பிரதிஷ்டா கலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியத்தகலை ஆகிய பஞ்ச கலைகளுடன் தொடர்புபட்டதாக உள்ளன. சிவ பஞ்சாசஷர மந்திரமாகிய நமசிவாய என்பதில் ஈசான முகம் 'ந' அசஷரத்தையும் தத்புருஷம் 'ம' ஐயும் அகோரம் 'சி' என்ற எழுத்தையும், வாமதேவம் 'வா' ஐயும் 'ய' என்பது சத்தியோ ஜாதமுகத்தையும் குறித்து சிவாம்சத்துடன் தொடர்புற்று பஞ்சமுக விநாயகர் அருள் பொழிகின்றார். பஞ்சமுக விநாயகரின் திருமேனி ஞானமே வடிவமானது. ஆன்மாவைப் பொருந்தி நின்று மலகன்ம மாயைகளைத் தொழிற்படுத்தி இருமையின்பத்தையும் அளிப்பது ஞானம். இத்தகைய ஞானம் பொருந்த உயிர்கள் விளக்கம் பெறுகின்றன. இந்த ஞானமே ஐந்துமுகத்தனின் திருவடிகள். இந்த ஞானத் திருவடிகள் அன்பராகத் தாமரையிற் பொருத்த உயிர்கள் பிரார்த்த வினையால் விளையும் இன்னலும் வலிகுன்றிப் போக, வருவினையும் செய்வினையும் சேராதொழிய என்றும் இன்பம் பெருக உதவுகின்றன.

விநாயகரின் பேழைவயிறு, தான் எல்லாவற்றிலும் வியாபகமாய், உலகனைத்தும் வியாப்பியமாக அடக்கி விளங்கும் சர்வகாரணத்துவ சக்தியாக உள்ளது. இதனையே வேதமும் ஸர்வம் ஜகதிதம் தவதஸ்தி, திஷ்டதி எனக் கூறுகின்றது. ஐந்து முகத்தனின் பத்துப் புஜங்களும் ஆன்மாக்களின் மல நிவாரணத்துக்காக தொழில் புரிகருவிகளைக் கொண்டுள்ளன. பாசத்தைத் தரித்த கரம் அவரது படைத்தற்றொழிலைக் குறிப்பது அங்குசம் ஏந்திய கரம். அழித்தற் தொழிலை அறிவிப்பது. ஆன்மாக்களின் ஆணவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலத்தை அழித்து அவற்றை பாசத்திலிருந்து விடுதலை செய்வதும் இந்த அங்குச கரமே. ஆகும். சக்கரமும், முசலமும் ஏந்திய கரம் ஆன்மாக்களை நெருங்கும் இடர்களைக் களைவதற்காகும். துவஜமாகிய கொடியை ஏந்திய திருக்கரம் ஐம்புலன்கள் வழிவரும் இன்பங்களை கட்டுப்படுத்துகின்றது. ஒடிந்த கொம்பு அபர ஞானமாகிய விந்துவைக் குறித்து நிற்கின்றது. இறைவனின் அபயகரம் பிறவிக் கடலில் வினைச்சூழலி துதன்ப இன்பச் சுறாவால் துரத்தப் பெற்று ஓடி வருகின்ற உயிர்களுக்கு அஞ்சாமை அளித்துக் காப்பது ஆதலால் இது காத்தல் தொழிலிற்குரியது. கீழ் நோக்கிய வரதகரம் சிறந்த ஞானக்குறி. அபயம் பெற்ற உயிர்களின் பரிபாகத்திற்கு ஏற்ப அருளலைச் செய்வதாகும். விநாயகரின் திருச்செவிகள் ஆன்மாக்களை மலவாதனை ஆட்கொள்ளாமல் காத்து வினைகளில் உள்ள முக்கண்களும் சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய முச்சுடர்களைக் குறிப்பதாகின்றது. யானைக்கு நினைவு வன்மை, காண்டல், கேட்டல், ஊறு, ஒன்றையும் ஒரு காலத்தும் மறவாமை, மிக்க வலிவு உடைமை, அளப்பெரும் சாந்தமுடைமை, இதஞ் செய்வார்க்கு வசமாய் உதவுவது ஆகிய இவை குணங்கள். எனவே ஆனைமுகம் உடைய எம்பெருமானுக்கும் இவை அருள் குணங்களாக ஆகின்றன.

இங்ஙனம் தத்துவமயமாக மனித வாழ்வின் ஆன்ம ஈடேற்றத்திற்கு அருள் புரிபவராக பஞ்சமுக விநாயகர் திருவுருவம் அமைந்துள்ளது. மேலும் ஆனந்தமே ஆத்மாவின் சொரூபம். ஆத்மாவே பிரம்மம். ஆகவே எல்லா ஜீவராசிகளுக்கும், ஈசுவரர்களுக்கும் ஒரே ஆன்மஸ்வரூபமாக விளங்குபவரும் சச்சிதானந்த ரூபராக உள்ளவரும் கணேச பரப்ரம்மமே ஆகும்.

பஞ்சமுக விநாயகர் திருவுருவ வழிபாடு தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சில ஆலயங்களிலேயே காணப்படுகின்றது. திருச்சி கணபதீச்சர ஆலயம், நாகபட்டினத்தில் உள்ள மாவடிப் பிள்ளையார் கோயில் ஆகிய இடங்களில் பஞ்சமுக விநாயகருக்கு தனிக் கோயில்கள் காணப்படுகின்றன. இலங்கைத் திருநாட்டில் பல பாகங்களிலும் உள்ள விநாயகர் ஆலயங்களில் பஞ்சமுக விநாயகருக்குத் தனிச் சன்னிதி உண்டு. இது தமிழ்நாட்டில் காணமுடியாத அளவிற்கு பரந்து காணப்படுகின்றது. இலங்கையின் தலைநகர் கொழும்பு மாநகரத்தில் அமைந்துள்ளன. முகத்துவார ஆலயத்திற்கே 1954இல் விநாயகர் திருவுருவம் அமைக்கப் பெற்றது என்றும், இதுவே இலங்கையில் முதலாவது பஞ்சமுக விநாயகர் என்றும் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. இதற்கு முந்தியதான பஞ்சமுக விநாயகர் திருவுருவ அமைப்பு ஆதாரபூர்வமாக அறிய முடியவில்லை. 1960களிற்குப் பின்னர் யாழ்ப்பாணத்திலும் இத்திருவுருவம் விநாயகர் ஆலயங் களில் ஸ்தாபிக்கப்பட்டு பல ஆலயங்களிற்கும் விரிவு கண்டன.

எமது புகழ்பூத்த தாவடிக் கிராமத்தின் நுழைவாயிலில் இருந்து அருள்புரியும், தேவங்களின் பொருளாய் விளங்கும் வேதவிநாயகர் ஆலயத்தில் பஞ்சமுக விநாயகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிச் சன்னிதானத்திலிருந்து அடியார்களுக்கு அருள்பாலித்து வருகின்றார். இப்பஞ்சமுக விநாயகர் 1982 – 02 – 12ம் திகதி புதிதாக அமைக்கப் பெற்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. இவ்வருடத்திலிருந்து ஒவ்வொரு மஹோற்சவ தேர் உற்சவத்திற்கும் இவ்விநாயகரே தேரில் பவனி வந்து அருள்பாலித்து வருகின்றார். சித்திரைப் புத்தாண்டில் ராஜமூர்த்தமாகிய பஞ்சமுக விநாயகர் ரதத்தில் ஆரோஹணித்து வரும் காட்சி அளப்பெரியது.

இவ்வருடம் சித்திரபானு என்கின்ற புதுவருடப் பிறப்பில் புதிய சித்திரத் தேரில் பஞ்சமுக விநாயகர் ஆரோஹணித்து மக்களின் மனத்தமுக்கை அகற்றி சிறப்புடன் வாழ்வதற்கு அவரின் அருள் பார்வை நமக்கு இன்றியமையாததாகும்.

புதிய சித்திரத் தேரில் பவனிவரும் தத்துவமயமான பஞ்சமுக விநாயகர் நிறைவான வாழ்வையும் மன அமைதியையும் தந்து சகல ஜீவராசிகளையும் காத்தருளப் பிரார்த்திப்போமாக.

சுபமஸ்து

உசாத்துணை நூல்கள்:

1. கணபதி – ச.தண்டபாணிதேசிகர் – வெளியீடு – திருவாவடுதுறை ஆதீனம்
2. தெய்வத்தின் குரல் – பாகம் I – ரா.கணபதி
3. விநாயக விஜயம் – வித்துவான் ந.சுப்ரமண்யன்
4. இருக்குவேதம் – மூலநூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பரராஜசேகர மன்னனுக்கும் ஆலயத்துக்கும் உள்ள தொடர்பு

'சிவநெறிச் செம்மல்'
**திரு. வை. அநவரத விநாயகமூர்த்தி**

ஈழத் தமிழகத்தில் கி.பி. 12ஆம் நூற்றாண்டு முதல் 17 ஆம் நூற்றாண்டு வரை ஆரியச் சக்கரவர்த்திகள் என்று அழைக்கப்பட்ட தமிழ் அரசர்களின் அரசு ஒன்று நிலைத்திருந்தது, இவர்கள் தொடர்ச்சியாக ஒருவர் பின் ஒருவராகப் பரராசசேகரன், செகராசசேகரன் எனச் சிங்காசனப் பெயர்கள் பூண்டு அரசு செலுத்தி வந்தனர். யாழ்ப்பாண இராச்சியத்துக்குச் சிறப்பாகவுள்ள நிர்வாக முறை ஆரியச் சக்கரவர்த்திகளாலே ஏற்படுத்தப்பட்டதென வரலாற்றாசிரியர்கள் கூறுவர். மேலும் இந்த ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் விநாயகர் வழிபாடு மேன்மை பெற்று விளங்கியது. அத்துடன் யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக 'சிங்கை நகர்' அக்காலத்தில் சிறப்புற்று விளங்கியதை 'செகராசசேகர மாலை', 'தட்சிண கைலாய புராணம்' என்னும் நூல்கள் எடுத்துக் கூறுகின்றன.

சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகள் மரபின் பதினோராவது தலைமுறையைச் சேர்ந்தவன் பரராசசேகரன் என்னும் மன்னன். இவன் தனக்குரிய சிங்கை ஆரியப் பட்டத்தை சிங்கை எனச் சுருக்கி தனது பெயரின் முன்நிறுத்தி சிங்கைப் பரராசசேகரன் என்று ஆக்கி அரசு புரிந்து வந்தான். இயற்கை அழகும் செல்வச் செழிப்பும்மிக்க நல்லூரைத் தலைநகராகக் கொண்டு இவன் யாழ்ப்பாண அரசை நீதி தவறாது ஆட்சிபுரிந்த காலம் பொற்காலமென வரலாற்றாசிரியர்கள் எடுத்து இயம்புவர். இம்மன்னன், சைவத்தையும் செந்தமிழையும் இரு கண்களாகப் போற்றி வளர்த்த பெருந்தகையாளன். நற்றமிழ் வல்ல நாவலரும் பாவலரும் போற்ற அரசாண்டவன். நீதியும் பராக்கிரமும் உடையவன். தமிழ்ச்சங்கம் நிறுவி அதன் வாயிலாக பல நூல்களை வெளிவரச் செய்த உபகாரசீலன். இச்சங்கத்தில் இவனுடைய மைத்துனன் அரசகேசரி, 'இரகுவம்சம்' என்னும் நூலை அரங்கேற்றினான். 'பரராசசேகரன் உலாவும்' இக்காலத்தைச் சேர்ந்ததாகும். பரராசசேகர மன்னனின் ஆதரவிலே தமிழகத்தில் இருந்து வந்த வைத்திய அறிஞர்களும் இங்கு வாழ்ந்தவர்களுமாகிய வைத்திய அறிஞர்களும் அடங்கிய குழு ஒன்றினாலே 'பரராசசேகரம்' என்னும் வைத்திய நூல் உருவாக்கப்பட்டு இவனது ஆட்சிக் காலத்திலே அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சியில் விநாயகர் வழிபாடு சிறப்புற்று விளங்கியமையால், அக்காலத்தில் பல இடங்களிலும் அரச ஆதரவுடன் விநாயகர் ஆலயங்கள் நிறுவப்பட்டதற்குச் சான்றுகள் உள்ளன. உதாரணத்திற்காக, கருணாகரப் பிள்ளையார் கோயில், பறாளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகர் ஆலயம், வெயிலுகந்த பிள்ளையார் கோயில், கைலாசபிள்ளையார் கோயில் என்பவற்றைக் குறிப்பிடலாம். அந்த வகையில் இணுவை மாநகரிலும் பரராசசேகர மன்னன் ஆட்சிக் காலத்தில் இந்தப் பிள்ளையார் கோயிலும் அவனது ஆதரவுடன் ஸ்தாபிக்கப்பட்டிருக்கலாம் என்று கருத இடமுண்டு.

"இணுவில் பரராசசேகரப் பிள்ளையாரும் யாழ்ப்பாண அரசரின் சிம்மாசனப் பெயர்களுள் ஒன்றாகிய 'பரராசசேகரன்' பெயரைத் தாங்கி நிற்பது அவதானிக்கத் தக்கது. இணுவிலும் ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் ஏற்பட்ட வேளாளக் குடியேற்றத்துடன் தொடர்புடையதாகக் காணப்படுவதால் இவ்வாலயம் இவர்கள் ஆட்சியில் ஆரம்பக் கட்டத்தில் அமைக்கப்பட்டிருந்திருக்கலாம்" இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர், கலாநிதி சி.க.சிற்றம்பலம் அவர்கள் 'யாழ்ப்பாண இராச்சியம்' என்னும் தமது நூலில் (பக்கம் 220) ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் ஆலயம் சம்பந்தமாகக் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

மேலும் இவ்வாலயத்தில் கர்ண பரம்பரையாகப் பாடப் பெற்றுவரும் பின்வரும் பாடல் பரராஜசேகர மன்னன் ஆரியச் சக்கரவர்த்திகள் மரபில் பதினொராம் தலைமுறையைச் சேர்ந்தவன் என்றும் அவனால் வழிபாடு செய்யப்பட்ட தலம் என்றும் எடுத்துக் கூறுகின்றது.

மங்கலம் பொலிவால சிங்கபுர வலனிடையில் வைத கவி வீரராக
வன்னியாழ் பாடியே வாங்கி அரசாண்ட நன் வள நாடதற்கு வேந்தன்
பொங்கு கங்காதரன் புவனேகவாகுவாம் பூசுரர்களோடு வந்த
புண்ணியன் பொன்னிநாடெண்ணுமதி பதியாய புங்கவர் வணங்கு திலகன்

சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி தன் மரபில் ஏகாதசச் சிரமுறையினான்
திங்கள் நிகர் கவிகையான் துங்கமிகு பரராச சேகரத் திகிரி வேந்தன்
பொங்கும் அருள் தங்கவே பூசித்தநாயகா புவிபுகழும் மடவாசலில்
புகர் முகக் கடவுள் நின் மிகு கருணை அடியனேன் புந்தியில் தங்க அருளே"

எனவே, இவ்வாலயம் அரச பரம்பரையோடு தொடர்புபடடதென்பதும், பரராசசேகர மன்னனால் வழிபடப் பெற்று பாதுகாக்கப்பட்டதென்பதும் தெளிவாகின்றது. இதன் காரணமாகவே இவ்வாலயத்துக்கு அன்று தொட்டு 'பரராசசேகரப் பிள்ளையார் கோயில்' என வழங்கப்பட்டு வருகின்றது. பரராஜசேகர மன்னன் மந்திரி பிரதானிகளுடன் பிள்ளையாரை வழிபடும் காட்சி இவ்வாலயத்தின் தம்பமண்டபத்தில் கண்கவர் வர்ணங்கள் தீட்டப்பெற்ற அழகிய சிற்பவடிவில் அமைக்கப்பட்டிருப்பதை ஆலயத்திற்குச் செல்லும் அடியார்கள் காணத் தவறமாட்டார்கள். பேசாத சிற்பங்களைப் பேச வைக்கும் சிற்ப வல்லுனரின் அபாரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமையை பாராட்டாமல் இருக்க முடியாது. மேலும் இந்தக் காட்சி தத்ரூபமாக ஆலய உட்பிரகாரச் சுவரில் ஓவியமாக வரையப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. "பஞ்ச வன்னத் தூ து" என்னும் நூல்ன் பதிப்பாசிரியர் "தமிழவேள்" இ.க.கந்தசுவாமி அவர்கள் தமது நூலின் 119ம் பக்கத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமை கவனித்தக்கது.

"ஈழத்தமிழ் அரசருள் புகழ்பெற்ற பரராசசேகர மன்னன், திருக்கோயில் அமைத்து எழுந்தருளுவித்த விநாயகர் ஆதலின் இவ்விநாயகருக்கு "பரராசசேகரர்" என்னும் சிறப்புப் பெயர் வழங்குகிறது."

பல்கலைப் புலவர் (அமரர்) க.சி.குலரத்தினம் அவர்கள் "தமிழ் தந்த தாதாக்கள்" என்னும் தமது நூலில் (பக்.38) இணுவில் பிள்ளையார் கோவிலைப் பற்றிக் குறிப்பிடும் போது "பரராசசேகரன் பெயரால் இணுவில் பிள்ளையார் கோயில் நின்று நிலவுகிறது. எனவே, இவன் நல்லூருக்கும் அப்பால் திருக்கோயில்கள் அமைத்து சைவ பரிபாலனம் செய்தான் என்பது வெளிப்படை" என்று கூறியிருப்பது பரராஜசேகர மன்னனுக்கும் இவ்வாலயத்துக்கும் உள்ள தொடர்பை உறுதிப்படுத்துகிறது.

மன்னன் பரராஜ சேகரன் மன்னு வித்துத்
துன்னும் அவன் பேருடனே தோற்றமடைந் – தின்னல்
எலாம் அகற்றும் பிள்ளையார் இன்பமுறு கோயில்
கலாவி உயர்க சொலித்து.

– கி.வா.ஜகந்நாதன்

குறிப்பு: இக்கட்டுரை 'சிவநெறிச் செம்மல்' வை.அநவரத விநாயகமூர்த்தி அவர்களால் எழுதி வெளியிடப்பெற்ற 'யாழ்ப்பாணம், இணுவில் அருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில்" என்னும் நூலிலிருந்து மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

நன்றி– ஐங்கரன் அமிர்தம் மணிமண்டபத் திறப்புவிழா சிறப்புமலர் – 9.5.24 ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோயில் – இணுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையாரின் அருட்பொலிவும் மகத்துவமும்

ம.பொ.செல்வரத்தினம் J.P. அவர்கள்
(தொல்பொருள் ஆய்வாளர், யாழ்ப்பாணம்)

## ஆதித் தமிழர் பண்பாடு

வானளாவிய கூட கோபுரங்களைக் கொண்ட திருக்கோயில்களைக் கட்டியெழுப்பிப் புகழ் பூண்டவர்கள் ஆதித் தமிழ் மன்னர்கள். கோயில்களை விஞ்சிய அரச மாளிகைகள் எங்கும் இருந்ததாகத் தெரியவில்லை. சோழ மன்னர்களின் அழியாப் புகழுக்குத் தஞ்சைப் பெருங்கோவிலும், பாண்டிய மன்னர்களின் பெருமைக்கு மதுரை மீனாட்சி அம்மன் கோயிலும் கட்டியம் கூறுகின்றன. இதே போன்று புகழ்மிக்க சுந்தரமாற பாண்டியனது மாளிகைகள் எதுவுங் காணப்படவில்லை. எனினும் அவனது புகழுக்கு கோயில் பெருமதில் சாட்சி பகர்கின்றது. இதனைக் கண்ணுற்ற அருணகிரிநாதர்

“துங்க கஜராணி யத்தி லுத்தம
சம்பு தடாக மடுத்த தட்சிண
சுந்தரமாறன் மதிற்புறத்துறை பெருமானே”

என்று திருப்புகழில் பாடியுள்ளார். காஞ்சியில் சிற்பக் களஞ்சியமாக விளங்கும் கைலாசநாதர் ஆலயம் பல்லவ மன்னர்களின் அரிய சிருஷ்டியாகும். இவ்வனைத்தும் கலைக் கருவூலங்களாகவும், சமயப் பொக்கிசங்களாகவும் போற்றிக் காப்பாற்றப்படுகின்றன. இம்மன்னர்கள் நினைத்திருந்தால் அரச மாளிகையைக் கட்டியிருக்கலாம். எனினும் அரச மாளிகைகளிலும் பார்க்க கடவுளருக்குக் கூடகோபுரங்களைக் கொண்ட கோயில்களைக் கட்டியெழுப்பிக் கடவுள் பக்தியைப் பரப்புவதுதான் சிறந்ததென கொண்டார்கள். அக்கலைப் பண்பாட்டின் அடிப்படையில் வந்த தமிழ் மக்கள் அரசபரம்பரையோடு கோயிலைப் புதுப்பித்து மகாகும்பாபிஷேகம் செய்விப்பது பெருமைக்குரியது. வானளாவிய கோபுரங்களைக் கொண்ட பெருங் கோயிலைக் கட்டுவித்ததோடு செம்பிலும், கருங்கல்லிலும் திருவுருவங்களையும் சிற்பங்களையும் தாபித்தும் திருப்திகாணாத அபரிதமான பக்திகொண்ட ராஜ ராஜ மாமன்னன் பொன்னிலும், வைரத்திலும் மலர்களைத் தயாரித்து சிவன் பாதத்தில் மலர்போலிட்டு வணங்கித் துதித்து சிவபாதசேகரன் என்னும் பெயர் பெற்றான். இந்தப் பெரிய தத்துவத்தை உணர்ந்த பரராசசேகரப் பிள்ளையாரது பக்தகோடிகள் தங்கள் மனநிறைவைப் பூர்த்திசெய்யத் தங்கள் ஆசைக்கும் மேலான இப்புண்ணிய சேத்திரத்தை அணிபெறச் செய்துள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயில் பூர்வீகம்

ஒருகாலத்தில் உன்னத நிலையிலிருந்த புண்ணியப் பிரதேசங்கள் சிதைவுற்றும் நிலைகுலைந்தபோதும், மீண்டும் இன்னொரு காலத்தில் அதேநிலையில் அல்லது விஞ்சி நிற்கும் தானத்தை அடைதல் கால நியதியாக உள்ளது. இதற்கேற்ப அக்காலத்தில் போர்த்துக்கேயரால் தாக்கப்பட்ட பாரிய ஆலயங்கள் மீண்டும் முன்னின்ற நிலையை அடைந்திருந்ததை இன்றுங் காணலாம். ஈழத்தில் உடுவில் கோவில்பற்றை முற்றுகையிட்ட போர்த்துக்கேயர் இணுவில் என்னும் பூர்வீக கிராமத்து பரராசசேகரப்பிள்ளையார் கோயிலையும் நிலைகுலையச் செய்துள்ளார்கள். அரச பரம்பரையில் பராமரிக்கப்பட்ட இக்கோயிலைப் பாதுகாக்க எண்ணி இத்தலத்தை மடமென்று வாதாடி ஓரளவுக்குப் பாதுகாத்தனர் என்று கர்ணபரம்பரை கூறும். வாயில் பக்கத்தில் மடம் அமைந்திருந்தமையின் இக்கோயிலை மடத்து வாசல் பிள்ளையார் கோயில் என்று தொடர்ந்து வழங்கலாயினர். “எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு” என்ற முதுமொழிக்கேற்ப எதனை ஆராயும்போதும், அதன் தோற்றத்தை காலவரையறை செய்து அறிய முற்படுவது இயல்பு. எனினும் சில விஷயங்கள் வரலாற்றுக்கு அப்பாற்பட்டதாய் மறைபொருளாய் விஞ்ஞானத்தாலும் அதன் அரிய தொடக்கத்தை அறியமுடியாததாயிருக்கிறது. பூர்வீக காலத்தில் மானசீகமாய்ப் பின்னர் மந்திர தந்திரங்களில் குறிப்பொருள்களினாலும் உணர்த்தப்பட்ட விநாயகர் வழிபாடு தமிழகத்தில் பல்லவர் காலத்தில் (கி.பி.630-668) மறுமலர்ச்சி பெற்றுள்ளது,

எந்தெந்த வழிபாடு தமிழகத்தில் முதன்மை பெற்றதோ அதே வழிபாட்டின் மறுமலர்ச்சியை ஈழத்திலும் மிக முக்கியமாக யாழ்ப்பாணத்தில் அதன் பூர்வீக வரலாறு காட்டுகிறது. சமயகுரவர் காலத்தில் மிக முக்கியமாக 7ஆம் நூற்றாண்டு திருஞான சம்பந்தர் காலத்தில் விநாயகர் வழிபாடு மலரும் காலமாக இருந்தது. சோழ குலோத்துங்கனது (1109 - 1118)தளபதியாகிய கருணாகரத் தொண்டமான் இணுவிலில் வைகும்நாளில் வழிபாட்டுக்காகக் கருணாகரப்பிள்ளையார் கோயிலைக் கட்டுவித்தான் என்று யாழ்ப்பாண வரலாறு கூறும். இன்று இக்கோயில் உரும்பிராய் கிராம எல்லைக்குள் இருக்கிறது. இச்சம்பவத்தை உற்று நோக்குமிடத்தும், சுற்றாடலையும், அயல் கிராமங்களையும் பார்க்குமிடத்தும் பிள்ளையார் வழிபாடு பரந்திருந்தது புலனாகின்றது. தொடர்ந்த காலத்தில் அதாவது கி.பிட. 1475இல் சிங்கை பரராசசேகரன் அரசனானபோது நல்லூர் நகர் நாற்றிசையிலும் நான்கு கோயில்கள் கட்டப்பட்டன. கிழக்கே வெயிலுகந்தப் பிள்ளையார் கோயிலும், மேற்கே வீரமாகாளி அம்மன் கோயிலும், வடக்கே சட்டநாதர் கோயிலும், தெற்கே கைலாசநாதர் கோவிலும் தாபிக்கப்பட்டு திருக்குளமும் வெட்டுவிக்கப்பட்டு, யமுனா நதியிலிருந்து தீர்த்தம் எடுப்பிக்கப்பட்டு இக்குளத்தில் ஊற்றுவிக்கப்பட்டு யமுனாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பெயரிட்டுப் புகழ் கொண்டான். இம்மன்னனின் காலத்தில் அரசகேசரி என்பான் இரகுவம்சம் என்னும் வடமொழிக்காவியத்தை தமிழில் இயற்றினான். இவன்தான் நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோயிலையும் கட்டுவித்தான் என்று யாழ்ப்பாண வைபவமாலை கூறும்.

இவை பரராசசேகரன் காலத்துச் சம்பவங்களாகும். இவையனைத்தையும் நோக்குமிடத்து அக்காலத்தில் நீடித்து நிலைத்திருந்த பிள்ளையார் கோவில் பரராசசேகரன் சகாப்தத்தில் அரசனது செல்வாக்கையும் ஆதரவையும் பெற்று அரசனது நாமம் சூட்டப்பட்டிருக்கலாம் என்று கூறி அமைவதில் தவறில்லை. முற்கால சமுதாய அமைப்பில் ஐம்பெருங் குழுவும் எண்பேராயமும் இருந்தாற்போல, கோயில் சேவைக்கென அழைக்கப்பட்டோர்கள், குழுக்களாக அவரவர்களுக்கு குறிச்சிகளில் வாழ்ந்து கோயில் சேவைபுரிந்து வந்தார்கள். இக்குழுக்களின் பரம்பரையில் வந்தவர்கள் இன்று அவ்வத்துறையில் சமர்த்தராக விளங்குகிறார்கள்.

பரராசசேகரப் பிள்ளையார் கோயிலில் மூலமூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் விநாயகப்பெருமானது திருவுருவம் தமிழகத்துச் சிற்ப விற்பன்னர்களால் அமைக்கப்பட்டு இங்கு கொண்டுவரப்பட்டதென்று கூறுவர். அருட்பொலிவோடு அமைந்த திருமுகத்தைக் கொண்ட இத்திருவுருவம் அருள்பாலித்து நிற்கிறது. அக்காலந்தொட்டு, கர்ப்பக்கிருகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த்தியை பக்தியென்னும் உரனும் நீரும் ஊற்றி வழிபாடியற்றி வந்தார்கள். இம்மக்களின் அபரிமிதமான பக்தியில் கட்டுண்ட விநாயகப் பெருமானும் அருள்பாலிக்கலாயினார்.

## விநாயகப் பெருமான் அருள்விளையாடல்

விடியற்காலையில் எழுந்து விநாயகப் பெருமானைத் தொழுது சென்ற அடியார்களும், வணிகர்களும், இளைஞர்களும் பெருநிதியைத் தேடிக்கொண்டார்கள். பெருநோயால் பீடிக்கப்பட்டவர்கள் நோய் நீங்கி தேகாரோக்கியம் பெற்றனர். இப்படிக் கைதூக்கிவிடப் பட்டவர்கள் சும்மா இருக்கவில்லை. தாங்கள் பெற்ற பெரும்பேற்றுக்காக நன்றிக் கடனாகச் சகலவகைகளிலும் எம்பெருமான் சந்நிதியைப் பெருப்பித்து அலங்கரித்துக் கொண்டார்கள். அருட்பிரவாகமாக விளங்கும் கர்ப்பக்கிருகத்தை மாசுபடுத்தா வண்ணம் புனருத்தாரணம் செய்யப்பட்டது. தற்போது இக்கோயில் புனருத்தாரணஞ் செய்யப்பட்டு 06.02.1984இல் மகா கும்பாபிஷேக விழா நடைபெற திருவருள் பாலித்துள்ளது. அந்நாளில் எல்லோரும் பங்குபற்றி எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் அருளைப் பெறுவோமாக.

நன்றி – மஹா கும்பாபிஷேக மலர் – 06.02.1984 ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோயில் – இணுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ISBN 978-624-93707-0-8

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org